# ஈழநாடு வார மலர்

Eelanadu

Email : eelanaduweekly@gmail.com | மலர் : 07 | 22.02.2026 ஞாயிற்றுக்கிழமை | இதழ் : 48 | பக்கங்கள் : 16









# தமிழ் அரசு அரசியற் குழுவின் விவரம் கோருகிறார் சிறீதரன்!

## பதில் தலைவர் சிவஞானத்துக்கு கடிதம்

யாழ்ப்பாணம், பெப்ரவரி. 22





**இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் மத்திய குழுவுக்கு அறிக்கையிடுவதற்காக அமைக்கப்பட்டுள்ள அரசியல் குழுவின் விவரங்களை தனக்கு அனுப்பி வைக்குமாறு அந்தக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், கட்சியின் பதில் தலைவர் சீ.வீ.கே.சிவஞானத்துக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார் என தமிழரசு தலைமை வட்டாரங்களில் இருந்து நம்பகரமாக அறியவருகின்றது.**

அந்தக் கடிதத்தில், அரசியல் குழுவின் வழிகாட்டு விதிகள், ஒழுக்கக் கோவை என்பவற்றின் பிரதிகளை வழங்குமாறும் அவர் கோரியுள்ளார் என தெரியவருகின்றது.

தமிழ் அரசுக் கட்சியின் மத்திய செயற்குழுவுக்கு அறிக்கையிடுவதற்காக அமைக்கப்பட்டுள்ள உப குழுக்களில் ஒன்றான அரசியல் குழுவின் விவரங்கள் குறித்து அறியும் வகையிலேயே

15

## ஐ.நா. கட்டமைப்புடன் இலங்கை ஆக்கபூர்வமாக இணைய தயார்!

### பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திர

கொழும்பு, பெப். 22

பன்முகத்தன்மை கொண்ட ஐ.நாவின் சர்வதேச கட்டமைப்புக்குள் ஆக்கபூர்வமான முறையில் இணைந்து செயற்பட இலங்கை தயாராக இருப்பதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திர தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான ஐக்கிய நாடுகளின் வதிவிட ஒருங்கிணைப்பாளர் மார்க் - ஆண்ட்ரே பிராஜெச், வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலை வாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திரவை நேற்று முன்தினம்

15



## மண்டைதீவில் கிரிக்கெட் வளாகம்; சுற்றுச்சூழல் அனுமதியின்றி பணி!

### சுற்றுச்சூழல் அமைப்புக்கள் எதிர்ப்பு தீவிரம்




கொழும்பு, பெப். 22

யாழ்ப்பாணம் மண்டைதீவுப் பகுதியில் முன்மொழியப்பட்டுள்ள சர்வதேச கிரிக்கெட் மைதானம் மற்றும் விளையாட்டு வளாகத் திட்டத்துக்கு எதிராக சுற்றுச்சூழல் அமைப்புக்கள் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளன.

வனவிலங்கு மற்றும் இயற்கை பாதுகாப்பு சங்கம்

15

## புங்குடுதீவில் ஒருவர் படுகொலை; மற்றுமொரு சந்தேக நபரும் கைது!


யாழ்ப்பாணம், பெப். 22

புங்குடுதீவில் கடந்த 2025 ஒகஸ்ட் மாதம் தனியார் பஸ் உரிமையாளர் அகிலன் என்பவரை கொடூரமாக வெட்டிக் கொலை செய்த குற்றச்சாட்டில் இரண்டாவது சந்தேகநபர் நேற்று ஊர்காவற்றுறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த கொலைக் கும்பலின் பிரதான சந்தேக நபரான அனலைதீவை சேர்ந்த நபர் கடந்த செப்ரெம்பர் 14 ஆம் திகதியன்று முல்லைத்தீவு மாவட்டத்தில் காட்டு பகுதியொன்றில் வைத்து கைது செய்யப்பட்டார்.

15

## தமிழர் அபிலாஷைகளை நிறைவேற்றாமல் அரசால் ஒருபோதும் நிலைத்திருக்கமுடியாது



### கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கருத்து

கொழும்பு, பெப். 22

தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை நிறைவேற்றாமல் அரசாங்கத்தால் ஒருபோதும் நிலைத்திருக்க முடியாது என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இலங்கை ஒரு கேந்திர முக்கியத்துவம்

15

## அரசு மீது மக்கள் அதீத நம்பிக்கை!

கொழும்பு, பெப். 22

மாகாண சபைத் தேர்தலின்போது தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் மீது மக்கள் வைத்துள்ள நம்பிக்கை நிச்சயம் வெளிப்படும் என்பது உறுதி என்று பிரதி வெளிவிவகார அமைச்சர் அருண் ஹேமச்சந்திரா

15

## சர்வதேச சட்ட விதிகளுக்கு மாறாக ரணிலுக்கு எதிரான விசாரணைகள்!

### ஐக்கிய தேசியக் கட்சி குற்றச்சாட்டு

கொழும்பு, பெப். 22

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான விசாரணைகள் முறையான சர்வதேச சட்ட விதிகளுக்கு உட்பட்டு நடக்கவில்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் சட்டத்தரணிகள் சங்கத்தின் துணைச் செயலாளர் தினேஷ் விதானபத்திரன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

15

## மாகாண தேர்தலை தாமதிக்காது இந்த வருடமே நடத்தவேண்டும்!

### ஹரின் பெர்னாண்டோ வலியுறுத்து

கொழும்பு, பெப். 22

மாகாண சபைத் தேர்தலை எந்த முறைமையின் கீழ் நடத்துவது என்பது குறித்து ஆராய்வதற்கு, விசேட பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் ஊடாக அரசு மேலும் காலத்தை இழுத்தடிக்கக்கூடாது என ஐக்கிய தேசியக் கட்சியின் உப செயலாளரும் முன்னாள் அமைச்சருமான ஹரின் பெர்னாண்டோ வலியுறுத்தினார்.

மாகாண சபைத் தேர்தலை தாமதிக்காமல் இவ்வருடமே நடத்துவதற்கு அரசு முன்னுரிமை

15

## அரச வைத்தியசாலைகளில் தொடரும் மருந்து தட்டுப்பாடு

கொழும்பு, பெப். 22

மருந்துகள் கையிருப்பில் உள்ளதாக சுகாதார அமைச்சு உறுதியளித்துள்ளபோதிலும், அரச மருத்துவமனைகளில் அத்தியாவசிய மருந்துகளுக்கான தட்டுப்பாடு தொடர்வதாக மருத்துவ சங்கங்கள் தெரிவிக்கின்றன.

நுண்ணுயிர் எதிர்ப்பிகள், வலி நிவாரணிகள் மற்றும் நீண்டகால நோய்களுக்கான மருந்துகள் போதியளவு இல்லாமலோ அல்லது மிகக் குறைந்த அளவிலோ இருப்பதாகத் தெரிவிக்கப்படுவதாக கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

15

## புலிகள் அமைப்பின் சிந்தனையுடன் ஒத்துள்ளது அநுர அரசின் கொள்கை

### குற்றம் சாட்டுகிறார் நாமல் ராஜபக்ஷ



கொழும்பு, பெப். 22

தற்போதைய அரசின் கொள்கை விடுதலைப்புலிகள் அமைப்பின் சிந்தனையுடன் ஒத்ததாக இருப்பதாக பொது ஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ

15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# இந்தியாவால் வடக்கு மாகாணத்தில் மிகப்பெரிய அபிவிருத்தி திட்டங்கள்

## ஆளுநர் வேதநாயகன் நன்றி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப். 22

இந்திய அரசாங்கத்தின் நிதியுதவியுடன் வடக்கு மாகாணத்தில் மிகப்பெரிய அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ள நிலையில், அதற்காக இந்திய அரசாங்கத்துக்கும் மக்களுக்கும் வடக்கு மாகாண மக்கள் சார்பில் ஆளுநர் நா. வேதநாயகன் நன்றிகளை தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாணத்துக்கு பயணம் மேற்கொண்டுள்ள இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகராலயத்தின் பிரதி உயர்ஸ்தானிகர் சத்யஞ்சல் பாண்டே மற்றும் யாழ். இந்தியத் துணைத்தூதுவர் சாய்முரளி ஆகியோர், வடக்கு மாகாண ஆளுநரை நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை ஆளுநர் செயலகத்தில் சந்தித்து கலந்துரையாடினர்.



இந்தச் சந்திப்பின்போது, இந்திய அரசாங்கத்தின் நிதியுதவியுடன் வடக்கு மாகாணத்தில் முன்னெடுக்கப்படவுள்ள செயல்திட்டங்கள் குறித்து விரிவாக ஆராயப்பட்டன. குறிப்பாக, மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனைகளின் அபிவிருத்தி மற்றும் காரைநகர் படகு தள அபிவிருத்தி உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் ஆளுநருடன் பிரதி உயர்ஸ்தானிகர் கலந்துரையாடினார்.

அண்மையில் ஏற்பட்ட டித்வா பேரிடரின் பின்னரான உதவித் திட்டங்கள் குறித்தும், இந்தியாவின் 'அயலவருக்கு முன்னுரிமை' என்ற கொள்கையின் அடிப்படையிலான முன்னுரிமைகள் தொடர்பிலும் பிரதி உயர்ஸ்தானிகர் ஆளுநருக்கு தெளிவுபடுத்தினார். அத்துடன், கடன்களாக வழங்கப்பட்ட சில உதவித் திட்டங்கள் தற்போது நன்கொடைகளாக மாற்றப்பட்டுள்ளமையையும் அவர் சுட்டிக்காட்டினார்.

டித்வா பேரிடரின்போது இந்திய அரசாங்கம் வழங்கிய உடனடி உதவிகளுக்கு நன்றி தெரிவித்த ஆளுநர், இந்தியாவின் தொடர்ச்சியான பங்களிப்புகளை பாராட்டினார். (எ)

# கல்வி சீர்திருத்தம் குறித்து யாழில் கலந்துரையாடல்



யாழ்ப்பாணம், பெப். 22

கல்விச் சீர்திருத்தத்துக்கான தேசிய இயக்கத்தின் ஏற்பாட்டில் 'கல்விச் சீர்திருத்த கலந்துரையாடல்' யாழ்ப்பாணம் வை.எம்.சீ.ஏ. மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில், அமைச்சர் கலாநிதி அநுர கருணாதிலக, பாராளுமன்ற உறுப்பினர் ஜெயச்சந்திரமூர்த்தி ரஜீவன், இலங்கை திறந்த பல்கலைக்கழக சட்டக்கற்கைகள் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ஜனகா செல்வராஜா, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மொழியியல் மற்றும் ஆங்கிலத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் விமல் சுவாமிநாதன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் சிரேஷ்ட விரிவுரையாளர் சுந்தரமூர்த்தி கபிலன் ஆகியோர் கலந்து கொண்டனர்.(எ)

# போதைப்பொருள் ஒழிப்பு: ஒரே நாளில் 584 பேர் கைது

கொழும்பு, பெப். 22

பொலிஸ் மா அதிபரின் அறிவுறுத்தலின் பேரில், குற்றங்கள் மற்றும் போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்கும் நோக்கில் நாடளாவிய ரீதியில் விசேட பொலிஸ் சோதனைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அனைத்து மாவட்ட மட்டங்களிலும், பிரதேச மற்றும் பொலிஸ் நிலையங்கள் ஊடாக இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இதன்படி, நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பதிவு செய்யப்பட்ட தரவுகளின்படி, 29,165 பேர் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

இதேநேரம், சந்தேகத்தின் பேரில் 584 பேர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், குற்றங்களுடன் நேரடியாக தொடர்புடைய 18 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மேலும், கைது செய்ய பிறப்பிக்கப்பட்ட பிடியாணைகளுக்கமைய 249 பேரும், திறந்த பிடியாணைகளுக்கமைய 130 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மதுபோதையில் வாகனம் செலுத்தியமைக்காக 286 பேர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், கவனக்குறைவாக வாகனம் செலுத்தியமைக்காக 57 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 40 ஆவது பொதுப்பட்டமளிப்பு விழா மூன்றாம் நாள் அமர்வுகள் நேற்று சனிக்கிழமை நடைபெற்றன.

# அபிவிருத்தி திட்டங்கள் குறித்து யாழில் விசேட கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், பெப். 22

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தவுள்ள அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான விசேட கலந்துரையாடல் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நேற்று முன்தினம் அரசாங்க அதிபர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் 2026 ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தவுள்ள பன்முகப்படுத்தப்பட்ட வரவு- செலவுத் திட்டம், பிரஜாசக்தி உள்ளிட்ட திட்டங்கள் தொடர்பில் பிரதேச செயலாளர்களுடன் அரசாங்க அதிபர் கலந்துரையாடினார்.

இதில், மேலதிக அரசாங்க அதிபர் கே. சிவகரன், பிரதம கணக்காளர் எஸ். கிருபாகரன், திட்டமிடல் பணிப்பாளர் இ. சுரேந்திரநாதன், உதவி மாவட்ட செயலாளர் உ. தர்சினி, பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் எஸ். சிவகுமாரன் உள்ளிட்ட பதவிநிலை உத்தியோகத்தர்கள் மற்றும் திட்டமிடல் உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

# முதியோர் இல்லங்களை பதிவு செய்ய நடவடிக்கை

யாழ்ப்பாணம், பெப். 22

முதியோர்களுக்கான தேசிய செயலகத்தின் கீழ் பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் முதியோர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர்களுக்கான மாதாந்த முன்னேற்ற கலந்துரையாடல் யாழ்ப்பாணம் மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நேற்று முன்தினம் அரசாங்க அதிபர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இதன்போது, கடந்த வருடம் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் முதியோர் சேவைகள் தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் 2026 ஆம் ஆண்டில் முன்னெடுக்கப்படவுள்ள திட்டங்கள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டன.

இதேவேளை, யாழ். மாவட்டத்தில் பதிவு செய்யாது இயங்கி வரும் முதியோர் இல்லங்கள் அனைத்தையும் பதிவு செய்வதற்கான விண்ணப்ப படிவத்துடன் உரிய ஆவணங்களை இணைத்து பிரதேச செயலாளரின் சிபாரிசுடன் எதிர்வரும் மார்ச் மாதம் 30ஆம் திகதிக்கு முன்னர் மாவட்ட செயலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும் என்று அரசாங்க அதிபரால் அறிவுறுத்தப்பட்டது. (எ)

# ஊழல் ஒழிப்பு நீதிமன்றம் செயலிழக்கவில்லை

கொழும்பு, பெப். 22

ஊழல் ஒழிப்பு மூவரடங்கிய நிரந்தர நீதாய மேல் நீதிமன்ற வழக்கு நடவடிக்கைகளை ஆரம்பித்தல் மற்றும் நடத்திச் செல்லல் செயலிழந்துள்ளது என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. இலங்கை பொலிஸின் நிதிக் குற்றவியல் விசாரணைப் பிரிவை நிறுவுவதற்கும், ஊழல் மோசடி வழக்குகளை தாக்கல் செய்வதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை உரையாற்றும்போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (எ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதாள உலக செயல்பாடுகளுக்கு நாம் ஒருபோதும் உதவுவதில்லை



## எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ

கொழும்பு, பெப். 22

எமது கட்சி ஒருபோதும் பாதாள உலக செயல்பாடுகளுக்கு உதவுவதும் இல்லை. அதனை மேம்படுத்துவதும் இல்லை. கொலை, கொள்ளை, மோசடி இவை எதனையும் நாங்கள் அனுமதிப்பதில்லை என்று எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியை சேர்ந்த யாராவது பாதாள செயல்பாடுகள் மற்றும் போதைப்பொருள் வியாபார நடவடிக்கைகளுடன் சம்பந்தப்பட்டிருப்பதாக சாட்சிகள் இருக்குமானால் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுங்கள். அதற்கு நாங்கள் பூரண ஆதரவு வழங்கத் தயாராக இருக்கிறோம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் கூறுகையில்,

பாதாள உலக நடவடிக்கைகளில் சம்பந்தப்பட்டிருப்பவர்கள் இருப்பதாக இருந்தால், ஒரு நிமிடம் கூட கடத்தாமல் அவர்களை கைது செய்து சட்டத்துக்கு முன்நிறுத்துமாறு பொலிஸ்மா அதிபருக்கு உத்தரவிடுமாறு கேட்டுக்கொள்கிறேன். அவர்களுக்கு எதிராக நீதியை நிலைநாட்டும் அந்த செயல்பாடுகளுக்கு நான் உதவி செய்யத் தயாராக இருக்கிறேன் - என்றார். (எ)

# வாகன இறக்குமதி அனுமதி பத்திரங்களை விற்பனை செய்து கட்சிக்கு பணம் வைப்பு

## அரச தரப்பு மீது எதிர்க்கட்சி குற்றச்சாட்டு


கொழும்பு, பெப். 22

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க, சபை முதல்வர் பிமல் ரத்நாயக்க மற்றும் ஆளுங்கட்சியின் பிரதம கொறடாவான நளிந்த ஜயதிஸ்ஸ ஆகியோர் கடந்த காலங்களில் வாகன இறக்குமதி அனுமதிப் பத்திரத்தை பெற்றுக்கொண்டுள்ளார்கள். அவற்றை விற்பனை செய்து அந்த நிதியை கட்சியின் நிதியத்தில் வைப்பிலிட்டுள்ளார்கள் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ். எம். மரிக்கார் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற "வலுசக்தி துறையில் காணப்படும் பிரச்னைகள்" தொடர்பான சபை ஒத்திவைப்பு பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

மக்கள் விடுதலை முன்னணியின் பெரும்பாலான உறுப்பினர்கள் கடந்த காலங்களில் வாகன இறக்குமதி பத்திரத்தை பெற்றுக்கொண்டு அவற்றை விற்பனை செய்து அந்த நிதியை கட்சியின் நிதியத்துக்கு செலுத்தினார்கள்.



கடந்த காலங்களில் சகல சிறப்பு சலுகைகளையும் பெற்றுவிட்டு இன்று இவர்கள் தூய்மையானவர்களை போன்று பேசுகிறார்கள். நாங்கள் தூய்மையானவர்கள், ஊழல் மோசடியில்லை. உண்மையை மட்டும் பேசுபோம்.

என்று குறிப்பிட்டவர்களின் சுயரூபம் நாளாந்தம் வெளிவருகிறது.- என்றார். (எ)

# ஊழல்- மோசடி குற்றச்சாட்டு சபையில் கடும் வாக்குவாதம்

கொழும்பு, பெப். 22

வலு சக்தி அமைச்சர் குமார ஜயக்கொடி முன்னர் செய்த தொழிலில் அவருக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள ஊழல் - மோசடி குற்றச்சாட்டு தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர் அஜித் பி பெரேரா முன்வைத்த கருத்துக்களால் அவர்கள் இருவருக்கும் இடையே சபையில் கடும் வாக்குவாதம் ஏற்பட்டது.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் அஜித் பி பெரேரா உரையாற்றுகையிலேயே இருவருக்கும் இடையே கடும் வாக்குவாதம் ஏற்பட்டது.

விவாதத்தில் அஜித் பி பெரேரா எம்.பி. கூறுகையில்,

குமார ஜயக்கொடி அமைச்சரே! நீங்கள் வலு சக்தி அமைச்சராக நியமிக்கப்படும் போது, முன்னர் வகித்த தொழிலில் இருந்து நீங்கள் பணி நீக்கம் செய்யப்பட்டிருந்தீர்கள். கேள்வி மனுக்கோரல் மோசடி தொடர்பான குற்றச்சாட்டிலேயே நீங்கள் பணி நீக்கம் செய்யப்பட்டீர்கள். உங்களுக்கு தொழில் இல்லாமல் போனதுடன் அது தொடர்பில் நீங்கள் வழக்குத் தொடர்ந்ததுடன், அதில் நீங்கள் குற்றவாளியாகினீர்கள். அத்துடன் இலஞ்ச - ஊழல் விசாரணை ஆணைக்குழுவில் முறைப்பாடொன்று இருக்கின்றது. ஆனால், ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க இவை அனைத்தையும் தெரிந்து கொண்டு நீண்ட காலம் தம்முடன் வேலை செய்த தனது நெருக்கமான நண்பன் மீது நம்பிக்கை வைத்து, இந்த நாட்டின் பொருளாதாரத்தில் மூன்றில் ஒரு பங்கு பொறுப்பை கொண்ட வலு சக்தி அமைச்சராக நியமித்துள்ளார் - என்றார்.

இதன்போது, ஒழுங்கு பிரச்னையை முன்வைத்து பதிலளித்த அமைச்சர் குமார ஜயக்கொடி கூறுகையில், பொய்களை சமூக மயப்படுத்தும் பிக்காசோக்களே எதிர்க்கட்சியில் இருக்கின்றனர். முடிந்தால் நீங்கள் கூறுவதை நிரூபியுங்கள். நான் அந்த நிறுவனத்தில் பணியில் இருந்து விலகினேன். எவருக்கும் குற்றச்சாட்டுகளை முன்வைக்க முடியும். ஆனால், அதனை நிரூபித்து காட்டுங்கள் - என்றார். (எ)

# திருப்பந்துறை பகுதியில் யானைகள் அட்டகாசம்

மட்டக்களப்பு, பெப். 22

மட்டக்களப்பு, மாந்தீவுக்குள் புகுந்துள்ள 6 யானைகள் நேற்று முன்தினம் இரவு 7 மணியளவில் திருப்பந்துறை பிரதேசத்துக்குள் நுழைந்து அட்டகாசம் புரிந்துள்ளன.

மூன்று நாட்களாக தொடர்ந்து யானைகள் வந்து நெற்பயிர்கள் மற்றும் பயிர்களை நாசம் செய்வதாக பொதுமக்கள் கூறினர்.

யானை - மனித மோதலுக்கு நிரந்தரத் தீர்வு எட்டப்படவில்லை எனவும், தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் காட்டு யானைகளை விரட்டும் நடவடிக்கையும் தோல்வியடைந்துள்ளது.

இதேவேளை, வனஜீவராசிகள் திணைக்களமும் அப்பகுதியைச் சேர்ந்த பொதுமக்களும் குறித்த யானைகளை அப்பகுதிகளிலிருந்து வெளியேற்ற நடவடிக்கைகளை முன்னெடுத்தனர். (எ)

# ஜனாதிபதியும் பிரதமரும் வடக்கில் வெறுப்புணர்வை தூண்டுகின்றனர்!

## நிரோஷன் பாதுக்க குற்றச்சாட்டு

கொழும்பு, பெப். 22

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மற்றும் பிரதமர் ஹரிணி அமரசூரிய ஆகியோர் வடக்குக்குச் சென்று வெறுப்புணர்வைத் தூண்டுவதன் மூலம் நாட்டை மீண்டும் எரிக்க முயற்சிப்பதாக ஊழல் எதிர்ப்புப் படையணியின் ஒருங்கிணைப்பாளர் நிரோஷன் பாதுக்க குற்றம் சாட்டினார்.

கடந்த கால பயங்கரவாத நிகழ்வுகள் குறித்துப் புரிதல் இன்றி அரசாங்கம் செயற்படுவதாகவும், வடக்கு - தெற்கு மக்களை இணைப்பதற்குப் பதிலாக அவர்களைப் பிரிக்கும் அரசியல் நிகழ்ச்சி நிரலை முன்னெடுப்பதாகவும் அவர் கூறினார்.

பௌத்த சாசனத்தை அழிவை நோக்கிக் கொண்டு



செல்லும் அரசாங்கத்தின் முயற்சியை மகா சங்கத்தினர் புரிந்துகொண்டுள்ளதாகவும், அரசியலமைப்பின் படி அனைத்து மதங்களையும் சமமாக நடத்தவேண்டிய பொறுப்பு அரசாங்கத்துக்கு இருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அரசாங்கத்தின் மீதான மக்கள் ஆதரவு 65 வீதம் எனில், உடனடியாக மாகாண சபைத் தேர்தலை நடத்துமாறு சவால் விடுத்த அவர், அந்தத் தேர்தலில் அரசாங்கம் விதைக்கும் வெறுப்புக்கு மக்கள் பதிலளிப்பார்கள் எனவும் குறிப்பிட்டார். (அ)

# 15 அடி பள்ளத்தில் வீழ்ந்த லொறி!

நுவரெலியா, பெப். 22

ஹற்றனில் இருந்து கொழும்பு நோக்கிச் சென்ற லொறி ஒன்று நேற்று அதிகாலை 02. 30 மணியளவில் வட்டவளை பகுதியில் சுமார் 15 அடி ஆழமான பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளானது. எதிரே வந்த வாகனத்துக்கு இடமளிக்க முயன்றபோது, லொறியின் வேகத்தை கட்டுப்படுத்த முடியாமல் போனதே இந்த விபத்துக்குக் காரணம் என்று ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்த விபத்தில் லொறி கடுமையாக சேதமடைந்ததுடன், அதன் சாரதி வாகனத்தினுள்ளேயே சிக்கிக்கொண்டார். அவரை மீட்பதற்காக வட்டவளை பொலிஸாரும், பிரதேச மக்களும் இணைந்து சுமார் ஒன்றரை மணிநேரம் கடும் முயற்சியில் ஈடுபட்டனர். விபத்து இடம் பெற்ற சமயம் லொறியில் சாரதியும் அவரது உதவியாளரும் மட்டுமே இருந்ததாக தெரியவருகிறது.

(எ)

# புனித தலத்துக்கான வீதி நீரில் மூழ்கியது

## வாகன போக்குவரத்துக்கு தடை

கொழும்பு, பெப். 22

பொலநறுவை - சோமாவதிய, சுங்காவில வீதி நீரில் மூழ்கியுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் பொலநறுவை மாவட்ட உதவிப் பணிப்பாளர் தெரிவித்தார்.

நேற்றுச் சனிக்கிழமை காலை 09. 15 மணி நிலவரப்படி, சுங்காவிலவிலிருந்து சோமாவதிய புனித தலத்துக்குச் செல்லும் வீதியில் சுமார் ஒரு அடி நீரில் மூழ்கியுள்ளது.

இதனால், குறித்த வீதியினூடாக வாகனங்கள் செல்வதற்கு தற்காலிக தடை விதிக்கப்பட்டுள்ளது.

(எ)

# தங்கம் விலை அதிகரிப்பு

கொழும்பு, பெப். 22

தங்கம் விலையில் சுமார் 4,000 ரூபாய் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. இதன்படி, நேற்று முற்பகல் கொழும்பு செட்டியார் தங்க சந்தையில் "22 கரட்" தங்கப் பவுண் ஒன்றின் விலை 366, 300 ரூபாயாக அதிகரித்துள்ளது. நேற்று முன்தினம் இதன் விலை 362,600 ரூபாயாக காணப்பட்டது.

இதேவேளை, வெள்ளிக்கிழமை 392, 000 ரூபாயாக காணப்பட்ட "24 கரட்" தங்கப் பவுண் ஒன்றின் விலை நேற்று 396, 000 ரூபாயாக அதிகரித்துள்ளது என்று கொழும்பு செட்டியார் தெரு தங்க சந்தை வட்டாரங்கள் தெரிவித்தன.(எ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கார் மோதி விபத்து: 3 வயது குழந்தை பலி!

### சாரதி பொலிஸாரால் கைது

கொழும்பு, பெப். 22

பெருந்து ஒன்றை முந்திச் செல்ல முயன்ற கார், எதிரே வந்த மோட்டார் சைக்கிளுடன் மோதி இடம்பெற்ற விபத்தில் 3 வயது குழந்தை உயிரிழந்தது.

இந்த விபத்து நேற்று முந்தினம் மதியம் ஏத்கால பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கம்பளை - நாவலப்பிட்டி வீதியின் நாகொல்ல பகுதியில் இடம் பெற்றுள்ளது.

விபத்தில் மோட்டார் சைக்கிளை ஓட்டிச் சென்ற பெண் மற்றும் இரு பிள்ளைகள் காயமடைந்து கம்பளை மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டதன் பின்னர், குழந்தை சிகிச்சை பலனின்றி உயிரிழந்தது.

விபத்து தொடர்பில் கார் சாரதி கைது செய்யப்பட்டார். ஏத்கால பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (எ)

# கொள்கலன் விடுவிப்பில் தாமதம்: துறைமுக பகுதியில் கடும் நெரிசல்

கொழும்பு, பெப். 22

கொள்கலன் விடுவிப்பு நடவடிக்கைகளில் ஏற்பட்டுள்ள தாமதம் காரணமாக மீண்டும் கொள்கலன் நெரிசல் ஏற்பட்டுள்ளது.

கொள்கலன்களை விடுவிப்பதற்கான வினைத்திறனான முறைமை இல்லாமை உள்ளிட்ட விடயங்கள் இதற்கு காரணமாக அமைந்துள்ளதாக கொள்கலன் போக்குவரத்து வாகன உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் சனத் மஞ்சுள சுட்டிக்காட்டியுள்ளார்.

கொழும்பு துறைமுக வளாகத்தில் இறக்குமதி செய்யப்பட்ட கொள்கலன்களை வெளியேற்றுவதிலும், அவற்றை துறைமுகத்துக்கு வெளியே யுள்ள முனையங்களில் பரிசோதிப்பதிலும் இவ்வாறு பாரிய தாமதம் ஏற்பட்டுள்ளது.

அத்துடன், ஒருகொடவத்தை கொள்கலன் வளாகத்திலும் நெரிசல் ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக கொள்கலன் ஊர்தி சாரதிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர். (எ)

# இரு மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை

கொழும்பு, பெப். 22

இரண்டு மாவட்டங்களுக்காக விடுக்கப்பட்டிருந்த மண்சரிவு எச்சரிக்கை அறிவிப்பை தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் இற்றைப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த எச்சரிக்கை அறிவிப்பு நேற்றுக் காலை 08.00 மணி முதல் இன்று காலை 08. 00 மணி வரை அமுலில் இருக்கும் என்று அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய, நுவரெலியா மாவட்டத்தின் நில்தண்டாஹின்ன மற்றும் வலப்பனை ஆகிய பிரதேச செயலக பிரிவுகளுக்கு அவதானத்துடன் இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் நுவரெலியா மாவட்டத்தின் மதுரட்ட, ஹங்குரன்கெத்த மற்றும் பதுளை மாவட்டத்தின் மீகஹகிவுல, கந்தகெட்டிய ஆகிய பிரதேச செயலக பிரிவுகளுக்கு விழிப்புடன் இருக்குமாறும் தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் அறிவித்துள்ளது. (எ)

# வடக்கு- கிழக்கு மாகாணங்களில் மழை நிலைமை அதிகரிக்க கூடும்

கொழும்பு, பெப். 22

வடக்கு- கிழக்கு உட்பட நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடிய சாதகமான வளிமண்டல நிலைமைகள் காணப்படுவதுடன், மழை நிலைமை அதிகரிக்க கூடும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

வடக்கு, வடமத்திய, கிழக்கு, ஊவா மற்றும் மத்திய மாகாணங்களிலும் அம்பாந்தோட்டை மாவட்டத்திலும் அவ்வப்போது மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என்று அந்த திணைக்களம் வெளியிட்டுள்ள வானிலை முன்னறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஏனைய பிரதேசங்களில் பிற்பகல் ஒரு மணிக்குப் பின்னர் ஆங்காங்கே மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்.

மத்திய, ஊவா, சப்ரகமுவ மாகாணங்களிலும் மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் பொலநறுவை மாவட்டங்களிலும் சில இடங்களில் 100 மில்லி மீற்றருக்கும் அதிகமான பலத்த மழை பெய்யக்கூடும்.

ஏனைய பிரதேசங்களில் சில இடங்களில் 75 மில்லி மீற்றருக்கும் அதிகமான ஓரளவு பலத்த மழை பெய்யக்கூடும்.

மத்திய மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் காலி, மாத்தறை மற்றும் களுத்துறை மாவட்டங்களிலும் சில இடங்களில் அதிகாலை வேளையில் பனிமூட்டம் நிலவக்கூடும்.

இடியுடன் கூடிய மழையின் போது ஏற்படக்கூடிய தற்காலிக பலத்த காற்று மற்றும் மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக் கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வளிமண்டலவியல் திணைக்களம் பொது மக்களை அறிவுறுத்தியுள்ளது.

# ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளிகளின் சொத்துக்கள் அரசுடமையாக்கப்படும்!


### 10 பேரின் சொத்துக்கள் முடக்கம்- பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர்

கொழும்பு, பெப். 22

2024. 09. 21 ஆம் திகதி முதல் முதல் 2026. 01. 26 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் போதைப்பொருட்கள் மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட செயல்களில் ஈடுபட்டவர்களில் 10 பேரின் சொத்துக்கள் நீதிமன்றத்தின் உத்தரவுக்கமைய முடக்கப்பட்டு அரசுடமையாக்கப் பட்டுள்ளன. இதில், 'கெஹெல் பத்தர பத்மே' உள்ளிட்ட ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளிகளின் பல சொத்துக்களும் அடங்குவதாக பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகாரங்கள் அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித் தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற அமர்வில் வாய்மூல விடைக்கான வினாக்கள் வேளையின் போது ஆளும் தரப்பின் பாராளுமன்ற உறுப்பினர் ரவீந்திர பண்டார முன்வைத்த கேள்விகளுக்கு பதிலளிக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, 2024.09.21 ஆம் திகதி முதல் 2026.01.26 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் 1468.061 கிலோ கிராம் ஹெரோயின், 5344. 954 கிலோ கிராம் கஞ்சா- கேரள கஞ்சா, 39.369 கிலோ கிராம் கொக்கைன் , 832.319 கிலோ கிராம் ஹஷிஸ்- குஷ், 3022.258 ஐஸ், 6 இலட்சத்து 63, 033 போதை மாத்திரைகள் கைப் பற்றப்பட்டுள்ளன. இக்காலப்பகுதிகளில் போதைப்பொருள் குற்றச்சாட்டில் 5,524 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.



சட்டவிரோதமான முறையில் ஈட்டப்பட்ட சொத்துக்கள் மற்றும் ஆதனங்களை நீதிமன்றத்தின் ஊடாக முடக்குவதற்கு பிரத்தியேக சட்டம் இயற்றப்பட்டுள்ளது. இதற்கமைய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன- என்றார். (எ)

### ரூ. 8 இலட்சம் பெறுமதியான

# ஐஸ் போதைப்பொருளுடன் சந்தேகநபர் ஒருவர் கைது

கொழும்பு, பெப். 22

கல்கிஸ்ஸை, சொய்சாபுர பகுதியில் 8 இலட்சம் ரூபாய்க்கும் அதிக பெறுமதியுடைய ஐஸ் போதைப்பொருளை மோட்டார் சைக்கிளில் கடத்திச் சென்ற ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு, கைது செய்யப்பட்ட சந்தேகநபரிடமிருந்து 50 கிராம் ஐஸ் போதைப்பொருள் மற்றும் போதைப்பொருள் வியாபாரம் மூலம் ஈட்டப்பட்டதாக சந்தேகிக்கப்படும் 44, 000 ரூபாய் பணம் என்பன பொலிஸ் பொறுப்பில் எடுக்கப்பட்டுள்ளன.

சந்தேகநபரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் போது, தற்போது வெளிநாட்டில் வசிக்கும் பாரியளவிலான போதைப்பொருள் கடத்தல்காரராகக் கருதப்படும் கதாரக தேவப்பிரிய பீரிஸ் என்பவரின் மைத்துனர் இவரென்பது தெரியவந்துள்ளது. (எ)

# மின்சாரம் மற்றும் எரிபொருள் நெருக்கடி மீண்டும் வரக்கூடாது

### நீண்டகால திட்டம் வகுக்கப்பட வேண்டும்

கொழும்பு, பெப். 22

மின்சாரம் மற்றும் எரிபொருள் தட்டுப்பாட்டினால் 2021 மற்றும் 2022ஆம் ஆண்டுகளில் நாட்டில் ஏற்பட்ட நிலைமை மீண்டும் ஏற்படக்கூடாது. மின்சாரம் மற்றும் எரிபொருள் தொடர்பில் அரசாங்கம் முறையான வேலைத்திட்டங்களை முன்னெடுக்க வேண்டும் என்று இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற 'வலுசக்தி துறையில் காணப்படும் பிரச்னைகள்' தொடர்பான சபை ஒத்திவைப்பு பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, இந்த வருடத்தின் இரண்டாவது காலாண்டில் மின் கட்டணத்தை 13. 8 வீதத்தால் அதிகரிப்பதற்காக மின்சார சபையால் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

இந்த சுமையானது அடிமட்ட மக்களிடையே சுமத்தப்படும்.

வறுமைக் கோட்டில் இருக்கும் மக்கள் மிகவும் பாதிக்கப்படும் நிலை ஏற்படலாம்.

2021 மற்றும் 2022 காலங்களில் நாட்டில் மின்சாரம் மற்றும் எரிபொருள் காரணமாக ஏற்பட்ட பொருளாதார குழப்பங்களால் நாடு மிகவும் பின்தங்கும் நிலைக்குத் தள்ளப்பட்டது. மீண்டும் இதுபோன்ற நிலைமை ஏற்படக்கூடாது.

இந்த நிலையில், தரமற்ற நிலக்கரி இறக்குமதியால் மின்சார சபைக்கு 5 பில்லியன் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டுள்ளது. இந்த நஷ்டம் ஏழை மக்கள் தலையிலேயே சுமத்தப்படும்.

தரமற்ற நிலக்கரி இறக்குமதி செய்வதனாலும் ஏனைய விடயங்களாலும் பாதிக்கப்படுவது எமது மக்களே.

இதனால், சரியான பொறிமுறையில் நிலக்கரி இறக்குமதியை செய்ய வேண்டும் என்று வலியுறுத்து கின்றோம்.- என்றார். (எ)

# அதிவேக நெடுஞ்சாலை நுழைவாயிலில் விசேட சோதனை

கொழும்பு, பெப். 22

களுத்துறை, தொடங்கொட நுழைவாயிலின் ஊடாக தெற்கு அதிவேக நெடுஞ்சாலைக்குள் நுழையும் மற்றும் வெளியேறும் வாகனங்கள் நேற்று முன்தினம் இரவு விசேட சோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

திட்டமிடப்பட்ட குற்றங்கள் மற்றும் சட்டவிரோத போதைப்பொருள் கடத்தல்களை குறைக்கும் நோக்கிலேயே இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, குறித்த வாகனங்களில் பயணிக்கும் நபர்கள் தொடர்பிலும் தொடங்கொட பொலிஸார் மற்றும் தெற்கு அதிவேக நெடுஞ்சாலை போக்குவரத்து பிரிவின் பொலிஸ் உத்தியோ கத்தர்களின் ஒத்துழைப்புடன் விசேட கண்காணிப்பு நட வடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டன.(எ)

# ஆயுதத்தால் தாக்கி குடும்பஸ்தர் படுகொலை!

கொழும்பு, பெப். 22

கேகாலை - தெரணியகலை பகுதியில் கூரிய ஆயுதத்தால் தாக்கி குடும்பஸ்தர் ஒருவர் படுகொலை செய்யப்பட்டார்.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை இந்த சம்பவம் பதிவாகியுள்ளதாக தெரணி யகலை பொலிஸார் தெரிவித் தனர்.

இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தவர் தெரணியகலை - மாலிபொட பகுதியைச் சேர்ந்த 32 வயதுடையவர் என தெரி யவந்துள்ளது.

உயிரிழந்தவருக்கும் அவரது உறவினருக்குமான தனிப்பட்ட தகராறு காரணமாக, சந்தேகந பர் இந்த கொலையைச் செய்துள் ளதாக ஆரம்பகட்ட விசாரணை களில் தெரியவந்துள்ளது.

இந்தக் கொலையைச் செய்த சந்தேகநபரை கைது செய்ய, தெரணியகலை பொலி ஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
22.02.2026 ஞாயிற்றுக்கிழமை
விசுவாவசு வருடம், மாசி 10

“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”
– யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

## அரசாங்கத்தின் செல்வாக்கு?

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் செல்வாக்கு அதிகரித்திருப்பதாக ஒரு சுயாதீன கருத்துக் கணிப்பு வெளியாகியிருக்கின்றது. தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் செல்வாக்கு படிப்படியாக குறைவடைந்த செல்கின்றது என்றவாறான எதிரணி அபிப்பிராயங்களின் மத்தியில்தான், இவ்வாறான கணிப்பு வெளியாகியிருக்கின்றது.

உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி பிரதானமாக வெற்றி பெற்ற போதிலும் கூட வாக்குகளின் அடிப்படையில் பின்னடைவை சந்தித்திருந்தது. இவ்வாறானதொரு பின்னணியில் அரசாங்கம் மாகாண சபைத் தேர்தலை நடத்தும் எண்ணமின்றி இருப்பதாக எதிரணியினர் கூற முற்பட்டனர். இவ்வாறானதொரு பின்புலத்தில் புதிய கருத்துக் கணிப்பு அரசாங்கத்தின் செல்வாக்கு அதிகரிப்பதாக கூறுவது முக்கிய மானது.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தை பொறுத்தவரையில் நாட்டின் பொருளாதார நிலைமையை சரி செய்வதில் பின்னவுடைகளை சந்திக்க வில்லை - எதிர்பார்த்ததை விடவும் முன்னோக்கியே செல்கின்றது.

நாடுகளை எதிர்கொள்ளும் வெளிவிவகார அணுகுமுறையிலும் இதுவரையில் பெரியளவில் பின்னடைவுகளை சந்திக்கவில்லை - ஒப்பீட்டடிப்படையில் முன்னைய ஆட்சியாளர்களின் தவறுகளிலிருந்து கற்றுக்கொண்டிருப்பதாகவே தெரிகின்றது.

அதேவேளை ஜனாதிபதி அநுரகுமார மக்களால் விரும்பப்படும் ஒரு தலைவராக இருக்கின்றார். இதுவே தேசிய மக்கள் சக்தியின் மிகப் பெரிய பலமாக இருக்கின்றது. மகிந்த ராஜபக்ஷ மக்களால் விரும்பப்பட்ட ஒரு தென்னிலங்கை தலைவராக இருந்தார், ஆனால் அது சிங்கள மக்களுக்கு மட்டுப்பட்டதாகவே இருந்தது - மேலும் மகிந்தவும் ஏனைய மக்களை அரவணைத்துச் செல்லும் நோக்கம் கொண்ட அரசியல்வாதியாக இருக்கவில்லை.

ஆனால் அநுரகுமார திஸாநாயக்க இந்த இடத்தில் முற்றிலும் மாறுபட்ட முகத்தோடு இருக்கின்றார். இந்த ஆண்டு சட்டத்துக்கு முன்னால் அனைவரும் சமம் என்பதை நிரூபிக்கும் ஆண்டாக இருக்கும் என்று கூறுகின்றார். ஊழலுக்கு எதிராக அவர் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் மக்களால் ஆதரிக்கப்படுகின்றன. கட்சியின் செல்வாக்கு அதிகரிப்பதற்கு இதுவும் ஒரு முக்கியமான காரணம். சாதாரண மக்களுக்கு நெருக்கமான ஒரு அரசாங்கமாக தங்களை நிரூபிப்பதில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் வெற்றி பெற்றிருப்பதும் அவர்களின் ஆதரவுக்கு இன்னொரு அதி முக்கியமான காரணம்.

மற்றும்படி எதிர்க்கட்சிகள் பேசுகின்ற எதிர்ப்பு வாதங்களை சாதாரண மக்கள் பொருப்படுத்துவதாகவும் தெரியவில்லை.

தமிழ் நிலையில் மாகாண சபைத் தேர்தல் என்னும் ஒரு விடயத்தை தவிர வேறு எந்தவொரு விடயத்திலும் பிரதான குற்றச்சாட்டுக்களை முன்வைக்கக்கூடிய நிலையும் இருப்பதாகத் தெரியவில்லை - தமிழ் மக்களுக்கான அதிகாரப்பகிர்வு விடயத்தில் குற்றம்சாட்ட பெரிதாக ஒன்றுமில்லை. ஏனெனில் தமிழ் மக்களின் ஆதரவுடன் வெற்றி பெற்ற மைத்திரியின் காலத்திலும் அது நடக்கவில்லை. அந்த அடிப்படையில் உச்சமான அரசியல் தீர்வு ஒன்றை எந்தவொரு தென்னிலங்கை அரசியல் கட்சியிடமும் எதிர்பார்க்க முடியாது.

# சர்ச்சைக்குரிய தரம் 6 ஆங்கில பாட விசாரணைகளை விரைவுபடுத்துக!

### குற்றப்புலனாய்வுத் திணைக்களத்துக்கு கங்கொடவில நீதவான் நீதிமன்றம் உத்தரவு

கொழும்பு, பெப். 22

புதிய கல்வி சீர்திருத்தத்தின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்ட 6 ஆம் தர ஆங்கிலப் பாடத்திட்டத்தின் ஒரு பகுதியில், மாணவர்களுக்குப் பொருத்தமற்ற இணையத்தள முகவரி சேர்க்கப்பட்டமை தொடர்பான வழக்கை விசாரித்த கங்கொடவில நீதவான் நீதிமன்றம், இது குறித்த விசாரணைகளை விரைவுபடுத்துமாறு குற்றப்புலனாய்வுத் திணைக்களத்துக்கு உத்தரவிட்டுள்ளது.

கங்கொடவில நீதவான் ருவன்திகா மாரசிங்க இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

இச்சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்களை உடனடியாகக் கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்துமாறு அவர் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு பணிப்புரை வழங்கினார்.

தரம் 6 மாணவர்களுக்கான புதிய ஆங்கிலப் பாடத் தொகுப்பில், ஒரு பாடத்தின் கீழ் கொடுக்கப்பட்டிருந்த கியூ.ஆர் குறியீடு அல்லது இணையத்தள இணைப்பு, ஆபாசமான அல்லது தகுதியற்ற உள்ளடக்கங்களைக் கொண்ட இணையத்தளத்திற்கு இட்டுச் செல்வதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. (அ)

## வைத்திய நிபுணர்களின் பங்கேற்புடன் அரியாலையில் இலவச மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம், பெப். 22

யாழ்ப்பாண மருத்துவ சங்கத்தின் அனுசரணையுடன், அரியாலை சனசமூக நிலையம் நேற்று இலவச மருத்தவ முகாம் ஒன்றை நடத்தியது.

காலை 09.00 மணியில் இருந்து நண்பகல் வரை நடைபெற்ற மருத்துவ முகாமில் பொது வைத்திய நிபுணர்கள், குழந்தை மருத்துவ நிபுணர்கள், சிறுவர் குழந்தைகள் சத்திர சிகிச்சை நிபுணர்கள், தோல் மருத்துவ நிபுணர்கள், இருதய சிகிச்சை நிபுணர்கள் கலந்துகொண்டு பரிசோதனைகள், மருத்துவ ஆலோசனைகளை வழங்கியிருந்தனர்.

இந்த மருத்துவ முகாமில் நூற்றுக்கணக்கான பொது மக்கள் கலந்துகொண்டு பயன் பெற்றனர்.

இதன்போது நீரிழிவு, ஆஸ்துமா, உயர் இரத்த அழுத்தம், இருதய நோய்கள் தொடர்பான தெளிவுபடுத்தல்களும் மக்களுக்கு வழங்கப்பட்டன. (அ)

## மாத்தறையில் துப்பாக்கிச் சூடு!


கொழும்பு, பெப். 22

மாத்தறை மாவட்டம் கந்தர பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தெவுந்தர பகுதியில் உள்ள ஒரு சுப்பர் மார்க்கெட் ஒன்றுக்கு அருகில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் காயமடைந்துள்ளார். காயமடைந்த நபர் சிகிச் சைக்காக மாத்தறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கார் ஒன்றில் வந்த குழுவினரே இந்தத் துப்பாக்கிச் சூட்டை நடத்திவிட்டுத் தப்பிச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவம் தொடர்பில் கந்தர பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (அ)

## பாரதி இராஜநாயகம் நினைவு புலமைக் கருத்தாடல்




யாழ்ப்பாணம், பெப். 22

பத்திரிகையாளர் பாரதி இராஜநாயகம் நினைவுப் புலமைக் கருத்தாடல் நிகழ்வு எதிர்வரும் 28 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் விநோதன் மண்டபத்தில் சமூக ஆய்வாளர் தெட்சணாமூர்த்தி மதுசூதனன் தலைமையில் நடைபெறவுள்ளது.

தொடக்கவுரையை இடதுசாரி அரசியல் செயற்பாட்டாளர் நடராஜா ஜனகன் நிகழ்த்துவார். பாரதியின் ஊடகப் பணி - ஒரு நோக்கு என்ற தலைப்பில் பத்திரிகையாளர் வீரகத்தி தனபாலசிங்கமும் தமிழ்மொழி மூல கல்விச் சூழலில் கல்விச்சீர்திருத்தம் என்ற தலைப்பில் பேராசிரியர் தை.தனராஜ/ம் பயங்கரவாத தடைச்சட்டத்தை பதிலீடு செய்வதற்கான முயற்சிகள் என்ற தலைப்பில் சட்டத்தரணி எழில் மொழி இராஜகுலேந்திராவும் தமிழ் மக்களும் அரசியலமைப்பும் என்ற தலைப்பில் பேராசிரியர் அருளம்பலம் சர்வேஸ்வரனும் உரைகளை நிகழ்த்துவர்.

இந்த நிகழ்வை சமூக அறிவியல் அரங்கம் ஏற்பாடு செய்திருக்கிறது. (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காட்சிப் பொருளாகும் கொண்டாட்டங்கள்!

பழ. அசோக்குமார்



தமிழர் பண்பாட்டு வரலாற்றில் திருவிழாக்களும் இல்லச் சடங்குகளும் வெறும் களியாட்டங்கள் அல்ல. அவை சமூகப் படிநிலைகளில் சிதறிக் கிடக்கும் உறவுகளை ஒரு புள்ளியில் பிணைக்கும் கண்ணுக்குத் தெரியாத இழை. ஊர் கூடித் தேர் இழுப்பதும், பந்தி விசாரிப்புகளும் ஒரு சமூகத்தின் கூட்டு மனசாட்சியை உரசிப் பார்க்கும் தருணங்கள். ஆனால், இன்றைய சமூக ஊடக யுகத்தில் கொண்டாட்டங்களின் ஆன்மா நசுக்கப்பட்டு, அவை வெறும் காட்சிப் பொருள்களாகவும், போலியான பாவனைகளாகவும் மாறி வருவது நம் காலத்தின் பண்பாட்டுத் துயரம்.

முன்பெல்லாம் திருமண வீடுகள் என்றால், அங்கு மனிதர்களின் அன்யோன்யம் வாசலில் இருந்தே தொடங்கிவிடும். ஆனால் இன்று, ஒரு திருமண மண்டபத்துக்குள் நுழைந்தால் நாம் காண்பது உறவுகளின் நெருக்கத்தை அல்ல. மாறாக, நிழற்படக் கருவிகளின் ஒளிக்கற்றைகளைத் தேடி அலையும் மனிதர்களைத்தான்.

இன்றைய சடங்குகள் அனைத்தும் ஒரு நாடக மேடைபோல மாற்றப்பட்டுவிட்டன. மணமக்களின் அக உணர்வுகளைவிட, நிழற்படக் கலைஞரின் கோணங்களே முதன்மை பெறுகின்றன. தாலி கட்டும் புனிதமான அந்த விநாடியில் கூட, உற்றார் உறவினர்களின் வாஞ்சையான பார்வையைவிட, அறிதிறன் பேசிகளின் செயற்கை வெளிச்சமே அந்த இடத்தை ஆக்கிரமிக்கிறது. இது உறவுகளின் சங்கமம் என்பதைவிட, பிம்பங்களின் சந்தை என்றே சொல்லத் தோன்றுகிறது.

இன்றைய கொண்டாட்டங்கள் வாழ்வதற்காக அல்ல. பதிவிடுவதற்காக மட்டுமே என்று மாறிவிட்டது. ஒரு மங்கல நிகழ்வுக்குச் செல்பவர்கள், அங்குள்ளவர்களிடம் நலம் விசாரிப்பதைக் காட்டிலும், அங்குள்ள அலங்காரங்களையும் உணவுகளையும் சமூக ஊடகங்களிலும், தங்கள் வாட்ஸ் ஆப்பிலும் நிலைத்தகவலாக பதிவிடுவதிலேயே குறியாக இருக்கிறார்கள்.

உதாரணமாக, ஒரு பிறந்த நாள் கொண்டாட்டத்தில் மெழுகுவர்த்தி அணைக்கப்படும்போது, அங்கிருப்பவர்கள் பாடும் வாழ்த்துப் பாடல் உண்மையான மகிழ்ச்சியில் ஊற்றெடுப்பதில்லை. அது காணொலியில் சரியாகப் பதியப்பட வேண்டும் என்பதற்காகச் செய்யப்படும் ஒரு போலி ஒத்திகையாகவே இருக்கிறது. ஒளிப்படக் கருவி அணைக்கப்பட்ட அடுத்த விநாடியே, அந்த அறையில் மௌனம் குடியேறுகிறது. ஒவ்வொருவரும் தங்கள் பதிவுக்கு எத்தனை பாராட்டுகளும், விருப்பக் குறியீடுகளும் கிடைத்தன என்று எண்ணத் தொடங்கிவிடுகின்றனர். இது கொண்டாட்டத்தின் நேரடி அனுபவத்தை முற்றிலுமாகச் சிதைத்து விடுகிறது.

பந்தி விசாரிப்பு என்பது தமிழ்ப் பண்பாட்டின் ஆகச்சிறந்த அடையாளம். பரிமாறுபவரின் அன்பும், உண்பவரின் திருப்தியும் அங்கு உரையாடல்களாக மாறும். ஆனால் இன்று, இலை போடப்பட்டவுடன் கைகள் முதலில் அறிதிறன் பேசியைத்தான் தேடுகின்றன. அந்த உணவின் சுவையை நாவால் அறியும் முன்பே, அகிலம் அறியச் செய்கிறார்கள்.

முன்பெல்லாம் உணவின் தரமும் ருசியும் பேசப்படும் இன்று அந்த உணவைப் படம் பிடித்த கோணம் பேசப்படுகிறது. பந்தியில் அருகருகே அமர்ந்திருப்பவர்களிடம் ஒரு புன்னகையைப் பரிமாறிக் கொள்ளக்கூட நேரமில்லாமல், கண்ணுக்குத் தெரியாத இணைய நண்பர்களுக்குப் பதில் சொல்வதிலேயே காலத்தைக் கழிக்கின்றனர். இது பந்தி கலாசாரத்தின் மற்றொரு கோணமாக மாறிவிட்டது.

கிராமத்து திருவிழாக்களில் ஜாதி, மத பேதமின்றி மக்கள் ஒன்றுகூடிய மந்தை கலாசாரம், இன்று வாட்ஸ் ஆப் குழு கலாசாரமாகச் சுருங்கிவிட்டது. ஊர்த் திருவிழாக்களில்கூட, முன்னின்று வேலை செய்பவர்களைவிட, தற்படம் எடுப்பவர்களின் எண்ணிக்கையே அதிகம். பாரம்பரியக் கலைகள் அவற்றின் கலைத் தன்மைக்காக ரசிக்கப்படாமல், இணையப் பக்கங்களை அலங்கரிக்கும் "பின்னணி இசை"யாக மாற்றப்படுவது பண்பாட்டுச் சிதைவின் உச்சம்.

கொண்டாட்டங்கள் என்பவை ஒருவருக்கொருவர் அன்புடன் நலன் விசாரித்து, மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்ளும் களம். ஆனால், இன்று ஒரு துக்க வீட்டில்கூட கைப்பேசியில் படம் பிடிப்பவர்களைக் காண முடிகிறது. உணர்வுகளின் வெளிப்பாடாக இருந்த கண்ணீரும், புன்னகையும் இன்று வெறும் குறியீடுகளின் கூடாரங்களாகிவிட்டன.

உறவினர்களுடன் மணிக்கணக்கில் பேசிக் கொண்டிருந்த காலங்கள்போய், இப்போது படங்களை மட்டும் அனுப்புங்கள், அப்புறம் பேசலாம் என்று சொல்லும் இயந்திரத்தனமான மனிதர்களாக நாம் மாறிவிட்டோம்.

(14ஆம் பக்கம் பார்க்க)

# இந்தவார ராசிபலன் 22.02.2026 - 28.02.2026

ஞாயிற்றுக்கிழமை
விசுவாவசு வருடம் - மாசி 10

நல்ல நேரம்: 7.31 - 09.00 ராகு காலம் : 4.30 - 06.00 திதி : சஷ்டி

## மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

இந்த வாரம் சிறிய வியாதிகளைக் கூட புறக்கணிக்க வேண்டாம் என்று கடுமையாக அறிவுறுத்தப்படுகிறீர்கள். இந்த ராசியில் பிறந்த சிலருக்கு இந்த வாரம் தங்கள் தங்கைக்கு விரும்பிய வேலை கிடைக்கக் கூடும். இதன் விளைவாக, அவர்களின் சகோதரியின் வேலை வாய்ப்பு அவர்களின் குடும்பத்திற்கு மகிழ்ச்சியான சூழ்நிலையைக் கொண்டுவரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மாணவர்களுக்கு பாடங்களைப் புரிந்துகொள்வது உங்களுக்கு கடினமாக இருக்கும்.

## ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

உங்களுக்கு மிகுந்த தன்னம்பிக்கையும் சுறுசுறுப்பும் இருப்பதால் யாருடைய ஊக்கமும் தேவையில்லை என்பதை நீங்களும் உங்களைச் சுற்றியுள்ளவர்களும் நன்கு புரிந்துகொள்கிறீர்கள். தொழில் போட்டியாளர்களால் இந்த வாரம் தொழிலதிபர்கள் சில சிரமங்களைச் சந்திக்க நேரிடும். உங்கள் பிரச்சினைகளைத் தீர்க்க, அனுபவம் வாய்ந்தவர்கள் அல்லது நிபுணர்களின் ஆலோசனையைப் பெறலாம். அவர்களின் அறிவும் அனுபவமும் பாடங்களைப் புரிந்துகொள்ள எதிர்காலத் தேர்வுகளில் நீங்கள் சிறப்பாகச் செயல்பட உதவும்.

## மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

உங்கள் ராசியின் நான்காவது வீட்டில் சனி பெயர்ச்சிப்பதால், இந்த வாரம் உங்களுக்கு சில உடல்நலப் பிரச்சினைகள் ஏற்படலாம். எப்போதும் போல, வீட்டில் எந்த நோய்க்கும் சிகிச்சை அளிப்பதைத் தவிர்க்கவும், வீட்டு வைத்தியம் செய்து நேரத்தை வீணாக்குவதைத் தவிர்க்கவும். அவ்வாறு செய்வது உங்கள் குடும்பத்திற்குள் அன்பை வளர்க்கும், ஆனால் அது வேலையில் உங்கள் பிம்பத்தை பாதிக்கலாம். இந்த வாரம் நீங்கள் அதைத் தீர்த்து அவர்களுடனான உங்கள் உறவை மேம்படுத்த முயற்சிப்பீர்கள்.

## கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

உங்கள் ராசியுடன் ஒப்பிடும்போது சனி ஒன்பதாவது வீட்டில் இருப்பதால், இந்த வாரம் உங்கள் அதிகப்படியான சக்தியை நேர்மறையாகப் பயன்படுத்தி உங்கள் ஆரோக்கியத்தை அதிகரிக்க வேண்டும். உங்கள் உற்சாகத்தில், நீங்கள் வேலையில் கூடுதல் வேலைப் பொறுப்புகளை ஏற்றுக்கொண்டு, உங்கள் மேலதிகாரிகளிடம் வாக்குறுதிகளை அளிக்கலாம், இது பின்னர் உங்களுக்கு மன அழுத்தத்தை ஏற்படுத்தும்.

## சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

உங்கள் ராசியுடன் ஒப்பிடும்போது சனி எட்டாவது வீட்டில் இருப்பதால், நீங்கள் எவ்வளவு அதிகமாக மறைக்கிறீர்களோ, அவ்வளவு அதிகமாக உணர்ச்சி ரீதியாக உணர்திறன் உடையவராக இருப்பீர்கள் என்பதை நீங்கள் நன்கு அறிவீர்கள். எனவே, இதுபோன்ற சூழ்நிலைகளைத் தவிர்க்க அறிவுறுத்தப்படுகிறீர்கள், ஏனெனில் அவை உங்களை காயப்படுத்தக்கூடும். சிரமங்களை நீங்கள் சந்திக்க நேரிடும்.

## கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

உங்களுக்கு மிகுந்த தன்னம்பிக்கையும், உந்துதலும் இருப்பதால் யாருடைய ஊக்கமும் தேவையில்லை என்பதை நீங்களும் உங்களைச் சுற்றியுள்ளவர்களும் நன்கு புரிந்துகொள்கிறீர்கள். இது உங்களுக்காக நேரத்தைக் கண்டுபிடிக்க முடியாமல் போகும், உங்கள் தனிப்பட்ட வாழ்க்கையில் ஏற்படும் குழப்பங்களிலிருந்து உங்களைத் தூர விலக்கி வைப்பதில் நீங்கள் முழுமையாக வெற்றி பெறுவீர்கள், இதனால் உங்கள் படிப்பில் அதிக கவனம் செலுத்த முடியும்.

## துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

உங்கள் ராசியின் ஐந்தாம் வீட்டில் ராகு பெயர்ச்சிப்பதால் இந்த வாரம் உங்களுக்கு மன அமைதியின்மை ஏற்படும், வேலையில் சூழ்நிலைகள் உங்களுக்கு சாதகமாக இருக்கும். இது உங்கள் நிலுவையில் உள்ள அனைத்து பணிகளையும் முடிக்கவும், இது எதிர்கால முன்னேற்றத்திற்கான வாய்ப்பையும் திறக்கும். நீங்கள் அரசியல் அல்லது சமூக சேவையைப் படிக்கிறீர்கள் என்றால், இது உங்களுக்கு மிகவும் நல்ல நேரமாக இருக்கும்.

## விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

உங்கள் ராசியின் ஐந்தாவது வீட்டில் சனி பகவான் பெயர்ச்சிப்பதால், உங்கள் ஆரோக்கிய ஜாதகப்படி, இந்த வாரம் ஆரோக்கியக் கண்ணோட்டத்தில் சற்று சிறப்பாக இருக்கும். கூடுதலாக, உங்கள் ராசி அடையாளத்தைச் சேர்ந்த சிலருக்கு இந்த நேரத்தில் ஒரு வெளிநாட்டு நிறுவனத்தில் சேர வாய்ப்பு கிடைக்கக்கூடும். இந்த வாரம் பல மாணவர்கள் சமூக ஊடகங்கள் மூலம் குறிப்பிடத்தக்க வெற்றியைப் பெறலாம். அடிப்பதற்குப் பதிலாக சமூக ஊடகங்களை திறம்பட பயன்படுத்த அறிவுறுத்தப்படுகிறது.

## தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

உங்கள் ராசியிலிருந்து சந்திரன் ராசிக்கு மூன்றாவது வீட்டில் ராகு இருப்பதால், இந்த ஆண்டு உங்கள் உடல்நலம் வழக்கத்தைவிட சிறப்பாக இருக்கும், இது உங்களை புத்துணர்ச்சியுடன் உணர வைக்கும். மேலும், உங்கள் பயணங்களும் மிகவும் நன்மை பயக்கும். உங்கள் ஜாதகத்தில் பல நல்ல கிரகங்களின் செல்வாக்கு உங்களுக்கு சாதகமாக இருக்கும். மாணவர்கள் ஆசிரியர்கள் மற்றும் பெற்றோரிடமிருந்து ஆதரவைப் பெறுவார்கள்.

## மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

இந்த வாரம், கேது உங்கள் ராசியின் எட்டாவது வீட்டில் பெயர்ச்சிப்பதால், உங்கள் உடல்நலக் குறைவு எதிர்மறை எண்ணங்களுக்கு வழிவகுக்கும். எனவே, உங்கள் உடல்நலத்தை மேம்படுத்துங்கள், ஏனெனில் பலவீனமான உடல் மனதை பலவீனப்படுத்தும் என்பதை நீங்கள் நன்கு புரிந்துகொள்கிறீர்கள். பல மாணவர்களின் தொழில் வாழ்க்கை திடீரென்று புதிய உயரங்களை எட்டும், இது உங்கள் குடும்பத்திற்குள் உங்கள் நற்பெயரை அதிகரிக்கும்.

## கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

உங்கள் ராசியிலிருந்து சந்திரனின் இரண்டாவது வீட்டில் ராகு இருப்பதால், நிறைவான மற்றும் திருப்திகரமான வாழ்க்கைக்கு உங்கள் மன வலிமையை அதிகரிக்கவும். இந்த வாரம், பல மாணவர்கள் தங்கள் அறிவை வெளிப்படுத்துவதையும், வீட்டில் சில வேலைகளில் பங்களிப்பதையும் காணலாம். இது அவர்களின் பெற்றோரிடமிருந்து பாராட்டையும் பாராட்டையும் பெறும். இருப்பினும், இந்த நேரத்தில் உங்கள் கல்வியைப் பற்றி அதிகமாக பெருமைப்படுவதைத் தவிர்க்கவும்.

## மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

சந்திரனுடன் ஒப்பிடும்போது கேது ஆறாவது வீட்டில் பெயர்ச்சிப்பதால், இந்த வாரம் உங்கள் உடல்நலம் மிகவும் நன்றாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கூடுதலாக, உங்கள் ராசியில் அதிக எண்ணிக்கையிலான கிரகங்கள் இருப்பது, நீங்கள் வேலையில் அதிக விடாமுயற்சியுடன், உற்பத்தி ரீதியாக மற்றும் திறமையானவராக வெளிப்படுவீர்கள் என்பதைக் குறிக்கிறது. உங்கள் ராஜதந்திர மற்றும் சாதுர்யமான நடத்தை கடினமான சூழ்நிலைகளை எளிதாகக் கையாள உதவும், மூத்த நிர்வாகத்தின் பாராட்டைப் பெறும். ஈகோவை ஒதுக்கி வைத்துவிட்டு, உங்கள் படிப்பில் சிறப்பாகச் செயல்படுவது நல்லது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்கங்களை பதவி கவிழ்த்த கிளர்ச்சிகளுக்கு தலைமை தாங்கிய சக்திகளை தேர்தல்களில் மக்கள் அலட்சியம் செய்வது ஏன்?



வீரகத்தி தனபாலசிங்கம்

தெற்காசியாவில் அண்மைய வருடங்களில் மக்கள் கிளர்ச்சிகளினால் ஆட்சிகள் கவிழ்க்கப்பட்ட நாடுகளில் முதலில் இலங்கையில் 2024 ஆண்டு பிற்பகுதியிலும் அடுத்து பங்களாதேஷில் கடந்த வாரமும் தேர்தல்கள் மூலம் புதிய அரசாங்கங்கள் தெரிவு செய்யப்பட்டன. மூன்றாவது நாடான நேபாளத்தில் மார்ச் 5 ஆம் திகதி தேர்தல் நடைபெறவிருக்கிறது. ஆனால், மூன்று நாடுகளிலுமே கிளர்ச்சிகளுக்கு தலைமை தாங்கிய சக்திகள் அதற்கு பின்னரான அரசியல் நிகழ்வுப் போக்குகளில் செல்வாக்கைச் செலுத்த முடியாதவையாகப் போயிருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது.



இலங்கையில் ராஜபக்ச ஆட்சியை விரட்டியடித்த 2022 'அறகலய" மக்கள் கிளர்ச்சிக்கு பிறகு இரு வருடங்கள் கழித்து ஜனாதிபதி தேர்தலிலும் பாராளுமன்ற தேர்தலிலும் ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி.) தலைமையிலான தேசிய மக்கள் சக்தி வெற்றி பெற்றது. ஜனாதிபதி தேர்தலில் பெற்றதை விடவும் பாராளுமன்ற தேர்தலில் அதன் வெற்றி பிரமாண்டமானதாக அமைந்தது. பாரம்பரிய அரசியல் அதிகார வர்க்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் சகல பழைய அரசியல் கட்சிகளும் படுதோல்வியை தழுவின.

முன்னரங்கத்தில் நின்று ஜே.வி.பி. மக்கள் கிளர்ச்சிக்கு தலைமை தாங்கி வழி நடத்தவில்லை என்ற போதிலும், தவறான ஆட்சிமுறைக்கு பொறுப்பான பாரம்பரிய அரசியல் வர்க்கத்துக்கு எதிரான மக்களின் வெறுப்புணர்வை அந்த கட்சி அநுர குமார திசநாயக்க தலைமையில் உச்சபட்சத்துக்கு தனக்கு சாதகமாகப் பயன்படுத்தி ஆட்சியதிகாரத்துக்கு வந்தது.

அரசைக் கைப்பற்றுவதற்காக கடந்த நூற்றாண்டில் இரு தடவைகள் ஆயுதக் கிளர்ச்சிகளை முன்னெடுத்து தோல்வி கண்ட ஒரு இயக்கம் ஜனநாயக தேர்தல்கள் மூலம் பதவிக்கு வந்த அந்த நிகழ்வை அரசியல் அதிகாரத்தின் வர்க்க மாற்றம் என்று சில அவதானிகள் வர்ணித்தனர்.

முறைமை மாற்றத்தையும் புதிய அரசியல் கலாசாரத்தையும் வேண்டிநின்ற அந்த மக்கள் கிளர்ச்சியின் அரசியல் விளைபயன்களை தேசிய மக்கள் சக்தி அனுபவித்த அதேவேளை, கிளர்ச்சியின் முன்னரங்கத்தில் நின்ற இளைஞர் தலைவர்கள், இடதுசாரிக் குழுக்கள் மற்றும் அரசியல் செயற்பாட்டாளர்கள் சேர்ந்து அமைத்த மக்கள் போராட்ட முன்னணியை தேர்தல்களில் மக்கள் அலட்சியம் செய்ததை காணக்கூடியதாக இருந்தது.

மக்கள் போராட்ட முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் நுவான் போபகேக்கு வெறுமனே 11, 191 வாக்குகள் (0.08 சதவீதம் ) மாத்திரமே கிடைத்தது. பாராளுமன்ற தேர்தலில் அந்த முன்னணிக்கு தேசிய ரீதியில் 26, 611 வாக்குகள் (0.27 சதவீதம் ) கிடைத்தன. பாராளுமன்றத்தில் ஒரு ஆசனத்தையேனும் அவர்களால் பெறமுடியவில்லை. உள்ளூராட்சி தேர்தல்களில் அவர்கள் 50,492 வாக்குகளுடன் ( 0.48சதவீதம் ) 16 ஆசனங்களைப் பெற்றனர்.

பங்களாதேஷில் ஷேய்க் ஹசீனாவின் 15 வருடகால ஆட்சிக்கு முடிவு கட்டிய 2024 மக்கள் கிளர்ச்சிக்கு பின்னர் முதன் முதலாக நடைபெற்ற தேசிய தேர்தலில் அண்மையில் காலஞ்சென்ற முன்னாள் பிரதமர் பேகம் காலிதா ஸியாவின் மகன் தாரிக் ரஹ்மான் தலைமையில் பங்களாதேஷ் தேசியவாத கட்சி மகத்தான வெற்றியைப் பெற்றிருக்கிறது. பங்களாதேஷின் இரு பிரதான அரசியல் ஆதிக்க குடும்பங்களில் ஒன்றின் வாரிசான அவர் பிரதமராக கடந்த செவ்வாய்கிழமை பதவியேற்றார். 20 வருடங்களுக்கு பிறகு பங்களாதேஷ் தேசியவாத கட்சி அதிகாரத்துக்கு வந்திருக்கிறது.



பங்களாதேஷ் தேசியவாத கட்சி தலைமையிலான கூட்டணி பாராளுமன்றத்தில் 212 ஆசனங்களைக் கைப்பற்றி மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பெற்றிருக்கிறது. இஸ்லாமியவாத அரசியல் கட்சியான ஜமாத் - ஈ - இஸ்லாமி தலைமையிலான கூட்டணி 77 ஆசனங்களைப் பெற்று பிரதான எதிர்க்கட்சியாக வந்திருக்கிறது. இந்தியாவில் தஞ்சமடைந்திருக்கும் ஷேய்க் ஹசீனாவின் அவாமி லீக் கட்சியை முஹமட் யூனுஸ் தலைமையிலான இடைக்கால அரசாங்கம் தடைசெய்த காரணத்தினாலேயே இஸ்லாமியவாத கட்சியினால் இவ்வாறாக பெருமளவு ஆசனங்களைக் கைப்பற்றக் கூடியதாக இருந்தது.



'2024 ஜூலை புரட்சி" என்று அழைக்கப்படும் கிளர்ச்சிக்கு தலைமை தாங்கிய மாணவர் தலைவர்கள் அமைத்த தேசிய குடிமக்கள் கட்சி தேர்தலில் ஜமாத் - ஈ - இஸ்லாமி கட்சி தலைமையிலான கூட்டணியில் இணைந்து போட்டியிட்டது. தனித்துப் போட்டியிடுவதில் உள்ள ஆபத்தை அதன் தலைவர்கள் உணர்ந்திருந்தனர் என்று தெரிகிறது.

32 தொகுதிகளில் வேட்பாளர்களை நிறுத்திய மாணவர்களின் கட்சி 3.05 சதவீத வாக்குகளுடன் ஆறு ஆசனங்களில் மாத்திரமே வெற்றி பெறக்கூடியதாக இருந்தது. தலைநகர் டாக்காவில் உள்ள தொகுதி ஒன்றில் போட்டியிட்ட அதன் அமைப்பாளர் நஹீத் இஸ்லாம் பங்களாதேஷ் தேசியவாத கட்சியின் வேட் பாளரை வெறு மனே சுமார் 2 ஆயிரம் வாக்கு களினால் மாத் திரமே தோற்க டிக்க முடிந்தது.

பாராளுமன்ற தேர்தலுடன் சேர்த்து பங்களா தேஷின் ஆட்சி முறைக் கட்டமைப்பில் பாரிய அரசியலமைப்புச் சீர்திருத்தங்களை செய்வதற்கான நோக்கில் கடந்த வருடம் அக்டோபரில் பிரகடனம் செய்யப்பட்ட '2025 ஜூலை தேசிய சாசனத் துக்கு" மக்களின் அங்கீகாரத் தைப் பெறு வதற்காக சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றும் நடத்தப்பட்டது. ஷேய்க் ஹசீனாவின் ஆட்சிக்கு எதிரான மாணவர் கிளர்ச்சி 2024 ஜூலை பிற்பகுதியில் ஆரம்பித்த காரணத்தினால் அது ஜூலை சாசனம் என்று அழைக்கப்படுகிறது.

எதேச்சாதிகார -- பாசிச ஆட்சி மீண்டும் ஏற்படுவதை தடுக்கும் நோக்கில் எண்பதுக்கும் அதிகமான சீர்திருத்த யோசனைகள் அடங்கிய அந்த சாசனத்தில் 33 அரசியல் கட்சிகள் கடந்த அக்டோபரில் கைச்சாத்திட்டன. பங்களாதேஷ் தேசியவாத கட்சியும் அதில் கைச்சாத்திட்ட போதிலும், முக்கியமான பல ஏற்பாடுகள் குறித்து அது கடுமையான கருத்து வேறுபாடுகளை பதிவு செய்தது.

சர்வஜனவாக்கெடுப்பில் 60.26 சதவீதமான வாக்காளர்கள் ஜூலை சாசனத்துக்கு ஆதரவு தெரிவித்திருக்கும் நிலையில், பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை கொண்டிருக்கும் பிரதமர் தாரிக் ரஹ்மானின் புதிய அரசாங்கம் அரசியலமைப்புச் சீர்திருத்தங்களை முன்னெடுக்க வேண்டிய அரசியல் மற்றும் சட்டரீதியான கடப்பாடுகளைக் கொண்டிருக்கிறது.

“சாசனத்தின் வழிகாட்டல்களின் அடிப்படையில் தேர்தல் ஆணைக்குழு உட்பட முக்கியமான அரசியலமைப்பு நிறுவனங்கள் மறுசீரமைக்கப்பட வேண்டும் என்பதுடன் எதிர்காலத்தில் தேர்தல்களை நடத்தும் பொறுப்பு பக்கச்சார்பற்ற இடைக்கால அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட வேண்டும், பாராளுமன்றத்தை இரு சபைகளைக் கொண்டதாக மாற்றி 100 உறுப்பினர்களுடனான மேல்சபை நிறுவப்பட வேண்டும். தேசிய தேர்தலில் அரசியல் கட்சிகளுக்கு கிடைக்கின்ற வாக்குகளின் அடிப்படையில் விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையில் மேல்சபைக்கான உறுப்பினர்கள் நியமிக்கப்பட வேண்டும்.

“எதிர்காலத்தில் எந்தவொரு அரசியலமைப்பு திருத்தமும் மேல் சபையின் பெரும்பான்மை உறுப்பினர்களின் அங்கீகாரத்துடனேயே நிறைவேற்றப்பட வேண்டும். ஒருவர் இரு பதவிக் காலங்களுக்கு கூடுதலாக பிரதமர் பதவியில் இருக்க முடியாது.

பெண்களின் பிரதிநி தித்துவம் அதிகரிக்கப்பட வேண்டும். பிரதி சபாநாயகரும் பாராளுமன்றக் குழுக்களின் தலைவர்களும் எதிர்க்கட் சிகளில் இருந்தே தெரிவு செய்யப்பட வேண் டும்.” இவையே சாசனம் வலியுறுத் துகின்ற அரசியலமைப்புச் சீர்திருத்தங் களில் மிகவும் முக்கியமானவை.

சர்வஜனவாக்கெடுப்பில் ஜூலை சாசனத்துக்கு மக்கள் வழங்கிய அங்கீகாரம் புதிய பாராளுமன்றத்தின் மீது பிரத்தியேகமான கடப்பாடுகளை திணித்திருக்கிறது. பாராளுமன்றம் அரசியலமைப்புச் சீர்திருத்த பேரவையாக இயங்க வேண்டும் என்றும் சாசனத்தின் ஏற்பாடுகளை 180 வேலை நாட்கள் அவகாசத்திற்குள் அந்த பேரவை நிறைவேற்ற வேண்டும் என்றும் 2025 அரசியலமைப்பு சீர்திருத்த பேரவையின் கட்டளையில் நிபந்தனை விதிக்கப்பட்டிருக்கிறது.

தெரிவு செய்யப்பட்டிருக்கும் ஒவ்வொரு உறுப்பினரும் பாராளுமன்ற உறுப்பினராகவும் அரசியலமைப்பு சீர்திருத்த பேரவையின் உறுப்பினராகவும் இரு பதவிப் பிரமாணங்களைச் செய்ய வேண்டியிருக்கிறது.

சாசனத்தின் குறிப்பிட்ட சில ஏற்பாடுகள் தொடர்பிலான கருத்து வேறுபாடுகள் குறித்து அரசாங்கத்துக்கும் பாராளுமன்றத்தில் உள்ள எதிர்க் கட்சிகளுக்கும் இடையில் பேச்சுவார்த்தைகளை நடத்த வேண்டியது அவசியமாகிறது. சாசனத்தின் மீது பங்களாதேஷ் தேசியவாத கட்சி பற்றுறுதியை வெளிக்காட்டிய போதிலும், அதை நடைமுறைப்படுத்துவதில் ஏற்படக்கூடிய சவால்களை எதிர்கொள்வதில் பிரதமர் தாரிக் ரஹ்மானின் அரசாங்கத்தின் உறுதிப்பாடு எதிர்வரும் மாதங்களில் பரீட்சிக்கப்படும் என்று அரசியல் அவதானிகள் கூறுகிறார் கள்.

இது இவ்வாறிருக்க, முஹம்மட் யூனுஸ் தலைமையிலான மக்களால் தெரிவு செய்யப்படாத இடைக்கால அரசாங்கத்தில் இருந்து பங்களாதேசுக்கு ஜனநாயக மாற்றம் ஒன்று அவசியமாக இருந்தது என்ற போதிலும், அந்த நாட்டின் மிகப்பெரிய கட்சிகளில் ஒன்றான அவாமி லீக் தடை செய்யப்பட்டிருக்கும் நிலையில், கடந்த வாரத்தைய தேர்தலின் நியாயப்பாடு குறித்து அரசியல் அவதானிகள் கேள்வியெழுப்புகிறார்கள்.

ஜனநாயக கட்சியை தடைசெய்து விட்டு அமெரிக்கா ஒரு தேர்தலை நடத்தியிருந்தால் அதை மக்களின் வெற்றி என்று அழைத்திருக்க முடியுமா? ஐக்கிய இராச்சியத்தில் கன்சர்வேட்டிவ் கட்சியோ அல்லது தொழிற்கட்சியோ தடைசெய்யப்பட்ட நிலையில் ஒரு தேர்தல் நடத்தப்பட்டிருந்தால் அதை ஜனநாயக

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலையான தீர்வுகள் ஒருதலைப்பட்சமான தீர்வுகளாக இருக்க முடியாது!



கலாநிதி ஜெகான் பெரேரா



**எதிர்க்கட்சிகளுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தி ஊடாட்டங்களைச் செய்வது மோதல் மனோபாவத்தைக் கொண்டதும் சமூகத்தில் பிளவுகளை ஏற்படுத்தியதுமான கடந்த கால அரசியல் கலாசாரத்தை தணிக்க உதவும்.**

ஆழமாக வேருன்றிய இன, மத மற்றும் மொழிப் பிளவுகளைக் கொண்ட இலங்கை போன்ற பன்முக சமுதாயமொன்றில் பிரச்சினைகளும் தீர்வுகளும் சகல தரப்புகளையும் அரவணைக்கும் மனமார்ந்த அணுகுமுறை ஒன்றை வேண்டிநிற்கின்றன. வலிமையான அடையாளங்களைக் கொண்ட வெவ்வேறு குழுக்களினால் எதிர்நோக்கப்படுகின்ற பிரச்சினைகளை சரியான முறையில் அடையாளம் கண்டு அவற்றுக்கு தீர்வுகளைக் காணவேண்டியிருப்பதே இலங்கையில் எந்தவொரு அரசாங்கத்துக்கும் இருக்கும் முக்கியமான சவாலாகும். பிளவுபட்ட சமுதாயங்களில் ஜனநாயக முறைமைகளின் நீடித்து நிலைக்கும் தன்மை தேர்தல் வெற்றிகளை விடவும் பெருமளவுக்கு. நிறுவனமயப்பட்ட அரவணைப்பு, கலந்தாலோசனை மற்றும் பேச்சுவார்த்தைகள் மூலமான விட்டுக்கொடுப்பு ஆகியவற்றிலேயே தங்கியிருக்கிறது.

தனியொரு அரசியல் கட்டமைவின் கண்ணாடி வில்லையின் ஊடாக மாத்திரம் பிரச்சினைகள் வரையறை செய்யப்படும் போது (தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தினால் பெறப்பட்டதைப் போன்ற மிகப்பெரிய தேர்தல் ஆணையைக் கொண்ட ஒரு கட்டமைவு என்றாலும் கூட) அத்தகைய அணுகுமுறையில் இருந்து வருகின்ற கொள்கைத் தீர்வுகள் ஆளும் கட்சிக்கு வெளியில் இருக்கக்கூடிய சமூகங்களின் அனுபவங்களை பொருட்படுத்தாமல் விட்டுவிடக்கூடிய சாத்தியம் இருக்கிறது. அதன் விளைவாக அந்த கொள்கைகளுக்கு எதிர்ப்புக் கிளம்பும் என்பதுடன் இறுதியில் சமச்சீரற்ற நடைமுறைப்படுத்தலிலும் அரசியல் எதிர்விளைவுகளிலும் போய்முடியும்.

தேர்தல் செயன்முறை தொடர்பாக குடிமக்களின் உணர்வுகள் தொடர்பில் வடக்கில் இளைஞர்களுக்கான கலந்துரையாடல் ஒன்றில் தேசிய சமாதானப் பேரவையினால் அண்மையில் ஆய்வு ஒன்று செய்யப்பட்டது. சமாதானப் பேரவையின் ஆய்வின் முடிவுகள் இந்த மாத முற்பகுதியில் வெறைற் றிசேர்ச் அமைப்பினால் மேற்கொள்ளப்பட்ட தேசிய ஆய்வொன்றின் முடிவுகளுக்கு ஆதரவாக அமைந்திருந்தன. வெறைற் றிசேர்ச்சின் அந்த ஆய்வு அரசாங்கத்தின் செயற்பாடுகளை நாட்டு மக்களில் 65 சதவீதமானவர்கள் அங்கீகரிப்பதாக கூறுகிறது. யாழ்ப்பாணத்தில் மேற் கொள்ளப்பட்ட ஆய்வில் கேள்விகளுக்கு பதிலளித்தவர்களில் பெரும்பான்மையானவர்கள் தாங்கள் கடந்த காலத்தை விடவும் தற்போது கூடுதலான அளவுக்கு பாதுகாப்பாகவும் நேர்மையாகவும் நடத்தப்படுவதை உறுதி செய்தனர்.

சகல துறைகளிலும் அல்ல, சில துறைகளில் தெளிவான முன்னேற்றமான போக்கை காணக்கூடியதாக இருக்கிறது. பிரதானமாக இளைஞர் யுவதிகள் மற்றும் படித்தவர்கள் மத்தியில் நடத்தப்பட்ட இந்த ஆய்வில் 78 சதவீதமானவர்கள் தங்களது வாழ்வாதாரங்களில் மேம்பாடு ஏற்பட்டிருப்பதாக கூறிய அதே வேளை அதேயளவு சதவீதத்தினர் அன்றாட வாழ்வில் பாதுகாப்பை உணருவதாகக் கூறினர். புதிய அரசாங்கம் தொடர்பில் 75 சதவீதமானவர்கள் திருப்தி தெரிவித்தனர். 64 சதவீதமானவர்கள் தங்களது மொழியையும் கலாசாரத்தையும் அரசு நேர்மையாக நடத்துவதாக நம்புகிறார்கள். மூன்று தசாப்தங்களாக போரின் கொடுமைக்குள்ளாகியிருந்த ஒரு பிராந்தியத்தில் ஆய்வின் இந்த கண்டுபிடிப்புகள் முக்கியத்துவம் இல்லாதவை அல்ல. இருந்தாலும் கூட, இத்தகைய நம்பிக்கை தரும் சூழ்நிலைக்கு மத்தியிலும் ஆழமான ஐயுறவுகளும் இருப்பதை அதே ஆய்வுகள் வெளிக்காட்டுகின்றன. கடந்தகால பிரச்சினைகள் கையாளப்படுகின்ற முறை தொடர்பில் 25 சதவீதத்தினர் மாத்திரமே திருப்தி தெரிவித்தனர். அதேயளவு சத வீதந்தினர் காணி மற்றும் இராணுவத்துடன் தொடர்புடைய பிரச்சினைகளில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை என்ற அபிப்பிராயத்தைக் கொண்டிருக்கிறார்கள். மத நோக்கங்களுக்காக மக்களின் சம்மதமின்றி காணிகள் அபகரிக்கப்படு வது குறித்து சுமார் 90 சதவீதத்தினர் கவலை கொண்டிருக்கிறார்கள் என்பது முக்கியமாகக் கவனிக்கத்தக்கது. எதிர்காலம் சிறப்பானதாக இருக்குமா என்பது குறித்து கணிசமான எண்ணிக்கையினர் நிச்சயமற்றமற்றவர்களாக இருக்கிறார்கள். இந்த எதிர்மறையான உணர்வுகளை பொருட்படுத்தத் தக்கவை அல்ல அலட்சியம் செய்ய முடியாது.

எதிர்மறையான உணர்வுகள் காணி உரிமைகள், இராணுவமய நீக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் அரசியல் அதிகாரத்தின் மையம் தொடர்பில் தீர்வு காணப்படாத கட்டமைப்பு ரீதியான பிரச்சினைகள் பற்றியவையாகும். காலந்தாமதிக்கால் இந்த பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படாவிட்டால் நாட்டின் தற்போதைய உறுதிப்பாடு சஞ்சலமானதாகிப் போய்விடக்கூடிய ஆபத்து இருக்கிறது. இது நீண்டகால உறுதிப்பாடு மற்றும் நியாயப்பாட்டை உறுதிசெய்வதற்கு மற்றைய கட்சிகளுடன் கருத்தொருமிப்பைக் கட்டியெழுப்ப வேண்டிய தேவையையும் தேசியப் பிரச்சினைகளுக்கு தீர்வுகளைக் காண்பதற்கு கூட்டுப் பங்காண்மையின் தேவையையும் உணர்த்துகிறது.

ஒரு குழு மக்கள் மிகவும் அறிவார்ந்தவர்களாக இருந்தாலும் கூட, அவர்களின் சிந்தனையின் அடிப்படையில் தேசிய அல்லது உள்ளூர் மட்டத்திலான பிரச்சினைகளுக்கு தீர்வுகளைக் காண முயற்சித்தால் அதில் வெற்றிபெறுவது சாத்தியமில்லை. பிரச்சினைகளை தீர்த்து வைப்பதற்கு பல்வகைமையான கருத்துக்களையும் சாத்தியமான தீர்வுகளையும் பெறுவதற்குவெவ்வேறு இன, மத, சாதி மற்றும் அரசியல் பின்புலங்களைக் கொண்டவர்களுடன் பேச்சுவார்த்தைகளை நடத்த வேண்டியது அவசியமாகிறது. அது ஊழல் மயப்படுவதாகவோ அல்லது நல்லதைக் கைவிட்டு கெட்டதை அணுகுவதாகவோ அர்த்தப்படாது. பொது வெளியில் கருத்துக்களை பரீட்சித்துப் பார்ப்பதாக மாத்திரமே அது அர்த்தப்ப டும்.

நியாயப்பாடு என்பது வெறுமனே தேர்தல்களில் வெற்றி பெறுவதில் இருந்து மாத்திரம் அல்ல, தீர்மானங்களை எடுப்பதற்கு முன்னர் பொதுப் பகுத்தறிதலில் இருந்தும் வருகிறது. கொள்கை ரீதியான பதிலளிப்புகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்துவதற்கு முன்னதாக சிவில் சமூக அமைப்புக்கள், அரசியல்வாதிகள், வர்த்தக சமூகங்கள் மற்றும் உள்ளூர் மட்ட பிரதிநிதிகள் கூட்டாக பிரச்சினைகளை அடைமாளம் கண்டு வரையறை செய்கின்ற பேச்சுவார்த்தை மேடைகளின் ஊடாகவே நீண்டகால அமைதி சமாதானமும். அபிவிருத்தியும் கட்டியெழுப்பப்பட்டன என்பதை முரண்நிலைக்கு பின்னரான சமூகங்களின் வெற்றிகரமான அனுபவங்கள் காட்டுகின்றன.

ஒரு சிவில் சமூக அமைப்பு என்ற வகையில், தேசிய சமாதானப் பேரவை சமூகங்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதிலும், உறவுகளை கட்டியெழுப்புவதிலும் கவனத்தைக் குவிக்கும் பல்வேறு வகையான பொது நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருகிறது. அந்த நடவடிக்கைகளில் பங்குபற்றுவோரில் சமூகத் தலைவர்கள், மதத் தலைவர்கள், உள்ளூர் மட்ட அரசாங்க அதிகாரிகள் மற்றும் சமூகத்தின் அடிமட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் அடங்குகிறார்கள்.

ஆனால், அந்த நிகழ்வுகளில் தேசிய மக்கள் சக்தி உறுப்பினர்களின் பங்குபற்றலைப் பெறுவதில் தேசிய சமாதானப் பேரவையும் ஏனைய சிவில் சமூக அமைப்புக்களும் கஷ்டத்தை எதிர்நோக்கி வந்திருக்கின்றன. ஆளும் கட்சி உறுப்பினர்கள் வேறு பெருவாரியான நடவடிக்கைகளில் தங்களை முழுமையாக ஈடுபடுத்தியிருப்பதால் சிவில் சமூக அமைப்புக்களினால் முன்னெடுக்கப்படுகின்ற நடவடிக்கைகளில் பங்கேற்க அவர்களுக்கு நேரமில்லை என்று சாட்டு கூறப்படுகிறது. ஆளும் கட்சி உறுப்பினர்கள் பெருமளவு நடவடிக்கைகளில் மும்முரமாக ஈடுபடுகிறார்களா அல்லது மற்றையவர்களுடன் சேர்ந்து பணியாற்றுவதில் தயக்கம் இருக்கிறதா என்ற கேள்வி எழுகிறது.

ஆளும் கட்சியின் கட்டுப்பாட்டில் இல்லாத குழுக்களினால் ஏற்பாடு செய்யப்படுகின்ற நடவடிக்கைகளில் பங்குபற்ற வேண்டுமானால் அதன் உறுப்பினர்கள் கட்சியின் உயர்மட்டத்தின் விசேட அனுமதியைப் பெறவேண்டியது அவசியம் என்ற பொதுவில் நம்பப்படுகிறது. ஆளும் கட்சி உறுப்பினர்கள் வேறு அமைப்புக்களின் நடவடிக்கைகளில் இணைந்து செயற்பட்டால் கட்சியின் தலைவர்கள் கொண்டிருக்கும் கருத்துக்களில் இருந்து வேறுபட்ட கருத்துக்களின் செல்வாக்கிற்கு ஆளாகி விடுவார்கள் என்ற சந்தேகம் காரணமாகவே அவர்களை அனுமதிப்பதற்கு தயக்கம் காட்டப்படுவதாகவும் இருக்கலாம்.

இந்த வேறுபட்ட கருத்துக்கள் ஆளும் கட்சி உறுப்பினர்கள் ஊழல் வசப்பட்டு விடுவார்கள் அல்லது அவர்களின் அணிகளுக்குள் கருத்து வேறுபாடு தோன்றும் என்பதும் அவர்களை தடுப்பதற்கான காரணமாக இருக்கலாம்.

ஆனால், பன்முக சமூகம் ஒன்றில் நிலையான சீர்தி ருத்தத்துக்கு வேறுபட்ட கருத்துக்களை அறிந்து கொள்வதற்கான வாய்ப்புக்கள் அவசியம். யாழ்ப்பாணத்தில் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட இளைஞர் யுவதிக ளில் 90 சதவீதமானவர்கள் காணிப் பிரச்சினை குறித்து கவலை கொண்டிருக் கிறார்கள் என்றால், அசௌகரியமான கலந்துரையாடல்களில் இருந்து கட்சி பிரதிநிதிகளை விலக்கி வைப்பதல்ல, மாறாக அந்த இளைஞர் யுவதிகளுடன் பேசுவதற்கு அனுமதிப்பது பிரச்சர னையை துல்லியமாக அடையாளம் காண்பதற்கு அவசியமானது.

கடந்த வாரம் காலமான லங்கா சமசமாஜ கட்சியின் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தேசிய மட்டத்தில் பிரச்சினைத் தீர்வுக்கான உதாரணத்தை வழங்கினார். அரசாங்கத்தின் ஒரு அமைச்சராக அவர் மூன்று தசாப்தகால போருக்கு வழிவகுத்த நீண்டகால இனநெருக்கடிக்கு தீர்வு காண்பதற்கான சவாலை ஏற்றுக் கொண்டார். தீர்வு பற்றி சிந்தித்த அவர் சகல தரப்புகளுடனும் பேச்சுவார்த்தைகளை நடத்தினார்.

ஆனால், தீர்வு எத்தகையதாக இருக்க வேண்டும் என்பதில் தனக்கு இருந்த நம்பிக்கையில் இருந்து அவர் ஒருபோதும் விலகிச்செல் லவில்லை. அவரைப் பொறுத்தவரை, அவரது திசைகாட்டி எல்லா வேளைக ளிலும் அந்த திசையையே காட்டிக் கொண்டிருந்தது என்று மகன் இறுதிச் சடங்கில் வைத்து என்னிடம் கூறினார். தீர்வு தொடர்பிலான நம்பிக்கையே பேராசிரியர் விதாரணவின் வடதாரகை.

பல்வகைமையைக் கொண்ட பன்முக சமூகம் ஒன்றில் அதிகாரப் பரவலாக்கம் அவசியம் என்பதும் பெரும்பான்மைச் சமூகத்துக்கும் சிறுபான்மைச் சமூகங்களுக்கும் இடையில் ஒரு கட்டமைக்கப்பட்ட முறையில் அதிகாரப்பகிர்வு செய்யப்பட வேண்டும் என்பதும் பேராசிரியர் விதாரணவின் உறுதியான கருத்தாக இருந்தது.

மற்றைய தரப்புகளுடன் பேச்சுவார்த்தைகளை நடத்துவற்கோ அல்லது இணைந்து செயற்படுவதற்கோ கோட்பாட்டு ரீதியில் சரணடைய வேண்டிய அவசியமில்லை என்பதற்கு விதாரண உதாரணமாக விளங்குகிறார். அதற்கு பேச்சுவார்த்தை தொடர்பில் திறந்த மனதுடன் அணுகுமுறையும் செயல் நோக்கத்தில் தெளிவும் தேவை.

இன்று நிலவுகின்ற இனங்கள், மதங்களுக்கு இடையிலான அமைதிக்கு பேராசிரியர் விதாரணவும் அவரைப் போன்ற நபர்களும் குழுக்களும் வலிமை குறைந்தவர்களாக இருந்தாலும் பலம் பொருந்தியவர்களுடன் பல வருடங்களாக சேர்ந்து பணியாற்றி முன்னெடுத்த முயற்சிகளே காரணமாகும்.

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாணசபைகளுக்கானதேர்தல் இந்தியாவும் கைவிட்ட அநாதை!

பனங்காட்டான்



ஜே.ஆர்.ஜெயவர்த்தனவும் ராஜிவ் காந்தியும் இணையர்களாக கைச்சாத்திட்ட ஒப்பந்தத்தால் பிறந்த குழந்தைமாகாண சபை. நீதிமன்றம் ஊடாக அதை உருக்குலைத்த சாதனையாளர்கள் ஜே.வி.பியினர். இந்த ஒப்பந்தத்தின் மாப்பிள்ளையான இந்தியா வேதனது பிரசவத்தை மறந்து மாகாணசபையை அநாதையாக்கிவிட்டது.

இலங்கைத் தமிழர் அரசியலில் இப் போது முனைப்புப் பெற்றிருப்பவை இரண்டு விடயங்கள்.ஒன்று, தமிழரசுக் கட்சியின் சுமந்திரன் - சிறீதரன் விவகா ரம். அடுத்தது, காணாமலாக்கப்படும் மாகாண சபைகள்.

கடந்தநாடாளுமன்றத் தேர்தலில் தோல்வியுற்று,தமிழரசுக் கட்சி தலைவர் தேர்தலிலும் தோல்வியுற்றசுமந்திரன் யாழ்ப்பாணம் மாவட்ட எம்.பி.யாக தெரிவானசிறீதரனைகட்சியிலிருந்துஓரங்கட்டி,தாமேகட்சியின் எல்லாமாகிஅதனைஅழித்துஒழிக்கநினைக்கிறார் என்று பெரும்பாலான அரசியல் ஆய்வாளர்களும் விமர்சகர்களும் தொடர்ந்துசுட்டிவருகின்றனர்.

தமிழரசுக் கட்சிக்குள் குட்டி ஜமீந்தாராக காட்சி யளிக்கும் சிறீதரனும் விட் டுக் கொடுப்பதாக இல்லை. போனால் மயிர் - வந்தால் மலை என்ற பாணியில் காய்கள் நகர்த்தப்பட்டுக் கொண்டிருக் கின்றன.தம்மீது மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளைஎதேச்சாதிகாரமெனபார்க்கும் சிறீதரன் நீதிமன்றத்தைநாடியிருப்பதாகதகவல்கள் வெளி வருகின்றன.

இதன் ஓர் அம்சமாகதமிழரசுக் கட்சியின் மத்தியசெயற்குழுவுக்குஅறிக்கையிடுவதற்காகநிறுவப்பட்டுள்ளசிலஉபகுழுக்களின் விபரங்களைக் கேட்டுசிறீதரன் கட்சியின் பதில் தலைவரானசி.வி.கே. சிவஞானத்துக்கு இந்தமாதம் 12ம் திகதி ஒருகடிதம் அனுப்பியிருந்தார்.

இதற்குஅவர் சிறீதரனுக்குஅனுப்பிய பதிலில்,தனிப்பட்டகுடும்பநிகழ்வுக்காக தாம் வெளிநாடுசெல்வதால்,தம்மிடம் கோரியவிபரங்களைகட்சியின் பொதுச் செயலாளருக்குஎழுதிபெற்றுக்கொள்ளுமாறுஎழுதியிருந்தார்.உடனடியாக இதற்குப் பதிலளித்தசிறீதரன்,நீங்களேபொருத்தமானவருக்குஅனுப்பிஅவற்றைப் பெற்றுத்தாருங்களெனகேட்டிருந்தார். இதற்குப் பின்னர் என்னநடைபெற்றது என்பது இதுவரைதெரியவரவில்லை.

இங்குமுக்கியமாகக் கவனிக்க வேண்டிய விடயம் ஒன்று உண்டு. சுமந்திரனுக்கும் சிறீதரனுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள முரண்பாடு முழுத்தமிழரும் அறிந்தது. சுமந்திரனுக்கு நேரடியாகசிறீதரன் கடிதம் அனுப்பியிருந்தால் உரியமுறையில் அதுகவனத்துக்குளடுக்கப்பட்டிராதுஎன்பதும் சி.வி.கே.சிவஞானத்துக்குத் தெரியும். அப்படியிருந்தும் இவ்விடயத்தில் பொறுப்பாகநடந்திருக்கவேண்டியவர் அதனைமறந்துசிறீதரனைசுமந்திரனுக்கேநேரடியாகதொடர்புகொள்ளுமாறுஅறிவுறுத்தியதைதவிர்த்திருக்கலாம்.அதுமட்டுமன்றி,சிறீதரன் தமக்குஎழுதியகடிதத்தைசுமந்திரனுக்குஅனுப்பி,கேட்கப்பட்டதகவல்களைவழங்குமாறுஅறிவுறுத்தியிருக்கலாம்.

இவ்விடயத்தில் கட்சியின் தற்போதைய அலங்கோலத்தைப் புரிந்துகொண்டும் உட்கட்சிமோதல்களைத் தெரிந்து கொண்டும் சிறீதரனின் கோரிக்கைகளை நிறைவேற்றாதுபாராமுகமாக இருந்ததைதவிர்த்திருக்கவேண்டியதுதமதுகடமைஎன்பதையும் ஏனோஅவர் மறந்துவிட்டார் போலவேதெரிகிறது. இவ்வாறான செயற்பாடுகள் கட்சிக்குள் முரண்களையும் மோதல்களையும் வளர்க்குமேதவிர குறைக்காது.

ஏற்கனவேசிறீதரன் மீதுநடத்திவரும் பாய்ச்சலின் இன்னொருகட்டமாகமட்டக்களப்புநாடாளுமன்றஉறுப்பினர் சிறீநே சன் மீதும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளது. கட்சியின் உள்விவகாரங்க ளைவிமர்சிப்பதாகக் கூறி எச்சரிக்கைக் கடிதமொன்றை சுமந்திரன் அவருக்கு அனுப்பியுள்ளார். அமைச்சரவைக் கூட்ட முடிவை விமர்சிக்கும் அமைச்சர் மீது நடவடிக்கை எடுப்பதுபோல இந்த எச்சரிக்கை அமைந்துள்ளது. தமதுசகாவானசாணக்கியனுடன் ஒத்துப் போகாதசிறீநேசனையும் கட்சியிலிருந்து ஓரங்கட்ட சுமந்திரன் தமதுகாய்களைநகர்த்துவதாகவேகிழக்கிலங்கைகட்சிப் பிரமுகர்கள் கருதுகின்றனர்.

தமிழரசுக் கட்சியைசாம்பராக்கியே விடுவதெனஒருவர் சன்னதம் கொண்டு ஆடுகிறார் என்றால்,கட்சியைஉருவாக்கி தியாகத்தால் கட்சியைவளர்த்தெடுத்ததந்தைசெல்வாமீண்டும் உயிர் பெற்றுவந்தாலும் அதனைதடுக்க முடியாது போலிருக்கிறது.

மாகாணசபைத் தேர்தல் விவகாரமும் தமிழரசுக் கட்சியின் நிலையைப் போன்றதுதான். 1987ல் இலங்கை-இந்திய ஒப்பந் தத்தில் கையொப்பமிட்டஜே.ஆர்.ஜெய வர்த்தனவும் ராஜிவ் காந்தியும் இன்று உயிருடன் இல்லை. இவர்கள் தலைவ ராக இருந்த ஐக்கிய தேசிய கட்சியும், இந் தியகாங்கிரஸ் கட்சியும் எழும்பமுடியாதளவுக்கு தள்ளப்பட்டு உள்ளன.

இருநாடுகளும் செய்திருந்தஒப்பந்தத்தைவன்மையாகஎதிர்த்து 1987-1989 காலத்தில் ரத்தக்களரியை ஏற்படுத்திய ஜே.வி.பி.யின் புதுவடிவமான தேசிய மக்கள் சக்தி இப்போது இலங்கையை ஆட்சிபுரிகிறது.

இந்தியகாங்கிரசைஓரந்தள்ளிவிட்டு மோடியின் ஆட்சி இந்தியாவில் தொடருகிறது. இவ்வாறான நிலை யில் இருதரப்பிலும் யாருக்குத் தான் மாகாணசபையில் அக்கறை இருக்கும்?

சிலவாரங்களுக்குமுன்னர் இந்தியா சென்றுதிரும்பியஜே.வி.பி.யின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா ஒரு விடயத் தைபகிரங்கமாகக் கூறியுள்ளார்.

அங்கு தம்மைசந்தித்தஆட்சித் தரப்பைச் சேர்ந்த எவரும் மாகாணசபைகள் பற்றியோ அதற்கானதேர்தல்கள் பற்றியோ எதுவுமே பேசவில்லைஎன்பதே இவரதுஅறிவிப்பு.

ஏறத்தாளஒருவருடத்துக்குமுன்னர் தம்மைச் சந்தித்ததமிழ்த் தேசியகட்சிகளின் பிரதிநிதிகளிடம் இந்தியவெளிவிவகார அமைச்சர் என்னசொன்னார்? இருநாட்டு ஒப்பந்தங்களும் கைச்சாத்தாகி 35 வருடங்களுக்கு மேலாகி விட்டது. இடைப்பட்ட காலத்தில் அரசியலில் எத்தனையோமாற்றங்கள் நிகழ்ந்துவிட்டன.

இல்லாதவைகளை கேட்ப தைவிட இருப்பவைகளை முழுமை யாகப் பயன்ப டுத்துங்கள் என்றுஅவர் வழங்கிய ஆலோ சனையின் அர்த்தத்தை இலகுவாகப் புரிந்துகொள்ளலாம். (மாகாண சபையை இனிஎதிர்பார்க்க வேண்டாம் என்பதையே ஜெய்சங்கர் ராஜரீகவார்த்தைகளால் எடுத்துக் கூறியிருந்தார்).

35 ஆண்டுகாலத்தில் ஏற்பட்டமாற்றங்கள் என்றுஅமைச்சர் ஜெய்சங்கர் குறிப்பிட்டதில் சட்டரீதியாகமேற்கொள்ளப்பட்டவைகள் முக்கிய மானவை. மகிந்தராஜபக்சஆட்சியில் இருந்த போது வடக்குகிழக்கு இணைப்புக்கு எதிராகஜே.வி.பி.யினர் தாக்கல் செய்த வழக்கில் அவர்களுக்குச் சாதகமானதீர்ப்பைஅப்போதையபிரதமநீதியரசராகவிருந்தசரத் என்.சில்வாவழங்கியிருந்தார். இதனைஉள்நாட்டின் நீதிவிவகாரம் என்று கருதி இந்தியாமௌனம் சாதித்தது.

மாகாணசபைகளுக்குகாணி அதிகாரமும் காவற்துறை அதிகாரமும் வழங்கப்பட்டுள்ளதாக ஒப்பந்தத்தில் கூறப்பட்டபோதிலும் இறுதிவரை அது வழங் கப்படவில்லை.

இதனையிட்டு இந்திய ஆட்சிபீடம் ஒருபோதும் ஆட்சேபனையும் தெரிவிக்கவில்லை. கடந்தகால் நூற்றாண்டில் இந்தியதரப்பிலிருந்து எந்தவொரு அழுத்தமும் மாகாண சபை அதி காரங்களுக்குகொடுக்கப்படவும் இல்லை. அவ்வப்போது பட்டும் படாதது போல மாகாணசபைக்கு ஆதரவு போன்ற கருத்துகளை இந்தியத் தரப்பு கூறிக்கொண்டிருந்த துமட்டுமேகாணப் பட்டது.

வடக்கு - கிழக்குமாகாணசபைகளை ஒன்றாக இணைப்பது சம்பந்தமாக அதனை முன்மொழிந்த அப்போதைய ஜனாதிபதிஜே.ஆர்.ஜெயவர்த்தன எந்த உள் நோக்கில் அவ்வாறு செய்தா ரென்பதை அவரே ஓரிடத்தில் தெரிவித்துள்ளார்.மென் அன்ட் மற்றர்ஸ் **(Men and Matters)** என்நூலில் பின்வருமாறு அதனை விளக்குகிறார்:

'மாகாண சபை நிர்வாகத்துக்கு வடக் கையும் கிழக்கையும் தற்காலிகமாக இணைப்பதற்குநான் ஆலோசனை வழங்கினேன். கிழக்கு மாகா ணத்தில் இது தொடர்பாக கருத்துக் கணிப்பு நடத்தி அதன் ஆதரவு கிடைத் தால் மட்டுமே வடக்குடன் நிரந்தரமாக இணைக்க முடியுமென கூறியிருந்தேன்.

கிழக்கு மாகாணத்தில் சிங்களவர்களும் முஸ்லிம்களும் சேர்ந்து அறுபது வீத மானவர்கள் வாழ்கிறார்கள். இவர்கள் வடக்குடன் இணைவ தற்கு சம்மதம் வழங்க மாட்டார்கள் என்ற நம்பிக்கையின் அடிப்படையி லேயே தற்காலிக இணைப்பை ஏற்றுக் கொண்டேன்" என்றஜே.ஆரின் கூற்று அவரின் நரிக்குணத்தைஅப்பட்டமாகஅம்பலப்படுத்துகிறது.

இப்போது,வடக்குகிழக்கு இணைப்புசட்டரீதியாக இல்லாமலாக்கப்பட்டுவிட்டது.

காணி அதிகாரம், காவற்துறை அதிகாரம் கிடையாது. இந்த நிலையில் கடந்த நவம்பர் மாதம் ஜனாதிபதி அநுரகுமர வுடன் தமிழரசுக் கட்சியினர் நடத்திய சந்திப்பிலும் மாகாண சபைத் தேர்தல் பேசப்பட்டது.

இனப்பிரச்சனை தீர்வுக்குகடந்த எழுபத்தைந்து வருடங் களாகதமிழர் தரப்பு சகலசிங்கள ஆட்சித் தரப்புடனும் நடத்திய பேச் சுவார்த்தைகள் தோல்வி யிலேயே முடி வடைந் தன என்று தமி ழரசுக் கட்சியினர் எடுத்துக் கூறியதை அமைதியாக செவி மடுத்த ஜனாதிபதி அநுரகுமர, எழுபத்தைந்து வருடங் களாக எந்த அரசாங்கத்தாலும் நிறை வேற்ற முடியாது போனதை தொடர்ந்து பேசுவதால் என்ன பயன் என்று கேட்டு பந்தைதமிழரசுக் கட்சியின் பக்கமே அடித்துவிட்டார்.

புதியஅரசியலமைப்பில் அனைத்து இனங்களும் ஏற்றுக்கொள்ளும் தீர்வு கிடைக்குமென்பதைசொன்ன தோடு அனைத்துக் கட்சிகளும் இதில் இணைய வேண்டுமெனவும் அவர் ஆலோசனை வழங்கியுள்ளார். ஆனால்,மாகாண சபை தேர்தல் நடைபெறுமென்று எந்த உறுதியும் வழங்கவில்லை.

ரில்வின் சில்வாஊடாக இந்தியாவின் நிலைப்பாடும் பகிரங்கமாகியுள்ளது. பதின்மூன்றாம் திருத்தம், மாகாணசபைத் தேர்தல் ஆகியவைகளை உள் ளடக்கிய இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் மாப்பிள்ளையான இந்தியாவும் மாகாண சபை யைகை விட்டுவிட்டது. இப் போது மாகாண சபை என்பது பெற்றார் இல்லாத ஓர் அநாதை. இதை யார் தத்தெடுக்கப் போகிறார்கள்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “இந்தியாதொடர்பானஜே.வி.பி.யின் நிலைப்பாடுபற்றிய பழையகருத்துக்களைமாற்றவேண்டிய நேரம் இது”

ஜனதாவிமுக்திபெரமுன (ஜே.வி.பி.) இந்தியாவுக்கு எதிரானது என்று நீண்ட காலமாகநிலவும் கருத்தை மாற்றிக் கொள்ள வேண்டும். காலப்போக்கில் ஜே.வி.பி.யின் நிலைப்பாட்டில் ஏற்பட்டிருக்கும் மாற்றத்தை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்றுஅதன் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா கூறியிருக்கிறார்.

அண்மையில் இந்தியாவுக்கு மேற்கொண்ட தனது முதன் முதலானவிஜயத்தைதொடர்ந்து ‘தி இந்து”வுடன் பேசியசில்வா,புதுடில்லியில் இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.ஜெய்சங்கருடன் மிகவும் நட்பிணக்கமானபேச்சுவார்த்தைகளைநடத்தியதாகவும் இந்தியா இலங்கையின் நட்புநாடாகவும் நம்பிக்கைக் குரிய பங்காளியாகவும் தொடர்ந்து இருக்கும் என்றுஅவர் தன்னிடம் கூறியதாகவும் தெரிவித்தார்.

“சினேகபூர்வமானஉறவுகளைப் பேணுவதற்கான எமது விருப்பத்தைநாமும் அவரிடம் தெரிவித்தோம். டித்வாசூறாவளியின் பாதிப்புக்களில் இருந்து இலங்கை மீண்டெழுவதற்கு இந்தியாசெய்துவரும் பங்களிப்புக்கும் உதவிகளுக்கும் நன்றியைக் கூறினோம்” என்று சில்வாகுறிப்பிட்டார்.

முதலில் டில்லிசென்றசில்வாஅங்கிருந்துகுஜராத் மற்றும் கேரளாமாநிலங்களுக்குசென்றார்.அந்த இரு மாநிலங்களினதும் முதலமைச்சர்களைஅவர் சந்தித்தார்.


குஜராத்தில் உட்கட்டமைப்புஅபிவிருத்திமுனைப்பானதாக இருக்கின்றஅதேவேளை,கேரளாவில் மாநிலத்தின் வருமானம் மக்களின் வாழ்க்கைத் தரங்களைமேம்படுத்துவதற்குபயன்படுத்தப்படுகிறதுஎன்றுசில்வா கூறினார்.

“கேரளாவின் அபிவிருத்தித் தராதரங்கள் இலங்கையினதைஒத்திருக்கிறது… மாநிலத்தின் நல்வாழ்வுத் திட்டங்கள் மக்களைச் சென்றடைகின்றன.”

இலங்கையில் இந்தியத் திட்டங்கள் குறிப்பாக, கேந்திர முக்கியத்துவம் வாய்ந்தகிழக்கில் திருகோணமலை,யாழ்பாணத்தில் காங்கேசன்துறை முகங்களின் அபிவிருத்திதிட்டங்கள் தொடர்பில் ஜே.வி.பி. தொடர்ந்தும் சந்தேகம் கொண்டதாக இருக்கிறது என்றஎண்ணம் பற்றிகேட்டபோதுபெரியதிட்டங்கள் தொடர்பிலானகரிசனையைப் பொறுத்தவரைஅது இந்தியாவின் திட்டங்கள் தொடர்பிலானதாகமாத்திரம் இல்லைஎன்று கூறினார்.

“எந்தநாடுசம்பந்தப்பட்டிருக்கிறதுஎன்பதைபொருட்படுத்தாமல்,ஒவ்வொருதிட்டத்தையும் எவ்வாறு பயனுறுதியுடையமுறையில் நடைமுறைப்படுத்தமுடியும் என்று நாம் பார்க்கவேண்டியிருக்கிறது. திட்டத்துக்கானசெலவுமற்றும் நிபந்தனைகள் நியாயமானவையாஎன்றுபார்க்கவேண்டியிருக்கிறது. அத்தகையதிட்டங்கள் இலங்கைமக்களினதும் இருநாடுகளினதும் சிறந்த நலன்களுக்குஏற்றமுறையில் நடைமுறைப்படுத்தப்படுவதை நாம் உறுதிசெய்யவேண்டியிருக்கிறது.”

காங்கேசன்துறைதுறைமுகத்தைஅபிவிருத்திசெய்வதற்குநன்கொடையாக 61. 5 மில்லியன் அமெரிக்க டொலர்களைதருவதாக இந்தியாஉறுதியளித்திருக்கிறது என்பதுகுறிப்பிடத்தக்கது.



நிலைப்பாட்டில் மாற்றம் மேலும்,’ இந்திய விஸ்தரிப்புவாத” கோட்பாடுபற்றிஒருகாலத்தில் அதன் உறுப்பினர்களுக்குமார்க்சியவகுப்புக்களில் போதனை செய்த ஜே.வி.பி. யின் சிந்தனையில் ஏற்பட்டமாற்றங்கள் குறித்துசுட்டிக்காட்டியபொதுச் செயலாளர் ஜே.வி.பி. இந்தியாவுக்குவிரோதமானஒருகட்சிஎன்றபழையஎண்ணத்தைமாற்றிக்கொள்ளவேண்டிய நேரம் இதுஎன்று கூறினார்.

1987 இந்திய-- இலங்கைசமாதான உடன்படிக்கை, அதன் விளைவாககொண்டுவரப்பட்டமாகாணசபைமுறைமற்றும் இந்தியஅமைதிகாக்கும் படையின் வருகை உட்பட இலங்கையில் இந்தியாவின் தலையீட்டுக்குஎதிரானநிலைப்பாட்டைஎடுத்தவரலாற்றைக் கொண்டஜே.வி.பி. தற்போதுசமகாலஅரசியல் மற்றும் பொருளாதார பிரச்சினைகள் மீதுகவனத்தைக் குவித்திருக்கிறதுஎன்றும் அவர் கூறினார்.

அதேவேளை, இந்தியாவும் கூட இலங்கைத் தரப்புடன் பாரம்பரியமாககிளப்பிவந்த (நீண்டகாலமாகதாமதிக்கப்பட்டுவரும் மாகாணசபைதேர்தல்களைநடத்துவது,தேசிய இனப்பிரச்சினைஅல்லதுதமிழ்பேசும் பிராந்தியங்களுக்குஅதிகாரங்களைபரவலாக்கம் செய்வது போன்ற) பிரச்சினைகளைசில்வாவுடனானசந்திப்புகளில் (ஜெய்சங்கருடனானசந்திப்புஉட்பட) கிளப்பவில்லை. “அபிவிருத்திக்குஒத்துழைப்புவழங்குவதுகுறித்தேகவனம் செலுக்கப்பட்டது” என்றுசில்வாகுறிப்பிட்டார்.

பொருளாதாரமீள் எழுச்சி மார்க்சிய -- லெனினிச வேர்களைக் கொண்டஜே.வி.பி. இன்னமும் கூட சோசலிசத்தில் நம்பிக்கைகொண்டிருப்பதாக கூறுகிறது. அதன் இளம் உறுப்பினர்களுக்கானபாடவிதானங்களில் சோசலிசத்துக்கானபாதை,போல்ஷெவிக் கட்சியொன்றைகட்டியெழுப்புதல் உட்பட்டவிடயங்கள் உள்ளடங்கியிருக்கின்றன. ஜே.வி.பி. அதன் அடிப்படைக் கோட்பாடுகளைக் கைவிட்டுவிட்டதாகஏனைய இடதுசாரிகள் விமர்சனம் செய்கிறார்கள்.

ஆனால், ஜனாதிபதிஅநுரகுமாரதிசநாயக்கதலைமையிலானதேசியமக்கள் சக்தியினால் காணப்பட்டிருக்கும் முன்னேற்றம் குறித்துகட்சிமகிழ்ச்சியடைகிறதுஎன்றுசி



**மீராசிறினிவாசன்**

ல்வா கூறுகிறார்.

“நாம் அதிகாரத்துக்குவந்தபோதுநிர்மூலம் செய்யப்பட்டுவக்குரோத்துநிலைக்குதள்ளப்பட்டபொருளாதாரத்தைகாப்பாற்றவேண்டியதேமிகப்பெரியசவாலாக இருந்தது. நாம் எதிர்பார்த்ததைவிடவும் விரைவாகபொருளாதாரத்தைஉறுதிப்பாட்டுக்குகொண்டுவரக்கூடியதாக இருந்தது.

நாட்டின் வருவாய் அதிகரித்திருக்கிறது. நிதிவிவகாரங்களில் ஒழுங்குகட்டுப்பாடு பேணப்படுகிறது. ஊழலும் இலஞ்சமும் ஒழிக்கப்பட்டுவிட்டன.

“அதேவேளை,கிராமியவறுமையைஒழித்தல்,தேசிய ஐக்கியத்தைக் கட்டியெழுப்புதல் தொடர்பில் பெருமளவுபணிகளைச் செய்யவேண்டியிருக்கிறது. பொருளாதாரப் பயன்கள் நேர்மையானமுறையில் பகிர்ந்தளிக்கப்படுவதைஉறுதிசெய்வதுஎன்பதுதேசியமக்கள் சக்தி நாட்டுமக்களுக்குஅளித்த இன்னொருமுக்கியமானவாக்குறுதியாகும்” என்றுசில்வாசொன்னார்.

சிக்கனத் திட்டங்களின் விளைவாகசாதாரணமக்கள் மீதுகடுமையான சுமையை ஏற்றியிருக்கும் சர்வதேச நாணயநிதியத்தின் தற்போதையஉதவித்திட்டத்தின் எல்லைகளுக்குள் எவ்வாறுஅரசாங்கம் மேற்கூறியவற்றைச் சாதிக்கலாம் என்றுகேட்டபோது, “சர்வதேசநாணயஉதவித் திட்டத்துடன் சேர்ந்துசிலசவால்களும் வந்திருக்கின்றன” என்றுஅவர் பதிலளித்தார்.

எவ்வாறெனினும்,சர்வதேசநாணயநிதியத்துடன் பேச்சுவார்த்தைகளைநடத்திசிலதீர்வுகளைஅரசாங்கத்தினால் காணக்கூடியதாக இருந்ததுஎன்று கூறிய சில்வா, “மக்களின் நல்வாழ்வுக்கானதிட்டங்களுக்குசர்வதேசநாணயநிதியம் இடையூறுசெய்யவில்லை.

அரசாங்கஊழியர்களுக்குசம்பளத்தைஅதிகரிப்பதிலும் அரசநிறுவனங்களுக்குஉடனடியாகநிதியைவழங்குவதிலும் சவால்க ளைஎதிர் நோக்கவேண்டியிருக்கிறது. நிகரஉள்நாட்டுஉற்பத்திஅதிகிரிக்கும்போதுமாத்திரமே நலன்புரித் திட்டங்களுக்கானஒதுக்கீடுகளைஅதிகரிக்கக்கூடியதாக இருக் கும்.பொருளாதாரம் அபிவிருத்தியடையும்போதுநிச்சயமாகஒதுக்கீடுகளும் அதிகரிக்கும்” என்று கூறிப்பிட்டார்.

(தி இந்து)

# மாகாணசபை தேர்தலின் அவசியம்!

ஜேவிபி முக்கியஸ்தர் டில்வின் சில்வா, மக்களால் தெரிவுசெய்யப்பட்ட மூன்று தமிழ் எம்.பி.க்கள் உட்பட ஏழு பேர் கொண்ட குழு பெப்ரவரி 5ம் திகதி தொடக்கம் 12ம் திகதி வரை இந்தியாவிற்கு வியஜயம் மேற்கொண்டிருந்தது.

அது தொடர்பாக 18-02-2026 திகதிய ஐலண்ட் - மூத்த பத்திர்கையாளர் சில கருத்துக்களை பதிவு செய்திருக்கிறார்.

சிறி லங்கா அரசுகளுடன் (எந்த அரசாக இருப்பினும்) இந்தியா உண்மையான நம்பிக்கைக்குரிய பங்களியாக எப்போதும் இருக்கும் என்பது - தெரிந்ததே.

ஆனால், டில்வின் சொல்வதில் இரண்டு விடயங்கள் குறிப்பாக அவதானிப்புக்குரியவை.

முதலாவது, என்பிபி ஆட்சிக்குவந்தபின் - இந்தியா தங்களுடன் இணைந்து வேலை செய்யலாம் என்பதை உணர்ந்துள்ளது என்கின்றார்.

அத்துடன் ஜேவிபியின் இந்தியா தொடர்பான நிலைப்பாடு - முன்னைய இந்திய அரசின் (ராஜிவ் - காங்கிரஸ் ) நிலைப்பாட்டிற்கு எதிரானதே என்கிறார் அதாவது தற்பொதைய பிஜேபி அரசு விரும்புவதை சொல்கிறார்.

இது என்பிபி அரசிற்கும் - டெல்லியில் பிஜேபி அரசிற்குமான நெருக்கம் பலமாக தொடரும் என்பதை கோடிகாட்டுகிறது .

இரண்டாவதாக, புதிய அரசியல் யாப்பிற்கான



ஆரம்ப வேலைகள் ஏற்கனவே பாராளுமன்றத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கூறுகிறார். நிறைவேற்று அதிகார நீக்கம் - பாராளுமன்றத்தை பலப்படுத்துதல் - தொடர்பாகவே புதிய வரைபு கவனம் செலுத்தும் என்றும் கூறுகிறார். இது தமிழ் எம்.பி.க்களுக்கும் தெரிந்திருக்கும்தானே??

புதிய அரசியல் யாப்பு வருவதற்கு சந்தர்ப்பமே இல்லை - பாராளுமன்ற பெரும்பான்மை இருப்பினும் - புதிய யாப்பிற்கு அத்தியாவசியமான சர்வஜன வாக்கெடுப்பு வெற்றிபெறுவது சாத்தியமே இல்லை, என்பது எல்லோருக்கும் தெரியும்.

ஆனால் - இனப்பிரச்சினை தீர்வு பற்றி டில்வின் எதுவுமே பேசாமலே இருப்பது - இந்த விடயத்தில் ஜேவிபி யின் நிலைப்பாடு உறுதியாகவும் நேர்மையாகவும் இருக்கிறது என்பதை காட்டுகின்றது.

அதாவது இலங்கையில் அனைவரும் சமமானவர்கள் - இனப்பி ரச்சினை என்று ஒன்று இல்லை- என்பதே அவர்களின் நிலைப்பாடு என்பது மீண்டும் வலியுறுத்தப்பட்டி ருக்கின்றது எனலாம்.

தமிழ் தரப்பு - திருவிழாவில் தொலைந்த குழந்தை போல - வர்த்தக உறவுகளை பலப்படுத்த கொழும்பு வந்திருக்கும் - பிரிட்டனின் உதவி பிரதமரிடம் - அவருக்கு ஏற்கனவே நன்கு பரிச்சயமான - புதிய யாப்பின் அவசியம் - சர்வதேச விசாரணை - ஐநா மனிதஉரிமை பேரவை பிரேரணை - பற்றியெல்லாம் தமிழ் தரப்பு பேசியதாக தமிழ் பத்திரிகை செய்திகள் கூறுகின்றன.

மாகாண சபை தேர்தல்களின் அவசியத்தை - என்பிபி அரசும் - தமிழ் தரப்பினரும் எப்போது உணர்வார்கள் என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

-சாந்தன் கே. தம்பையா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கழண்டகத்திகள் ?



நிலாந்தன்

சில ஆண்டுகளுக்கு முன் இந்திய வெளியுறவுச் செயலர் யாழ்ப்பாணத்திற்குவருகைதந்திருந்தார். யாழ்ப்பாணத்தில் தெரிந்தெடுக்கப்பட்ட 10 பேரைஅவர் சந்தித்தார். சந்திப்பு முடிந்து வெளியே வரும் போதுசிவாஜிலிங்கம் அங்கிருந்த ஓர் அரசியல் விமர்சகரிடம் கேட்டார் “இந்த வாரக் கட்டுரை இதைப் பற்றித்தானா?”என்று. அப்பொழுதுஅரசியல் விமர்சகர் சொன்னார், “இல்லை இந்தச் சந்திப்பில் நான் ரிப்போர்ட்டராகக் கலந்துகொள்ளவில்லை.இது மூடிய அறைக்குள் நடந்தஒருசந்திப்பு.தமிழ்த் தரப்பு இவ்வாறு மூடியஅறைகளுக்குள் நடக்கும் சந்திப்புகளில் பேசப்பட்ட விடயங்களை அப்பாவித்தனமாகஅல்லதுஉள்நோக்கத்தோடுவெளியேவிடுகிறது என்று ஓர் அபிப்பிராயம் ராஜதந்திர வட்டாரங்கள் மத்தியில் உண்டு” என்று.




இதை இங்கேஏன் எழுதவேண்டி இருக்கிறது என்றால்,கடந்தவாரம் நடந்த இரண்டு விடயங்கள் தொடர்பாகத்தான். முதலாவது விடயம், கடந்த திங்கட்கிழமைநடந்த பிரித்தானிய அரசாங்கத்தின் துணைப் பிரதமருக்கும் தமிழ்க் கட்சித் தலைவர்களுக்கும் இடையிலான சந்திப்பு.இரண்டாவதுவிடயம், சுவிஸ் தூதராகத்தால் கடந்த 19ஆம் திகதி ஏற்பாடுசெய்யப்பட்டுபின்னர் இடைநிறுத்தப்பட்ட அதேதமிழ்க் கட்சித் தலைவர்களுக்கு இடையிலான ஒருசந்திப்பு பற்றியவிடயம்.

பிரித்தானியதுணைப் பிரதமர் தமிழ்க் கட்சிகளைச் சந்தித்தபோதுஅதில் கஜேந்திரகுமார் தெரிவித்ததாகக் கூறப்படும் ஒருகருத்துத் தொடர்பாகஒருதகவல் ஊடகம் ஒன்றில் வெளிவந்தது. ஆனால் கஜேந்திரகுமார் தான் அவ்வாறு கூறவில்லைஎன்றுமறுத்திருந்தார். இதில் கஜேந்திரகுமார் அவ்வாறு கூறினாரா இல்லையாஎன்றவிவாதத்தைதனியாகவைத்துக் கொள்ளலாம். இங்கு முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டியது என்னவென்றால், மூடியஅறைக்குள் நடந்தஒரு சந்திப்புதொடர்பாகசெய்திகளைக் கசியவிடுவதுபற்றியது.அதைவிடமுக்கியமாக,கட்சிகளுக்கு இடையிலான முரண்பாட்டுக்குள் தூதரகங்களை இழுத்து விடுவது.


இப்படித்தான் சுவிட்சர்லாந்து தூதரகத்தின் அனுசரணையோடுகடந்த 19 ஆம் திகதிநடக்கவிருந்தசந்திப்புத் தொடர்பாகவும் தகவல்கள் முன்கூட்டியேஊடகங்களுக்குக் கசிந்தன.அது தொடர்பாகசுவிட்சர்லாந்து தூதரகம் சந்தோசமாக இல்லைஎன்றும் தெரிகிறது. இங்கேயும் ராஜதந்திரசமூகத்துடனான இடையூடாட்டங்கள் ஊடகங்களுக்குக் கசியவிடப்பட்டிருக்கின்றன.இது வேண்டு மென்று செய்யப்பட்ட ஒன்றா

> ### ராஜதந்திரிகள் தமிழ்க் கட்சித் தலைவர்களைநம்பிக் கதைப்பார்களா? மூடியஅறைக்குள் நடக்கும் சந்திப்புகளில் கூறப்பட்டவிடயகளைசரியாகவோ,பிழையாகவோ அல்லதுகட்சிமுரண்பாடுகளைப் பிரதிபலிக்கும் விதத்திலோவெளியேகசியவிடும் அரசியல்வாதிகளைஎந்தத் தூதரகமாவது நம்பிக் கதைக்குமா?

என்ற சந்தேகங்களும் உண்டு.எதுவானாலும் கட்சிகளுக்கிடையிலான முரண்பாடுகளைப் பிரதிபலிக்கும் விதத்தில் தூதரங்கள் தொடர்பானசெய்திகள் கசியவிடப்படுகின்றன என்பது மட்டும் தெளிவாகத் தெரிகிறது. இந்த இரண்டு சம்பவங்களும் தமிழ்க் கட்சித் தலைவர்களில் ஒருபகுதியினர் ஓர் அரசு போலவும் சிந்திக்கவில்லை. ஒருதேசமாகவும் சிந்திக்கவில்லை. ஆகக் குறைந்தது ராஜீய உறவுகளில் பேணப்பட வேண்டிய நிதானத் தோடாவது சிந்திக்கவில்லை என்பதைத்தான் காட்டுகின்றன.



மேலும் ஒருசம்பவம். இது வடமாகாண சபை இயங்கிக் கொண்டிருந்த பொழுதுநடந்தது.அதில் வயதால் மூத்ததலைவர் ஒருவர் கனேடியத் தூதரகத்துடனானசந்திப்புஒன்றின் போது கூறப்பட்டசிலவிடயங்களைசந்திப்புமுடிந்தகையோடுஊடகங்களுக்குஅப்பாவித்தனமாகவெளிப்படையாகக் கூறிவிட்டார்.அதுவும் அப்பொழுது தூதரகவட்டாரங்களில் அதிருப்தியோடு பார்க்கப்பட்டது.



தமிழ்க் கட்சித் தலைவர்களில் ஒருபகுதியினர் ராஜதந்திரசமூகத்தைச் சந்திக்கும்போது ஓர் அரசைப் போல சிந்தித்து, ஓர் அரசைப் போலபக்குவமாகநடந்துகொள்வதில்லைஎன்பதுதான் கடந்த 16 ஆண்டுகாலஅனுபவம் ஆகும். ஓர் அரசைப்போலசிந்திக்காவிட்டாலும் பரவாயில்லை, குறைந்தபட்சம் ஒரு தேசமாகக்கூட அவர்கள் சிந்திக்கிறார்கள் இல்லை என்பதைத்தான் அண்மைக் காலநடப்புகள் நமக்குக் காட்டுகின்றன.

நான்கு நூற்றாண்டுகளுக்கு முன்பு போர்த்துக்கீசர் தமிழ் மக்களிடமிருந்த ஒரு ராஜ்ஜியத்தை தோற்கடித்தார்கள். அங்கிருந்து தொடங்கிதமிழ் மக்கள் ஐந்து நூற்றாண்டுகளாக அரசற்றதரப்பாகவே இருந்துவருகிறார்கள்.இடையில் ஆயுதப் போராட்டம் 1985 வசந்த காலத்தில் தொடங்கி 2009 மேமாதம் வரையிலும் ஒருகருநிலை அரசைக் கட்டி எழுப்பியது. அந்தகருநிலைஅரசின் ஒரே ராஜதந்திரியாகஅன்ரன் பாலசிங்கம் உலகம் முழுவதும் பிரகாசித்தார்.அவர் துறைசார் ராஜதந்திரிஅல்ல. முறைசாரா ராஜதந்திரிதான். ஆனாலும் ஈழத் தமிழர்களின் நவீனவரலாற்றில் பாலசிங்கம் உலகம் முழுவதும் ஈழத் தமிழர்களின் ஆயுதப் போராட்டத்தின் ராஜதந்திர முகமாகமதிக்கப்பட்டார்.லண்டனில் அவருடைய இறுதி நிகழ்வானது ,வெளிநாட்டுப் பிரதிநிதிகள் அதிகம் கலந்து கொண்ட ஒருதமிழ் நிகழ்வாகக் காணப்பட்டது.

சுமார் நான்கு நூற்றாண்டுகளில் அதிககாலம் அரசு இல்லாதசமூகமாக இருந்தகாரணத்தாலோஎன்னவோ,தமிழ் மக்கள் மத்தியில் ஓர் அரசைப்போல சிந்திக்கும் மாண்பு அனேகமாக இல்லாமல் போய்விட்டது. ஒரு தேசமாகச் சிந்திக்கமுடியாதமக்கள் ஓர் அரசைப்போலசிந்திப்பார்கள்,செயற்படுவார்கள் என்றுஎதிர்பார்ப்பதுகடினமானதுதான். ஆனால் இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வு வேண்டுமாக இருந்தால் அது தொடர்பில் வெளிஉலகத்தைஅணுகும்போது ஓர் அரசைப் போலசிந்தித்து செயல்படாவிட்டால் என்னநடக்கும்? கட்சிகளுக்கு இடையிலான முரண்பாடுகளுக்குள் தூதரகங்கள் இழுத்துவிடப்படும். நிறுவனமயப்படாத தனியோட்டங்களே அதிகரிக்கும் இந்த இடத்தில் மேலும் ஓர் உதாரணத்தை இங்குசுட்டிக்காட்டலாம். சில ஆண்டுகளுக்குமுன் தென்னிலங்கையில் இடம்பெற்றமக்கள் எழுச்சிகளினால் ராஜபக்சக்கள் ஆட்சியில் இருந்து துரத்தப்பட்டார்கள்.அதன் பின்னணியில் ஒரு புதிய ஜனாதிபதியை நாடாளு மன்றத்துக்குஊடாகத் தெரிவுசெய்வதற்கானவாக் கெடுப்பு இடம் பெற் றது. இந்த தேர்தலில் தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பு எவ்வா றான நிலைப் பாட்டை எடுக்க வேண்டும் என்பதைத் தீர்மானிப்பதற்காககட்சித் தலைவர்களுக்கு இடையில் ஒரு கூட்டம் ஒழுங்கு செய்யப் பட்டது. இதில் சில கட்சித் தலைவர்கள் ரணில் விக் கிரமசிங்கவுக்கு ஆதரவாக வாக்களிக்கும் நிலைப்பாட்டோடு காணப்பட்டார்கள். இந்த விடயத்தில் இந்தியாவின் நிலைப்பாடுஎன்னஎன்பதனைஅங்கிருந்தகட்சித் தலைவர்களுக்கு தெரியப்படுத்துவதற்காக கூட்டமைப் பின் முக்கியஸ்தர் ஒருவர் கொழும்பில் உள்ள இந்திய தூதரகத் தோடுதொலை பேசியில் தொடர்பு எடுத்திருக்கிறார். தூதரகத்தின் இரண் டாம் நிலை அதிகாரியோடுநடந்தஅந்தஉரையாடலைஅ வர் எல்லாரும் கேட்கக் கூடியதாககை பேசியின் ஒலிபெருக்கியில் விட்டிருக்கிறார். அதுமட்டுமல்ல,அந்தத் தகவல் பின்னர் ஊடகங்களுக்கும் கசிய விடப்பட்டது. ஒருவெளிநாட்டுத் தூதரகத்துக்கு அப்படி ஒருஅனுபவம் அதற்குமுன் ஏற்பட்டிருக்குமோதெரியாது.

ஆனால் அப்படிப்பட்ட அனுபவங்களின் பின் ராஜதந்திரிகள் தமிழ்க் கட்சித் தலைவர்களைநம்பிக் கதைப்பார்களா? மூடியஅறைக்குள் நடக்கும் சந்திப்புகளில் கூறப்பட்டவிடயங்களைசரியாகவோ,பிழையாகவோஅல்லதுகட்சிமுரண்பாடுகளைப் பிரதிபலிக்கும் விதத்திலோ வெளியேகசியவிடும் அரசியல்வாதிகளை எந்தத் தூதரகமாவது நம்பிக் கதைக்குமா? நமதுதமிழ் தலைவர்களில் எத்தனை பேர் அவ்வாறுநம்பிகதைக்கத்தக்க தலைவர்களாகக் காணப்படுகிறார்கள்?

எனதுநண்பர் ஒருவர் தென்னமராட்சியைச் சேர்ந்தவர்.அவர் “கழண்டகத்திகள்” என்றஒருசொற்றொடரைப் பயன்படுத்துவார். அதன் பொருள் கத்தியின் பிடி கழண்டுவிட்டது, அல்லது பிடி கத்தியோடு இறுக்கமாக இல்லை என்பதாகும். அவ்வாறுகழண்டகத்தியால் எதையாவதுவெட்டினால்,அதுஒழுங்காகவெட்டாதுமட்டுமல்ல,வெட்டுகிறவரின் கையையும் நன்னிவிடும். காயப்படுத்திவிடும்.

இப்பொழு துள்ளதமிழ் அரசியல்வாதிகளில் ஒருபகுதியினர் அவ்வாறு கழண்ட கத் திகள் தானா? ராஜதந்தி ரசமூகம் அவர் களை நம்பி உறவாடி, ரகசியங்களைப் பரிமாறிக் கொள்ளுமா? இந்தக் கழண்டகத்தி களைவைத்துக் கொண்டுதமிழ் மக்கள் எதைப் பெறப் போகிறார்கள்? ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திமுக கூட்டணியில் தேமுதிக: காங்கிரஸ் கட்சிக்கு பாதிப்பா?

- விஜயானந்த் ஆறுமுகம்

“தி.மு.க உடன் எத்தனையோ முறை கூட்டணி பேசப்பட்டாலும் அது நிறைவேறவில்லை. 2016 ஆம் ஆண்டில் “பழம் நழுவி பாலில் விழப் போகிறது” என கருணாநிதி கூறினார். பத்து ஆண்டுகள் கழித்து தேன் கலந்த பாலில் அது விழுந்துள்ளது” தி.மு.க உடன் கூட்டணி அமைத்தது குறித்து தே.மு.தி.க பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் செய்தியாளர் சந்திப்பின்போது இவ்வாறு கூறினார்.

இந்தக் கூட்டணியால் சட்டமன்றத் தேர்தலில் தே.மு.தி.கவை காரணம் காட்டி காங்கிரஸ் கட்சிக்கு ஒதுக்கப்படும் இடங்களை தி.மு.க குறைப்பதற்கான வாய்ப்புகள் உள்ளதாக, அரசியல் விமர்சகர்கள் கூறுகின்றனர்.

ஆனால், “கட்சிகளின் சுயமரியாதைக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் தலைமை முடிவெடுக்கும்” என தி.மு.க கூறுகிறது.

தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் நெருங்கிக் கொண்டிருப்பதால் கூட்டணியை இறுதி செய்யும் பணிகளில் தி.மு.க, அ.தி.மு.க ஆகிய கட்சிகள் தீவிரம் காட்டி வருகின்றன.

அ.தி.மு.க கூட்டணியில் தே.மு.தி.கவை கொண்டு வருவதற்கான பேச்சு வார்த்தைகள் நடப்பதாக, ஊடகங்களில் செய்திகள் வெளியாகின.

கடந்த பிப்ரவரி 15 ஆம் தேதியன்று கோவை ஈஷா யோகா மையத்தில் நடைபெற்ற சிவராத்திரி நிகழ்வில் தே.மு.தி.க பொதுச் செயலாளர் பிரேமலதா கலந்து கொண்டார். இதே நிகழ்வில் அ.தி.மு.க முன்னாள் அமைச்சர் எஸ்.பி.வேலுமணியும் பங்கேற்றார். அவருடன் பிரேமலதா பேசியபோது எடுக்கப்பட்ட புகைப்படங்கள் வெளியாகின. இதன்மூலம், கூட்டணி உறுதிப்படுத்தப்படலாம் என ஊடகங்களில் பேசப்பட்டது.

ஆனால், அடுத்த மூன்று நாட்களில் தி.மு.க கூட்டணியை தே.மு.தி.க தலைமை தேர்வு செய்துள்ளது.

இப்படியொரு முடிவு எடுத்தது குறித்து செய்தியாளர் சந்திப்பில் தே.மு.தி.க பொதுச் செயலாளர் பிரேமலதா விளக்கம் அளித்தார். அவர் பேசும்போது, “கட்சி நிர்வாகிகள் மத்தியில் வாக்குப்பெட்டி வைத்து அனைவரின் கருத்தையும் கேட்டோம். இந்தமுறை தி.மு.க கூட்டணியை அவர்கள் விரும்பினர்” எனக் கூறினார்.

“தொண்டர்களின் முடிவையே என்னுடைய முடிவாக ஏற்றுக் கொண்டு அறிவித்துள்ளோம்” என்கிறார் பிரேமலதா.

கருணாநிதி - விஜயகாந்த் நட்பு

அப்போது, கருணாநிதிக்கும் மறைந்த தே.மு.தி.க தலைவர் விஜயகாந்துக்கும் இடையிலான நட்பு குறித்து பிரேமலதா விவரித்தார். “இருவரும் பல ஆண்டுகளாக நட்பில் இருந்தனர். எங்கள் திருமணத்தைக் கருணாநிதி தான் நடத்தி வைத்தார்” எனக் கூறினார்.


2016-ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலின்போது தே.மு.தி.க உடன் கூட்டணி வைப்பதற்கு தி.மு.க தலைவர் கருணாநிதி பெரிதும் ஆர்வம் கட்டினார். இதுகுறித்து அவர் செய்தியாளர் சந்திப்பில் பேசும்போது, “பழம் நழுவி பாலில் விழப் போகிறது” எனப் பேசினார்.

இதனைக் குறிப்பிட்டுப் பேசிய பிரேமலதா, “எத்தனையோ முறை பேசப்பட்டாலும் கூட்டணி என வரும்போது நிறைவேறாமல் இருந்தது. பத்து ஆண்டுகள் கழித்து தேன் கலந்த பாலில் இது விழுந்துள்ளது” என்கிறார்.

அ.தி.மு.க கூட்டணியை தவிர்த்தது குறித்து செய்தியாளர்கள் கேட்டபோது, “இந்தமுறை ஒட்டுமொத்த கட்சியின் விருப்பமாக தி.மு.க கூட்டணி இருந்தது” எனத் தெரிவித்தார்.

“மார்ச் 16-ஆம் தேதியன்று நடக்க உள்ள மாநிலங்களவை தேர்தலில் தி.மு.கவுக்கு நான்கு இடங்கள் கிடைக்க உள்ளன. அதில், ஓரிடத்தை தே.மு.தி.கவுக்கு கொடுப்பதற்கான வாக்குறுதியை வழங்கியிருக்கவே வாய்ப்புகள் அதிகம்” எனக் கூறுகிறார், மூத்த பத்திரிகையாளர் மாலன்.

அ.தி.மு.க கூட்டணியில் நீண்ட காலமாக மாநிலங்களவை இடத்தை







தே.மு.தி.க கேட்டு வருவதையும் அவர் மேற்கோள் காட்டினார்.

2024 நாடாளுமன்றத் தேர்தலின் போது அ.தி.மு.க கூட்டணியில் தே.மு.தி.கவுக்கு ஐந்து இடங்கள் ஒதுக்கப்பட்டன. அப்போது, மாநிலங்களவை இடம் தொடர்பாக வாக்குறுதி வழங்கப்பட்டதாக செய்தியாளர் சந்திப்பின்போது பிரேமலதா தெரிவித்தார்.

ஆனால், “அவ்வாறு எந்த வாக்குறுதிகளும் வழங்கப்படவில்லை” என அ.தி.மு.க பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி மறுத்திருந்தார்.

மேலும் அதிமுகவை சேர்ந்த இருவருக்கு மாநிலங்களவை இடங்களை அ.தி.மு.க தலைமை ஒதுக்கியது.

இதனை எதிர்பார்க்காத பிரேமலதா, கடந்த ஆண்டு மே மாதம் செய்தியாளர் சந்திப்பில், “தி.மு.க கூறியபடி கமலுக்கு மாநிலங்களவை இடம் கொடுத்துள்ளனர். அரசியலில் நம்பிக்கை தான் முக்கியம். அப்போது தான் மக்கள் அவர்களை நம்புவார்கள்” என அவர் கூறினார்.

இதனைக் குறிப்பிட்டுப் பேசிய மூத்த பத்திரிகையாளர் மாலன், “மாநிலங்களவை இடத்தைக் கொடுக்க அ.தி.மு.க மறுத்துவிட்டது. இந்தமுறை சட்டமன்றத் தொகுதிகளை ஒற்றை இலக்கத்தில் கொடுத்தாலும் தே.மு.தி.க பெற்றுக் கொள்ளலாம். அவர்களுக்கு மாநிலங்களவை இடம் முக்கியமானதாக உள்ளது” என்கிறார்.

இதே கருத்தை முன்வைத்து பேசிய மூத்த பத்திரிகை யாளர் ஷ்யாம், “மாநிலங்களவை இடத்தை வைத்தே தே.மு.தி.க இந்த முடிவை எடுத்துள்ளது. அ.தி.மு.கவில் ஜெயக்குமார் உள்பட பல்வேறு மூத்த நிர்வாகிகள் மாநிலங்களவை இடத்தை எதிர்பார்த்துக் காத்துள்ளனர்” என்கிறார்.

ராஜ்யசபா தேர்தல் தேதி அறிவிக்கப்பட்ட மறுநாள் கூட்டணி முடிவாகியுள்ளதே? என செய்தியாளர்கள் பிரேமலதாவிடம் கேட்டபோது, “ஒரு கட்சிக்கு என்ன தேவை உள்ளதோ அதையெல்லாம் பேசுவோம். கூட்டணிக்கு தலைமையில் உள்ள ஸ்டாலின் அறிவித்தால் தான் சரியாக இருக்கும்” என்றார்.

“தி.மு.க வசம் நான்கு மாநிலங்களவை இடங்கள் உள்ளதால் அவர்களால் ஓரிடத்தைக் கொடுக்க முடியும். அ.தி.மு.க நிர்வாகிகளைத் தாண்டி வேறு கட்சிக்கு எடப்பாடி பழனிசாமி அந்த வாய்ப்பை கொடுத்தால் கட்சிக்குள் பிரச்னை ஏற்படும்” எனவும் ஷ்யாம் குறிப்பிட்டார்.

தொடர்ந்து பேசிய ஷ்யாம், “சட்டமன்றத் தேர்தலில் தேசிய ஜனநாயகக் கூட்டணியை நோக்கி தே.மு.தி.க நகரலாம் என எதிர்பார்த்த சூழலில் இப்படியொரு நகர்வை யாரும் எதிர்பார்க்கவில்லை” என்கிறார்.

**தே.மு.தி.க எடுத்த முடிவு சரியானதா?**

“தொடர் தோல்விகளை எதிர்கொண்டு வரும் தே.மு.தி.கவுக்கு இந்தக் கூட்டணி மிக முக்கியமானது” எனக் கூறுகிறார், மூத்த பத்திரிகையாளர் ஷ்யாம்.

தே.மு.தி.க தலைவர் விஜயகாந்தை தனது கூட்டங்களில் த.வெ.க தலைவர் விஜய் முன்னிலைப்படுத்திப் பேசி வந்தார்.

“விஜயுடன் கூட்டணி சேருவதற்கும் தே.மு.தி.க தயாராக இல்லை என்பதையே பிரேமலதாவின் முடிவு காட்டுகிறது” எனக் கூறுகிறார் ஷ்யாம்.

“விஜயகாந்த்தின் ஒரு மகன் (விஜய பிரபாகரன்) விருதுநகர் மக்களவைத் தொகுதியில் போட்டியிட்டார். இன்னொரு மகன் (சண்முக பாண்டியன்) சினிமாவில் இருக்கிறார். அப்படியிருக்கும்போது இன்னொரு திரை நட்சத்திரம் பின்னால் அவர்கள் செல்வதற்கு வாய்ப்பில்லை” எனவும் அவர் குறிப்பிட்டார்.

காங்கிரஸ் கட்சிக்கு என்ன பாதிப்பு?

“தற்போது கூட்டணியில் தே.மு.தி.க வருவதன் மூலம் காங்கிரஸ் கட்சிக்கு ஒதுக்கப்படும் இடங்களை தி.மு.க குறைப்பதற்கான வாய்ப்புகள் உள்ளன” எனக் கூறுகிறார் மூத்த பத்திரிகையாளர் மாலன்.

“தே.மு.தி.கவை ஒரு காரணமாக தி.மு.க முன்வைக்கக் கூடும். அந்தவகையில், காங்கிரஸ் கட்சிக்கான முக்கியத்துவம் குறையலாம்” என அவர் தெரிவித்தார்.

கடந்த 2021 சட்டமன்றத் தேர்தலில் 25 தொகுதிகளில் காங்கிரஸ் கட்சி போட்டியிட்டது. “இந்த முறை 25 தொகுதிகளுக்கும் மேல் தி.மு.க கொடுப்பதற்கும் வாய்ப்பில்லை” என்கிறார் மூத்த பத்திரிகையாளர் ஷ்யாம்.

“சுமார் 170 தொகுதிகளுக்கும் மேல் போட்டியிடுவது என தி.மு.க முடிவெடுத்தால் காங்கிரஸ் கட்சிக்குக் கொடுக்கப்படும் தொகுதிகளில் மாற்றம் வரலாம்” எனவும் அவர் தெரிவித்தார்.

ஆனால், இந்தக் கூற்றை மறுத்துப் பேசுகிறார் தி.மு.க தலைமைக் கழக செய்தித் தொடர்பு செயலாளர் கான்ஸ்டன்டைன்.

தேமுதிக வருகையை “காங்கிரஸ் கட்சிக்கு குறைவான இடங்களை ஒதுக்கலாம் என்ற ரீதியில் பார்க்க வேண்டிய அவசியம் இல்லை.” எனக் கூறுகிறார்.

“இதுபோன்ற அனுமானங்களை நோக்கிச் செல்ல வேண்டியதில்லை” எனக் கூறும் கான்ஸ்டன்டைன், “அனைவரின் சுயமரியாதையும் அங்கீகாரத்தையும் காக்கும் வகையில் முதலமைச்சர் முடிவை எடுப்பார்” என்கிறார்.

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் துணைத் தலைவர் ஆ.கோபண்ணாவிடம் பேசியபோது,

“கூட்டணிக்குள் தே.மு.தி.க வந்ததை வரவேற்கிறோம். இந்த நேரத்தில் தே.மு.தி.க இணைவதன் மூலம் தி.மு.க கூட்டணியின் வெற்றி உறுதிப்படுத்தப்பட்டுள் ளது” எனக் கூறுகிறார்.

காங்கிரஸ் கட்சிக்கான இடங்கள் குறையும் எனக் கூறுவது தேவை யற்ற அனுமானம் எனக் கூறும் கோபண்ணா, “அவர்கள் வருவதன் மூலம் எங்களுக்கான இடங்கள் குறையாது. அதற்கும் இதற்கும் தொடர்பு இல்லை. தி.மு.க மற்றும் காங்கிரஸ் கட்சிகளின் தலைமைகளுக்கு இடையில் சரியான புரிதல் உள்ளது. அவை பேசி தீர்க்கப்படும்” எனத் தெரிவித்தார்

“கூட்டணிகளை மாற்றுவது குறித்து தே.மு.தி.க கவலைப்படுவதில்லை. விஜயகாந்த் சந்தித்த கடைசி தேர்தலிலும் அக்கட்சி சரிவை சந்திக்க வேண்டிய நிலை ஏற்பட்டது” என்கிறார் மாலன்.

“விஜயகாந்த் மறைந்த பிறகு தே.மு.தி.கவுக்கு பெரிதாக செல்வாக்கு இல்லை” எனவும் அவர் குறிப்பிட்டார்.

ஆனால், “தேசிய ஜனநாயகக் கூட்டணியில் தே.மு.தி.க இல்லாதது பாதிப்பாக பார்க்கப்படலாம்” எனக் கூறுகிறார் ஷ்யாம். “இதனால் ஏற்படும் நஷ்டம் குறித்து கட்சிகள் ஆலோசிக்கும். அதற்கான மாற்று வழிகளை அவர்கள் ஆராய்வதற்கான வாய்ப்புகள் உள்ளன” எனக் கூறுகிறார்.

(பிபிசி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நான்காவது ஆண்டில் உக்ரைன் போர்: பேச்சுவார்த்தை இழுபறியும் தோல்விகளும்!

- ஐங்கரன் விக்கினேஸ்வரா

**உக்ரைன்** போர் நான்காம் ஆண்டை நெருங்கும் நிலையில், உலக நாடுகள் மேலும் ரஷ்யாவுக்கு அழுத்தம் கொடுக்க உக்ரைனிய ஜனாதிபதி ஜெலென்ஸ்கி வலியுறுத்தியுள்ளார். அத்துடன் ரஷ்யா சமாதான பேச்சுவார்த்தைகளிலும் பங்கெடுக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

போரையும் தீவிரமாக நடத்திக் கொண்டு, அமைதி பேச்சுவார்த்தையை நடத்த வேண்டும் என்பதே ரஷ்யாவின் நோக்கமாக தொடர்கிறது. ஆனாலும் எஞ்சியிருக்கும் முக்கிய பிராந்தியங்களை விட்டுத்தருவதில்லை என்பதில் உறுதியாக இருக்கிறது உக்ரைன்.

அதேவேளை சமாதான பேச்சுவார்த்தைகள் நடந்தாலும் பிணைக்கைதிகள் விடுதலையைத் தவிர வேறெதுவும் நடக்கவில்லை. ஆனால் அமெரிக்கா வரும் ஜூன் மாதத்தில் போர் நிறுத்தத்துக்கு உடன்பட உக்ரைனை வலியுறுத்தி வருகிறது.

**பேச்சுவார்த்தை இழுபறி:**

உக்ரைன் மற்றும் ரஷ்யா இடையே கடந்த நான்கு ஆண்டுகளுக்கும் மேலாக நடந்து வரும் போர், இரு தரப்பிலும் பெரும் அழிவையும் இழப்புகளையும் ஏற்படுத்தியுள்ளது. உக்ரைன் அதிபர் விலோடிமிர் ஜெலன்ஸ்கி பலமுறை போர் நிறுத்தத்திற்கு அழைப்பு விடுத்த போதிலும், ரஷ்யா போரை நிறுத்த சிறிதும் ஆர்வம் காட்டவில்லை என்று மேற்குலக ஊடகங்கள் தெரிவிக்கின்றன. அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளின் ஆரம்பகட்ட அழுத்தத்தின் காரணமாக, ரஷ்யா உக்ரைனுடன் நேரடி பேச்சுவார்த்தைக்கு ஒப்புக்கொண்டது குறிப்பிடத்தக்கது.

ஆனால், இரண்டு சுற்று பேச்சுவார்த்தைகள் நடந்தும், போர் நிறுத்த ஒப்பந்தம் எதுவும் இதுவரை எட்டப்படவில்லை. போரை முடிவுக்கு கொண்டுவர ஜெலென்ஸ்கி விடுத்துள்ள வேண்டு கோளை ரஷ்யா தொடர்ந்து நிராகரித்து வருகிறது.

ஆனாலும் இந்த பேச்சுவார்த்தைகள் நடந்து கொண்டிருக்கும் வேளையிலும், ரஷ்யா தனது ராணுவ தாக்குதலைத் தொடர்ந்து வருகிறது. இடைவிடாது உக்ரைன் தலைநகர் கீவ் மீது ரஷ்யா ஏவுகணை தாக்குதல் நடத்தியும் வருகிறது.

தொடரும் தாக்குதலைத் தொடர்ந்து, போர் நிறுத் தத்தை அடைய ரஷ்யா மீது சர்வதேச சமூகம் மேலும் அழுத்தத்தை பிரயோகிக்க வேண்டும் என்று அதிபர் ஜெலன்ஸ்கி தனது வேண்டுகோளை மீண்டும் தீவிரப்படுத்தியுள்ளார்.

தாக்குதல்களை தொடர்ந்து நடத்தி வருவதாகவும், ரஷ்யா போர் நிறுத்தத்தை நிராகரித்து, போரையே தேர்ந்தெடுத்துள்ளது என்பதை உலகிற்கு நினைவூட்டுகிறது என்று ஜெலன்ஸ்கி மேலும் தெரிவித்துள்ளார். அத்துடன் போரின் உண்மையான விலையை ரஷ்யா உணர அழுத்தம் கொடுக்க

> இறுதியான சமாதான ஒப்பந்தம் கையெழுத்தாகும்வரை எவ்வளவு தூரம் உக்ரைன் நிலத்தை கைப்பற்ற முடியுமோ, அதுவே ரஷ்யாவின் குறிக்கோளாக இருக்கும் என்றும் கூறப்படுகிறது. ரஷ்யா மற்றும் உக்ரைன் இடையே நடைபெற்று வரும் போர் தற்போது நான்காவது ஆண்டை கடந்துள்ளது

ஐரோப்பிய நாடுகள் உதவ வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

**ஜூனில் போரை முடிக்க அமெரிக்க உத்தரவு:**

எதிர்வரும் ஜூன் மாதத்தில் போரை முடிக்க அமெரிக்க அதிபர் உக்ரேனிய அதிபருக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார்.

ஆனாலும் போரை நிறுத்தி விடுவார்கள் என்ற நம்பிக்கை எவருக்கும் இல்லை என்பதே உண்மையாகும். 24 பெப்ரவரி 2022 அன்று தொடங்கிய போரை வருகிற ஜூன் மாதத்துக்குள் முடித்தால் போதும் என்று அமெரிக்கா கூறியுள்ளதை உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி ஏற்றுக் கொள்வாரா என்று இதுவரை தெரிவிக்கவில்லை.

2022இன் பின்னர் உக்ரைனின் நான்கு புதிய பிராந்தியங்களை இப்போரின் மூலம் ரஷ்யா கைப்பற்றியுள்ளது. இப்போது இன்னும் இரண்டு பிராந்தியங்களான கார்கீவ், சுமியைக் கைப்பற்ற ரஷ்யா குறிவைத்துள்ளது. இவை இரண்டும் ரஷ்யாவோடு உக்ரைன் கொண்டிருக்கும் கிழக்கு எல்லை பிராந்தியங்கள் ஆகும்.

தலைநகர் கீவ்வுக்குப் பிறகு உக்ரைனின் அடுத்த பெரிய நகரம் கார்கீவ். தற்போது இவற்றின் எல்லைப்புற கிராமங்களில் முன்னேறி வருகிறது ரஷ்யப்படைகள். கிராமம் கிராமமாக முன்னேறி பல நகரங்களையும் கைப்பற்றி உள்ளது ரஷ்யாவின் படைகள். இறுதியான சமாதான ஒப்பந்தம் கையெழுத்தாகும்வரை எவ்வளவு தூரம் உக்ரைன் நிலத்தை கைப்பற்ற முடியுமோ, அதுவே ரஷ்யாவின் குறிக்கோளாக இருக்கும் என்றும் கூறப்படுகிறது.

**55 ஆயிரம் உக்ரைன் வீரர்கள் பலி**

ரஷ்யாவுடனான போரில் 55 ஆயிரம் உக்ரைன் வீரர்கள் பலி என அறிவிக்கப்பட்டுள்ளது. ரஷ்யா தொடரும் தாக்குதல்களால் கீவ்வில் உள்ள பல கல்லறைகளும் சேதமடைந்துள்ளன. போரின் முடிவில் உக்ரைனிய எல்லைகளோடு கல்லறைகளும் மாற்றம் பெறவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. உக்ரைன் ஜனாதிபதி விலோடிமிர் ஜெலன்ஸ்கி தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு அளித்த பேட்டியில், ரஷ்யாவுக்கு எதிரான போரில் இதுவரை சுமார் 55 ஆயிரம் உக்ரைன் வீரர்கள் உயிரிழந்துள்ளதை ஒப்புக் கொண்டுள்ளார்.

நீண்ட காலமாக இப்போரை முடிவுக்கு கொண்டு வர வேண்டும் என உலகின் பல நாடுகள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றன. இதற்காக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தீவிர முயற்சிகளில் ஈடுபட்டு வருவதாகவும் கூறப்படுகிறது. போர் தொடங்கியதிலிருந்து ரஷ்ய படைகள் பலமுறை இரசாயனப் பொருட்களை பயன்படுத்தியுள்ளதாக உக்ரைன் குற்றம் சாட்டியுள்ளது.

இந்த போரில் இரசாயன ஆயுதங்கள் பாவிக்கப்பட்ட குற்றச்சாட்டுகள் தற்போது எழுந்துள்ளன. தடைசெய்யப்பட்ட இரசாயன ஆயுதங்கள் உக்ரைனிய போர்க்களங்களில் 9,000 முறை பயன்படுத்தப்பட்டுள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளது. உக்ரைனிய அதிகாரிகள் மற்றும் ஐரோப்பிய உளவுத்துறை தகவல்களின்படி, சிஸ், சிஎன் போன்ற நச்சு கட்டுப்பாட்டு வாயுக்கள் கையெறி குண்டுகள் மூலம் பயன்படுத்தப்பட்டுள்ளன என்று தெரிகிறது.

முதலாம் உலகப் போரில் பயன்படுத்தப்பட்ட குளோரேபிக்ரின் இந்த போர்க்களங்களில் பயன்படுத்தப்பட்டு உள்ளன என கண்டறியப்பட்டுள்ளது. அத்துடன் பதுங்கு அகழிகளில் மறைந்திருக்கும் வீரர்களை வெளியேற்ற டிரோன்கள் மூலம் நச்சு வாயுக்கள் செலுத்தப்படுகின்றது என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

சர்வதேச போர் ஆய்வுகள் மையம் உக்ரைனிய போர்க்களத்தில் நச்சுப் பொருட்களின் இருப்பை உறுதிப்படுத்தியுள்ளது. ஆனால், பெருமளவிலான உயிரிழப்புகளை ஏற்படுத்தும் அளவிலான பயன்பாடு இன்னும் அதிகாரபூர்வமாக உறுதி செய்யப்படவில்லை.

ஆனாலும் உறுதிப்படுத்தப்படாத தகவல்களின்படி, 2022ஆம் ஆண்டு தொடங்கிய இந்த மோதலில் இரு தரப்பையும் சேர்ந்த சுமார் 5 லட்சம் பேர் உயிரிழந்துள்ளதாகவும், 15 லட்சம் பேர் வரை காயமடைந்துள்ளதாகவும் சில தகவல்கள் தெரிவிக்கின்றன.

சர்வதேச போர் ஆய்வுகள் மையம் வெளியிட்டுள்ள அறிக்கையின் படி, இந்தப் போரில் ரஷ்யா தரப்பில் சுமார் 3.25 லட்சம் பேரும், உக்ரைன் தரப்பில் சுமார் 1.4 லட்சம் பேரும் உயிரிழந்திருக்கலாம் எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

ரஷ்யாவின் எதிர்ப்புத் திறன்:

இந்த போரின் பின்னர் ரஷ்யா ஆயுத ஏற்றுமதி உயர்வு பாரியளவில் அதிகரித்துள்ளது. ரஷ்யாவை தனிமைப்படுத்தி 15 பில்லியன் டாலர் அளவுக்கு இராணுவ வர்த்தகம் செய்துள்ளது. 2025இல், மேற்கத்திய தடைகளை மீறி, ரஷ்யா 30க்கும் மேற்பட்ட நாடுகளுக்கு 15 பில்லியன் மதிப்பிலான இராணுவ உபகரணங்கள் ஏற்றுமதி செய்ததாக அதிபர் புட்டின் அறிவித்துள்ளார்.

போரின் பின்னர் ரஷ்யா உலகளவில் தனிமைப்படுத்தப்படவில்லை என்பதற்கு சான்றாக, தனது ஆயுத தளவாடங்களை ஏற்றுமதி செய்து வருகிறது. மேலும் ரஷ்யாவின் அதிவேக ஏவுகணையான 'ஓர்சேனிக்' வளர்ச்சியானது ஐரோப்பாவுக்கான நேரடி எச்சரிக்கையாக கருதப்படுகிறது. இதுவே நேட்டோவுக்கு அனுப்பப்பட்ட பலத்த எச்சரிக்கை என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

போலந்து எல்லைக்கு மிக அருகில், லூவோவ் நகரம் அருகே, ரஷ்யா அதிவேக ஓர்சேனிக் ஏவுகணைகளை அண்மையில் பயன்படுத்தியுள்ளது. இவை இருபது நிமிடங்களுக்குள் ஐரோப்பிய தலைநகரங்களை அடையும் திறன் கொண்டவை என்று கூறப்படுகிறது.

இதில் சீன தயாரிப்பு உதிரி பாகங்கள் பலவும் பயன்படுத்தப்பட்டதாக வரும் தகவல்கள், ரஷ்யாவின் ஆயுதத் திட்டத்திற்கு சீனாவும் முழுமையாக ஆதரவு அளித்து வருவதை வெளிப்படுத்தி இருக்கிறது. ●




> **எதிர் வரும் ஜூன் மாதத்தில் போர் நிறுத்தத்துக்கு உடன்பட உக்ரைனை வலியுறுத்தும் அமெரிக்கா அதன் பின்னர், தொடர்ந்து போருக்கான ஆயுத - நிதி உதவிகளை வழங்குமா என்பது சந்தேகமே. அதேவேளை ரஷ்யாவுடனான போரில் 55 ஆயிரம் உக்ரைன் வீரர்கள் பலி என அறிவிக்கப்பட்டுள்ளது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரிட்டனில் மனைவியைக் கொன்ற இலங்கையருக்கு ஆயுள் தண்டனை

லண்டன், பெப். 22

பிரிந்து வாழ்ந்த தனது மனைவி வேறொருவருடன் பழகியதால் ஏற்பட்ட ஆத்திரத்தில், அவரை வாகன நிறுத்துமிடத்தில் கத்தியால் குத்திக்கொலை செய்த 37 வயது இலங்கையருக்கு பிரித்தானிய நீதிமன்றம் ஆயுள் தண்டனை விதித்துள்ளது.

32 வயதுடைய நிரோதா கல்பனி, 2025 ஒகஸ்ட் 21 ஆம் திகதி கார்டிப்பின் ரிவர்சைட் பகுதியில் உள்ள வாகன நிறுத்துமிடம் ஒன்றில் வைத்து படுகொலை செய்யப்பட்டார்.

பல மாதங்களாக நிரோதாவைப் பிரிந்து வாழ்ந்த திசர வேரகலகே என்ற நபர், ஆரம்பத்தில் இந்தக் குற்றச்சாட்டை மறுத்த போதிலும், பின்னர் ஜனவரி மாதம் நியூபோர்ட் கிரவுன் நீதிமன்றத்தில் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டார். இந்த நிலையில் அவருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட் டுள்ளது.(எ)

# 84 நாட்களாக முடங்கியுள்ள ஹற்றன் ரயில் நிலையம்

நுவரெலியா, பெப். 22

டித்வா புயல் காரணமாக மலையகத்துக்கான ரயில் சேவைகள் பாரிய அளவில் பாதிக்கப்பட்டன.

இதனால், ஹற்றன் ரயில் நிலையம் கடந்த 84 நாட்களாக ஆள் நடமாற்றமின்றி வெறிச்சோடி காணப்படுகின்றது.

இந்த ரயில் நிலையத்துக்கு நாளாந்தம் உள்நாட்டு வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் உட்பட அன்றாடம் ரயிலை பயன்படுத்தும் ஆயிரக் கணக்கானோர் வருவது வழமை.

ஹற்றன் ஊடாக கடந்த காலங்களில் நாளொன்றுக்கு 14 ரயில் சேவைகள் இடம்பெற்றதாகவும் அந்த சேவைகள் இடம்பெறாமையால் பெருந்தோட்ட பகுதிகளை சேர்ந்த மக்களும் வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளும் பாரியளவில் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (எ)

## அரசாங்கங்களை பதவி....

(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

ரீதியான தேர்தல் என்று அழைக்கமுடியுமா? காங்கிரஸ் கட்சியை தடைசெய்த பிறகு இந்தியாவில் ஒரு தேர்தல் நடத்தப்பட்டிருந்தால் அதை ஜனநாயகத்தின் வெற்றியாக அமைந்திருக்குமா? நேபாளத்தில் ஐக்கிய மார்க்சிஸ்ட் - லெனினிஸட் கட்சியை அல்லது மாவோயிஸ்டுக்களை தடைசெய்துவிட்டு தேர்தலை நடத்தியிருந்தால் அதை ஜனநாயக மாற்றம் என்று அழைத்திருக்க முடியுமா? என்று 'தி இந்து" பத்திரிகையின் சர்வதேச விவகார ஆசிரியர் ஸ்ரான்லி ஜொனி சமூக ஊடகப் பதிவு ஒன்றில் தொடர்ச்சியான கேள்விகளை எழுப்பினார்.

அமைதியான முறையில் தேர்தல் நடைபெற்றதை பல அவதானிகள் பாராட்டியிருக்கின்ற போதிலும், அவாமி லீக் மீதான தடை தேர்தல் செயன்முறையின் ஒரு அடிப்படைக் குறைபாடு என்பதை அவர்கள் மறந்துவிட்டார்கள் போன்று தெரிகிறது என்றும் அந்த தடையே இஸ்லாமியவாத அரசியல் கட்சியை பலப்படுத்தியிருக்கிறது என்றும் அவர் கூறியிருக்கிறார்.

அடுத்ததாக நேபாளத்தில் தேர்தல் நெருங்குகின்ற நிலையில், கடந்த வருடம் செப்டெம்பரில் பிரதமர் கே. பி. சர்மா ஒலியின் அரசாங்கத்தை கவிழ்த்த. கிளர்ச்சிக்கு தலைமை தாங்கிய இளைய தலைமுறையைச் சேர்ந்த தலைவர்கள் நேபாள காங்கிரஸ், நேபாள கம்யூனிஸ்ட் கட்சிகள் போன்ற பாரம்பரிய அரசியல் கட்சிகளில் இடம்பிடிப்பதற்கு முண்டியடித்துக் கொண்டிருப்பதாக செய்திகள் கூறுகின்றன. பங்களாதேஷின் தேசிய குடிமக்கள் கட்சியின் தலைவர்களைப் போன்று நேபாள போராட்டக்காரர்களும் தேர்தல்களில் தனித்துப் போட்டியிடுவதற்கு துணிச்சல் கொள்ளவில்லை என்றே தெரிகிறது.

பங்களாதேஷில் மக்கள் கிளர்ச்சிக்கு பின்னரும் கூட பாரம்பரியமான அரசியல் கட்சியொன்றையே தேர்தல் மூலமாக மக்கள் அதிகாரத்துக்கு கொண்டு வந்திருக்கிறார்கள். ஆனால், இலங்கையில் பாரம்பரியமான கட்சிகளை நிராகரித்து மக்கள் முன்னர் ஒருபோதுமே ஆட்சியதிகாரத்தை அனுபவிக்காத அரசியல் கட்சியை பதவிக்கு கொண்டுவந்தார்கள். இதை இரு நாடுகளினதும் ஆட்சி மாற்றங்களுக்கு இடையிலான ஒரு வேறுபாடாக நோக்க முடியும்.

இந்த நாடுகளில் வீதிப் போராட்டங்களின் மூலமாக அரசாங்கங்களை அடிபணிய வைத்து அரசியல் மாற்றத்துக்கான அத்திபாரத்தை அமைத்த இளந்தலைமுறைச் சக்திகளினால் தேர்தல்களில் ஏன் மக்களின் ஆதரவைப் பெறமுடியாமல் இருக்கிறது? தேர்தல்களுக்கு பின்னரான அரசியலின் அதிகாரக் கட்டமைப்புக்களை தீர்மானிப்பதில் அவற்றினால் செல்வாக்கு செலுத்த முடியாமல் இருக்கிறது? இறுதியில் கிளர்ச்சிகளின் பயன்விளைவுகளை ஏதாவது ஒரு பாரம்பரிய கட்சியே அனுபவிக்கக் கூடியதாக இருப்பதற்கு காரணம் என்ன?

போராட்டக்காரர்களை பொறுத்தவரை, தேர்தல்களில் வெற்றி பெறுவதை விடவும் அரசாங்கங்களை கவிழ்ப்பது சுலபமாக இருக்கிறது என்பதற்கு தெற்காசியாவில் இலங்கைக்கு அடுத்த உதாரணமாக பங்களாதேஷ் விளங்குகிறது. அடுத்து நேபாளத்திலும். நேபாள காங்கிரஸ் அல்லது கம்யூனிஸ்ட் கட்சிகள் போன்ற பாரம்பரிய கட்சிகளே மீண்டும் அதிகாரத்துக்கு வருவதை தடுக்கக்கூடிய சூழ்நிலை இல்லை.

சமூக ஊடகங்கள் செல்வாக்குச் செலுத்துகின்ற இன்றைய நவீன உலகில் கிளர்ச்சிகளை முன்னெடுக்கின்ற இயக்கங்கள் மக்களை அணிதிரட்டி வீதிப் போராட்டங்களின் ஊமூலமாக அரசாங்கங்களை கவிழ்ப்பதில் வெற்றி பெறக்கூடியதாக இருக்கின்ற அதேவேளை, தேர்தல்களின் மூலமாக அதிகாரத்துக்கு வரக்கூடிய அரசியல் சக்திகளாக தங்களை மாற்றிக்கொள்ள அவற்றினால் முடியாமல் இருக்கிறது என்பதை அரபு வசந்தம் தொடக்கம் தெற்காசிய மக்கள் கிளர்ச்சிகள் வரை நிரூபித்து நிற்கின்றன.




## காட்சிப் பொருளாகும்...

(06ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்தத் தொடர் ஓட்டத்தில், அடுத்த தலைமுறைக்கு உறவுகளின் பெயரோ அல்லது அவற்றின் ஆழமோ தெரியாமல் போகும் அபாயம் உள்ளது.

இந்த மாற்றத்துக்குப் பின்னால் ஓர் ஆபத்தான உளவியல் ஒளிந்திருக்கிறது. "தான் மகிழ்ச்சியாக இருக்கிறோம்" என்பதைவிட "தான் மகிழ்ச்சியாக இருப்பதாக மற்றவர்களுக்குக் காட்டிக்கொள்வதில்" மனிதர்கள் அதிக ஆர்வம் காட்டுகிறார்கள். மற்றவர்களின் அங்கீகாரத்துக்காக வாழத் தொடங்குவது ஒரு சமூகத்தின் ஆன்ம பலத்தைக் குறைத்துவிடும்.

நிஜமான அன்யோன்யம் குறைந்து, மேலோட்டமான தொடர்புகள் அதிகரிப்பது மனிதர்களைத் தனிமைக்குள் தள்ளுகிறது.

தொழில்நுட்பம் என்பது நம் வாழ்வை எளிதாக்க வேண்டுமே தவிர, நம் உணர்வுகளை ஆக்கிரமிக்கக் கூடாது. நிழற்படங்கள் எடுப்பதைக் குறைத்துவிட்டு, மனிதர்களை நேரில் பார்ப்போம். திரைகளுக்குப் பின்னால் ஒளிந்திருப்பதை விடுத்து, நிஜ உலக உரையாடல்களில் ஈடுபடுவோம். குழந்தைகளுக்கு உறவுகளின் உன்னதத்தை வாழ்த்தும் விதமாக நம் நேரத்தைச் செலவிடுவோம்.

வெறும் பதிவுகளுக்காகக் கொண்டாடப்படும் எந்த ஒரு நிகழ்வும் வரலாற்றில் நிற்காது. நினைவுகளில் மட்டுமே வாழும் தருணங்கள் என்றும் அழியாது. ஆரவாரமான விளக்குகளும், நிழற்படக் கருவிகளும் அணைந்த பிறகு மிஞ்சப் போவது என்னவோ நாம் பகிர்ந்துகொண்ட அந்த அன்பின் உரையாடல்கள் மட்டும்தான். எனவே, பிம்பங்களைத் தேடுவதை நிறுத்திவிட்டு, மீண்டும் மனிதர்களைத் தேடத் தொடங்குவோம்.

அப்போதுதான் நம் பண்பாடு சிதையாமல் அடுத்த தலைமுறைக்குக் கடத்தப்படும்.

## நிலையான தீர்வுகள்...

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்த அத்தி பாரத்தில் இருந்துதான் சகல குடிமக்களையும் சமத்துவமாக நடத்துவது தொடர்பிலும் இனவாதமின்மை, மத வாதமின்மை மற்றும் பாரபட்சமின்மை ஆகியவை தொடர்பிலும் தற்போதைய அரசாங்கம் கொண்டிருக்கும் பற்றுறுதி வருகிறது.

ஆனால், அடையாளபூர்வமான அங்கீகாரமும் அன்றாட வாழ்வில் பாதுகாப்பும் போதுமானவை அல்ல என்பதை. தேசிய சமாதானப் பேரவை நடத்திய ஆய்வு வெளிக்காட்டுகிறது. ஆய்வில் கேள்விகளுக்கு பதிலளித்தவர்கள் தனிப்பட்ட பாதுகாப்பு, காணாமல்போனவர்கள் தொடர்பிலான உண்மை, காணிகளை மீளப்பெறுதல், மொழிப்பயன்பாடு மற்றும் இராணுவ ஈடுபாடு குறைப்பு ஆகியவற்றுக்கே முன்னுரிமை கொடுக்கிறார்கள். பட்டப்படிப்பை முடித்த பிறகு வேலைவாய்ப்பு, உள்ளூர்ப் பொருளாதார வாய்ப்புக்கள், சொத்துக்களை பாதுகாப்பதற்கான உரிமை மற்றும் வெளிநாடுகளுக்கு புலம்பெயர்வதை விடுத்து யாழ்ப்பாணத்திலேயே தொடர்ந்தும் வாழ்வதற்கு ஏதுவான சூழ்நிலைகள் ஆகியவற்றையும் அவர்கள் கேட்கிறார்கள்.

தீர்வுகள் நிலைபேறானவையாக இருக்க வேண்டும் என்றால் அவை ஏதாவது ஒரு கட்சியினால் ஒருதலைப்பட்சமாக திணிக்கப்படுபவையாக இருக்கக்கூடாது. நாட்டின் ஆழமான பிரச்சினைகளை சகல தரப்புகளும் கூட்டாகச் சேர்ந்து அடையாளம் கண்டு அவற்றுக்கான தீர்வுகளை கண்டறிவதிலும் எச்சரிக்கையுடன் கூடிய நம்பிக்கையின் கீழ்ப்பரப்பில் இருக்கும் எதிர்மறையான உணர்வுகளை கையாளுவதில் காண்பிக்கும் விருப்பத்திலும் இருந்தே தீர்வுகள் மேலெழ வேண்டும். அப்போது மாத்திரமே பின்ன டைவுகளுக்கு எதிராக முன்னேற்றத்தைக் காணமுடியும் என்பதுடன் பரந்தளவில் அரசியல் சமுதாயத்தின் சம்மதத்தையும் பெறமுடியும்.

எதிர்க்கட்சிகளுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தி ஊடாட்டங்களைச் செய்வது மோதல் மனோபாவத்தைக் கொண்டதும் சமூகத்தில் பிளவுகளை ஏற்படுத்தியதுமான கடந்த கால அரசியல் கலாசாரத்தை தணிக்க உதவும். வேறுபட்ட சிந்தனையைக் கொண்டவர்களிடமிருந்து தனது தற்போதைய உறுப்பினர்களை தனிமைப்படுத்தி எவ்வாறு பாதுகாப்பது என்பதை மாத்திரமல்ல, பல மட்டங்களில் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதில் மற்றையவர்களையும் இணைத்து நம்பிக்கையை வென்றெடுத்து உறுப்புரிமையை விரிவுபடுத்துவது குறித்தும் அரசாங்கம் பரிசீலிக்க வேண்டும். இதற்கு விலகியிருத்தல் அல்ல ஊடாட்டமே தேவையாகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ் அரசு...

சிறீதரன் அந்தக் கடிதத்தை அனுப்பியுள்ளார் என்றும் அறியக் கிடைத்தது.

அரசியல் குழுவின் வழிகாட்டு விதிகள், ஒழுக்கக் கோவை மற்றும் அண்மையில் நடைபெற்ற அரசியல் குழுக் கூட்டங்களின் அறிக்கைகள் ஆகியவற்றை தனக்கு அனுப்பி வைக்குமாறு கோரியே சிறீதரன் எம்.பி. தமிழ் அரசின் பதில் தலைவருக்கு இந்தக் கடித த்தை அனுப்பியுள்ளார் என்று தெரியவருகின்றது.

ஆயினும் தான் தனிப்பட்ட அலுவலாக வெளிநாட்டுக்குச் செல்வதால் குறித்த விவரங்களை கட்சியின் பொதுச் செயலாளரிடம் பெற்றுக்கொள்ளுமாறு கட்சியின் பதில் தலைவர் சீ.வீ.கே. சிவஞானம் பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரனுக்கு பதில் அனுப்பியுள்ளார் என்றும் தெரியவந்துள்ளது. (அ)

## புலிகள்...

குற்றம்சாட்டியுள்ளார்.

தனது இங்கிலாந்து பயணத்தின்போது கேம்பிரிட்ஜ் யூனியன் அமைப்பில் நடைபெறவிருந்த உரை ரத்து செய்யப்பட்டமை குறித்து கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர், விடுதலைப் புலிகள் இராணுவ ரீதியாக தோற்கடிக்கப்பட்டிருந்தாலும், அதன் வெளிநாட்டு வலையமைப்பு இன்னும் சிந்தனை ரீதியாக செயற்பட்டு வருவதாகக் கூறினார்.

இங்கிலாந்து, ஐரோப்பிய நாடுகள் மற்றும் கனடா உள்ளிட்ட பகுதிகளில் தனி மாநில கோரிக்கையை ஆதரிப்போர் இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாண விஜயத்தின் போது ஜனாதிபதி அநுரகுமார வெளியிட்டதாகக் கூறப்படும் கருத்தை மேற்கோள் காட்டிய அவர், அரசின் சிந்தனைத் திசை குறித்து கேள்வி எழுப்பினார்.

“தெற்கிலுள்ள புத்த மதத்தவர்கள் அநுராதபுரம் வழியாகச் சென்று வழிபாடு செய்ய முடியவில்லை” என்ற கருத்து கவலைக்குரியது என அவர் தெரிவித்தார்.

இலங்கையின் தேசிய கொள்கையை பிரதிநிதித்துவப் படுத்தி பிரிட்டனுக்கு செல்லும் நிலையில், அங்குள்ள விடுதலைப்புலிகளின் ஆதரவாளர்கள் வர வேண்டாம் என கூறுவது ஏற்றுக்கொள்ள முடியாதது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

நாமல் ராஜபக்ஷ ஒக்ஸ்போர்ட் யூனியன் மற்றும் கேம்பிரிட்ஜ் யூனியன் ஆகியவற்றில் உரையாற்ற அழைக்கப்பட்டிருந்தார். எனினும், இங்கிலாந்தைத் தளமாகக் கொண்ட தமிழ் மாணவர் ஒன்றியங்கள் மற்றும் தமிழ் இளைஞர் அமைப்புகள் உள்ளிட்ட பல அமைப்புகள் எதிர்ப்பு தெரிவித்ததைத் தொடர்ந்து, கேம்பிரிட்ஜ் யூனியன் உரை ரத்து செய்யப்பட்டது. (அ)

## ஐ.நா.கட்டமைப்புடன்...

வெள்ளிக்கிழமை அமைச்சில் சந்தித்துப் பேசினார்.

இந்தச் சந்திப்பின்போது, இலங்கைக்கும் ஐக்கிய நாடுகளின் அமைப்புக்கும் இடையிலான தற்போதைய ஒத்துழைப்புகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

நாட்டின் முன்னுரிமைக்குரிய நிலையான அபிவிருத்தி இலக்குகளை எட்டுதல், தற்போதைய பொருளாதார சவால்களை முறியடிப்பதற்கான முயற்சிகள் மற்றும் அதற்குரிய ஒத்துழைப்புகள், அரச நிறுவனங்களின் வினைத்திறனை மேம்படுத்துதல், மனித உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்துதல் தொடர்பான விடயங்கள் என்பன குறித்து இதன்போது பேசப்பட்டது.

சர்வதேச சட்டங்களுக்கு மதிப்பளித்தல் மற்றும் விதிமுறைகளை அடிப்படையாகக் கொண்ட சர்வதேச ஒழுங்கைப் பேணுவதில் இலங்கையின் அர்ப்பணிப்பைப் பிரதி அமைச்சர் இதன்போது மீண்டும் உறுதிப்படுத்தினார்.

பன்முகத்தன்மை கொண்ட சர்வதேச கட்டமைப்பிற்குள் ஆக்கபூர்வமான முறையில் இணைந்து செயற்பட இலங்கை தயாராக இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகளுடனான நீண்டகால பங்காளித்துவத்தை இலங்கை உயர்வாக மதிக்கின்றது. அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி, மீளெழும் திறன் மற்றும் நிலையான அபிவிருத்தி ஆகியவற்றை நோக்கிய பயணத்தில் ஐக்கிய நாடுகளுடன் இணைந்து பணியாற்ற எதிர்பார்ப்பதாகவும் இச்சந்திப்பின் முடிவில் பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திர கூறினார். (அ)

## புங்குடுதீவில்...

அந்நபர் வழங்கிய வாக்குமூலத்தின் அடிப்படையில் சுமார் 5 மாதங்களின் பின்னர் புங்குடுதீவைச் சேர்ந்த மற்றுமொரு நபரும் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை மற்றுமொரு சந்தேக நபர் வெளிநாடு ஒன்றுக்கு தப்பிச் சென்றுள்கதாகவும் கூறப்படுகின்றது. (அ)

## மண்டைதீவில்...

வெளியிட்ட அறிக்கையில், இலங்கை கிரிக்கெட் நிறுவனம் தேசிய சுற்றுச்சூழல் சட்டத்தின் கீழ் பெற வேண்டிய கட்டாய சுற்றுச்சூழல் அனுமதிகளைப் பெறாமல் கட்டுமானப் பணிகளைத் தொடங்கியுள்ளதாக குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

தளத்தில் நிலத் தூர்வாரும் இயந்திரங்கள் இயங்கிவருவதுடன், கட்டுமானப் பொருட்களும் ஏற்கனவே கொண்டு வரப்பட்டுள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும், ஆரம்ப சுற்றுச்சூழல் ஆய்வு அல்லது சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆகியவற்றிற்கான அனுமதி மத்திய சுற்றாடல் அதிகார சபை மூலம் பெறப்படவில்லை என வனவிலங்கு மற்றும் இயற்கை பாதுகாப்பு சங்கம் தெரிவித்துள்ளது.

சட்டப்படி முன்கூட்டியே சுற்றுச்சூழல் அனுமதி பெறாமல் இத்தகைய மேம்பாட்டுப் பணிகளை ஆரம்பிப்பது சட்டவிரோதமானது என அந்த அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் இலங்கை கிரிக்கெட் நிறுவனத்துக்கும் தகவல் வழங்கப்பட்டிருந்தாலும், திட்டத்தை இடைநிறுத்த தீர்மானமான நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும் கூறப்பட்டுள்ளது.

மண்டைதீவு பகுதி உப்பு சதுப்பு நிலங்கள், சேற்று நிலங் கள், மற்றும் கடற்கரை ஈர நிலங்கள் அடங்கிய சூழலியல் ரீதியாக மிகவும் உணர்வுபூர்வமான பகுதியாக அடையா ளம் காணப்பட்டுள்ளது.

பருவமழை காலங்களில் இயற்கை வெள்ளம் தாங்கும் பகுதியாக செயல்படும் இப்பகுதியில் பெரிய அளவிலான கட்டுமானங்கள் மேற்கொள்ளப்படுவது வெள்ள அபாயத்தை அதிகரிக்கக்கூடும் எனவும், உள்ளூர் மீனவர் சமூகங்களின் வாழ்வாதாரத்துக்கும் பாதிப்பு ஏற்படக்கூடும் எனவும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

சுற்றுச்சூழல் சட்டங்களை கடுமையாக அமுல்படுத்தி, திட்டத்திற்கான தேவையான அனுமதிகள் பெறப்படும் வரை பணிகளை உடனடியாக நிறுத்த நடவடிக்கை எடுக்குமாறு வனவிலங்கு மற்றும் இயற்கை பாதுகாப்பு சங்கம் அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளது. (அ)

## அரசு மீது...

தெரிவித்தார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலின் போது மாகாணசபைத் தேர்தல் தொடர்பில் எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

“தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு மக்கள் மத்தியில் உள்ள செல்வாக்கு அதிகரித்துள்ளது. மிகுந்த நம்பிக்கையுடனேயே இதனை நான் அறிவிக்கின்றேன்.

மாகாண சபைத் தேர்தலின்போது இது தெரியவரும். நிச்சயம் நாம் தேர்தலை நடத்துவோம். கிழக்கு மாகாணத்திலும் வெற்றி பெறுவோம்.

மாகாண சபைத் தேர்தலுக்குரிய உரிய ஏற்பாடுகள் நடந்த பின்னர் உரிய காலத்துக்குள் அது நடத்தப்படும்.” -என்றார் பிரதி அமைச்சர். (அ)

## சர்வதேச சட்ட...

வெளிநாடுகளில் இருந்து சாட்சியங்களைப் பெறுவதற்கு “குற்றவியல் விவகாரங்களில் பரஸ்பர ஒத்துழைப்புச் சட்டத்தின்“ 13 ஆவது பிரிவைப் பயன்படுத்த அதிகாரிகள் தவறிவிட்டனர்.

இந்தச் சட்டத்தின் மூலம் பிரித்தானிய நீதிமன்றங்கள் அல்லது அதிகாரிகளிடமிருந்து அதிகாரபூர்வமாக சாட்சியங்கள் மற்றும் பயண ஆவணங்களைப் பெறமுடியும். அதை விடுத்து, தனிப்பட்ட முறையில் கடிதங்கள் அனுப்பி தகவல்களைக் கோருவது சரியான நடைமுறை அல்ல .

முறையான சர்வதேச சட்ட விதிகளைப் பின்பற்றாமல், முழுமையற்ற உள்நாட்டு சாட்சியங்களை மட்டும் நம்பியிருப்பது விசாரணையின் நம்பகத்தன்மையைக் குறைக்கும் - என்றார். (அ)

## தமிழர்...

வாய்ந்த இடத்தில் அமைந்துள்ளது. இலங்கையின் இந்த அமைவிடத்தைக் கைப்பற்றுவதற்காகப் பல வல்லரசுகள் போட்டிபோடுகின்றன. இவ்வாறானதொரு சூழலில் நாட்டில் ஸ்திரத்தன்மை என்பது மிகவும் அவசியமானது.

ஸ்திரத்தன்மை இல்லாத பட்சத்தில் வெளிநாட்டினரின் தலையீடுகள் மேலும் அதிகரிக்கும் எனவும் அவர் சுட்டிக் காட்டினார்.

நாட்டின் ஸ்திரத்தன்மையைப் பாதுகாக்கவேண்டுமானால், தமிழ் மக்களின் அரசியல் பிரச்னைக்குக் கட்டாயமாகத் தீர்வு காணப்பட வேண்டும் எனவும், தமிழ் மக்களின் இனப்பிரச்னை இன்றும் தீர்க்கப்படாமல் தொடர்கிறது என்ற நிலை மீண்டும் உறுதிப்படுத்தப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அரசியல் தீர்வு எட்டப்படாத படசத்தில், தமிழ் மக்கள் தங்களது அபிலாஷைகளைக் கைவிட்டு, இது ஒரு சிங்கள பௌத்த நாடு என்பதை ஏற்றுக்கொள்ளவேண்டிய நிலைக்குத் தள்ளப்படுவார்கள் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## மாகாண...

அளிக்கவேண்டும் எனவும் அவர் கோரினார்.

அரசு தேர்தலைத் தாமதப்படுத்தாமல், இவ்வருடத்துக்குள் அதனை விரைந்து நடத்துவதற்குத் துரித நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு புதிய முறைமையா அல்லது பழைய முறைமையா என்பது குறித்துத் தெரிவுக்குழுவை அமைத்து விவாதிப்பது தேவையற்ற காலதாமதத்தையே ஏற்படுத்தும். இவ்வாறான பொறிமுறையின் ஊடாகத் தேர்தலை மேலும் தள்ளிப்போட அரசு முயற்சிப்பதாகவே மக்கள் கருதுகின்றனர்.

மக்களின் ஜனநாயக உரிமையை உறுதிப்படுத்தும் வகையில், நிலுவையிலுள்ள மாகாண சபைத் தேர்தலை இவ்வருடமே நடத்துவதற்கு அரசு முன்னுரிமை அளிக்க வேண்டும். இதற்கான சட்டச் சிக்கல்கள் இருப்பின், அவற்றை விரைவாகத் தீர்த்துத் தேர்தலுக்கான சூழலை உருவாக்க வேண்டியது அரசின் பொறுப்பாகும்-என்றார். (அ)

## அரச வைத்தியசாலை...

இதனால் சில மருத்துவமனைகள் அடிப்படை உயிர் காக்கும் சிகிச்சைகளை வழங்குவதற்குக் கூட சிரமப்படுகின்றன.

இது குறித்து கருத்து தெரிவித்த மருத்துவ மற்றும் சிவில் உரிமைகள் வைத்திய சங்கக் கூட்டமைப்பின் தலைவர் மருத்துவர் சமல் சஞ்சீவ, ”அரச மருத்துவமனைகளில் மருந்துகள் கிடைப்பது நிச்சயமற்றதாக உள்ளது.

தட்டுப்பாடுகள் திடீரென ஏற்பட்டு பல நாட்கள் நீடிப்பதால், நோயாளர்களே அதன் பாதிப்புகளை எதிர்கொள்கின்றனர்” என்றார்.

கண் அறுவைச் சிகிச்சைக்கு முன்னும் பின்னும் பயன்படுத்தப்படும் மருந்துகள் கடுமையான தரக் கட்டுப்பாடுகளைக் கொண்டிருக்கவேண்டும் என்று குறிப்பிட்ட அவர், புதிதாக கொள்வனவு செய்யப்பட்ட சில மருந்துகளில் பரிந்துரைக்கப்பட்ட அளவை விட அதிகப்படியான “சுயாதீனத் துகள்கள்“ காணப்படுவதால் அவை அறுவைச் சிகிச்சைக்குப் பொருத்தமற்றவை என எச்சரித்தார்.

தேசிய மருந்துகள் ஒழுங்குமுறை அதிகார சபையின் தன்னிச்சையான முடிவுகள் அரச மருத்துவமனை அமைப்பில் கண் மருந்துகளின் தரத்தை பாதிக்கலாம் என அவர் எச்சரித்துள்ளார்.

கொள்வனவு நடவடிக்கைகளின்போது நிபுணத்துவ மருத்துவர்களின் பரிந்துரைகள் புறக்கணிக்கப்பட்டுள்ளதாகவும், இது நோயாளிகளின் பாதுகாப்பில் கடுமையான கவலையை ஏற்படுத்துவதாகவும் அவர் கூறினார்.


இருப்பினும், பெரும்பாலான தட்டுப்பாடுகள் நிவர்த்தி செய்யப்பட்டுள்ளதாகவும், அவசர உள்ளூர் கொள்வனவுகளுக்குப் போதிய நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

## பயங்கரவாத சட்டத்தை நீக்க வலியுறுத்தி வடமராட்சியில் கையெழுத்து போராட்டம்



யாழ்ப்பாணம், பெப். 22

நாட்டில் நடைமுறையில் உள்ள பயங்கரவாதத் தடைச் சட்டத்தை அரசு உடனடியாக இரத்துச் செய்ய வேண்டும், பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்ட வரைவை மீளப்பெறவேண்டும் என வலியுறுத்தி, யாழ். பல்கலைக்கழகச் சமூகம் கையெழுத்துப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளது.

நேற்று முன்தினம் முதல் இடம்பெற்று வரும் போராட்டம் நேற்று வடமராட்சி - பருத்தித்துறை நகரில் இடம்பெற்றது.

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை மக்கள் இயக்க ஒருங்கிணைப்பாளர் தவத்திரு வேலன் சுவாமிகள், குரல் அற்றோரின் குரல் அமைப்பு ஒருங்கிணைப்பாளர் எஸ்.கோமகன், தமிழர் கலைமன்ற இயக்குநர் எஸ்.கமலகாந்தன் உட்பட பொது அமைக்களின் பிரதிநிதிகள் இணைந்து கையொப்பம் பெறும் நடவடிக்கையில் ஈடுபட்டனர். (அ)

## மாகாண சபைத் தேர்தலை விரைவில் நடத்தவேண்டும்!

### பொதுஜன பெரமுன மீண்டும் வலியுறுத்து

கொழும்பு, பெப். 22

மாகாண சபைத் தேர்தலை விரைவில் நடத்துமாறு பொதுஜன பெரமுன கட்சி மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

கொழும்பில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அக்கட்சியின் உறுப்பினரான முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ குட்டியாராச்சி இந்த வலியுறுத்தலை விடுத்தார்.

"பொதுஜன பெரமுன கட்சிக்கு மக்கள் மத்தியில் செல்வாக்கு அதிகரித்துவருகின்றது. எனவே, மாகாண சபைத் தேர்தலை நடத்துமாறு அரசாங்கத்துக்கு சவால் விடுக்கின்றோம்.

மாகாணசபைத் தேர்தல் நடத்தப்பட்டால் அதில் பொதுஜன பெரமுன கட்சி நிச்சயம் வெற்றிபெறும்." -எனவும் திஸ்ஸ குட்டியாராச்சி குறிப்பிட்டார். (அ)

## இறைச்சி, முட்டை விலை அதிகரிப்பு

கொழும்பு, பெப். 22


நாட்டில் முட்டை மற்றும் கோழி இறைச்சியின் விலைகள் அதிகரித்துள்ளதாக நுகர்வோர் குற்றம் சுமத்துகின்றனர். சாதாரண சந்தையில் முட்டை ஒன்று 35 ரூபாவுக்கும் அதிகமான விலைக்கு விற்பனை செய்யப்படுகின்றது.

இதன்படி, பல்பொருள் அங்காடிகளில் ஒரு முட்டை 55 ரூபா முதல் 60 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகின்றது. ஒரு கிலோ கிராம் கோழி இறைச்சி சந்தையில் 1300 ரூபாய் என்ற அதிக விலைக்கு விற்பனை செய்யப்படுகின்றது.

விநியோகத்தர்கள் விலைகளை அதிகரித்துள்ளதால் தாமும் விலையை கூட்டவேண்டியதாகியுள்ளதாக வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

தற்போது சந்தையில் கிடைக்கும் கோழி இறைச்சி மற்றும் முட்டை விநியோகத்தில் ஓரளவு தட்டுப்பாடு நிலவுவதாகவும் வியாபாரிகள் குறிப்பிட்டனர். (அ)

# வடக்கு - கிழக்குக்கு அதிகாரங்களை கையளிப்பதற்கு ஜே.வி.பி. விரும்பாது!



### கலாநிதி விக்னேஸ்வரன் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், பெப். 22

இணைந்திருந்த வடக்கு-கிழக்கு மாகாணங்களை பிரிப்பதற்கு முன்நின்ற ஜே.வி.பி. என்ற தற்போதைய தேசிய மக்கள் சக்தியினர் வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கு அதிகாரங்களைக் கையளிப்பதற்கு விரும்பமாட்டார்கள் என இணைந்த வடக்கு கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரின் செயலாளர் கலாநிதி விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

ஆளுநரின் கீழ் உள்ள வடக்கு மாகாண சபைக்கு தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்களை நிழல் அமைச்சர்களாக நியமித்தமை தொடர்பில் குறிப்பிட்டபோதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- இணைந்திருந்த வடக்கு - கிழக்கு மாகாணங்களை பிரித்த ஜே.வி.பியினர் தற்போது தேசிய மக்கள் சக்தியாக ஆட்சி அதிகாரத்தில் உள்ளார்கள்.

அவர்கள் ஆட்சிக்கு வருவதற்கு வழங்கப்பட்ட வாக்குறுதிகள் ஒருபுறம் இருக்க வடக்கு - கிழக்கு மாகாண சபையை அதிகாரம் உள்ள ஒரு சபையாக செயல்படுவதற்கு அவர்கள் விரும்பமாட்டார்கள் என்பது தெரிந்த விடயம்.

தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வந்த பின் மாகாண சபை முறைமை தொடர்பில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மற்றும் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் ஆகியோருக்கு கடிதம் அனுப்பி இருந்தேன். இன்று வரை பதில் கிடைக்கவில்லை.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா மற்றும் ரணில் விக்கிரமசிங்க காலத்தில் மாகாண சபை முறை தொடர்பில் ஆலோசனை வழங்கும் குழுவில் நான் அங்கம் வகித்தேன்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை முன்னாள் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுடன் கொழும்பில் சந்தித்தபோது. மாகாணங்களில் இருந்து மீள மத்திக்கு பெறப்பட்ட அதிகாரங்களை திரும்ப வழங்கவேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்தோம்.

அவர் நிபுணர் குழு ஒன்றை நியமிப்பதற்கு பெயர்களைப் பரிந்துரைக்குமாறு கேட்டிருந்தார். ஆனால் அவருடைய காலத்தில் அதனை நிறைவேற்ற முடியாமல் போனது.


தற்போது தேசிய மக்கள் சக்தியினர் மாகாண அதிகாரங்கள் தொடர்பில் பேசுவதற்குக்கூட விருப்பமில்லாதவர்களாக இருப்பதால் மாகாண சபைத் தேர்தல் ஒன்றை நடத்துவார்களா என்ற சந்தேகம் வலுவாக உள்ளது.

மாகாண சபைத் தேர்தலை நடத்த விருப்பம் இல்லாத காரணத்தினால் வடக்கு மாகாணத்துக்கு தங்கள் பாராளுமன்ற உறுப்பினர்களை நிழல் அமைச்சர்களாக உத்தியோகப்பற்றற்ற முறையில் செயற்படுத்தப் பார்க்கிறார்கள்.

ஆட்சி அதிகாரத்தில் உள்ள தேசிய மக்கள் சக்தியினர் மாகாண அதிகாரங்களை வழங்காது தமது கட்டுப்பாட்டில் மாகாண நிர்வாகங்களை நடத்துவதற்கு எத்தனிப்பது அரசியலமைப்பை மீறும் செயலாகும் - என்றார். (அ)

### வடமராட்சியில் காணாமல் ஆக்கப்பட்ட

# ஊடகவியலாளர் இராமச்சந்திரனுக்கு நீதி கோரி கவனயீர்ப்புப் போராட்டம்!



யாழ்ப்பாணம், பெப். 22

இலங்கை இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட வடமராட்சி - கரவெட்டியை சேர்ந்த ஊடகவியலாளரும் ஆசிரியருமான சுப்பிரமணியம் இராமச்சந்திரனுக்கு நீதி கோரி பருத்தித்துறையில் நேற்று கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

யாழ் வடமராட்சி ஊடக இல்லத்தின் ஏற்பாட்டில் கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

ஊடகவியலாளர் சு.இராமச்சந்திரன் காணாமல் ஆக்கப்பட்டு 19 ஆண்டுகள் கடந்துள்ள நிலையில், அவர் உள்ளிட்ட ஊடகவியலாளர்கள் காணாமல் ஆக்கப்பட்ட சம்பவத்துக்கும் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கும் நீதி கோரி இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

வடமராட்சி ஊடக இல்லத்தின் செயற்பாட்டாளரும் மூத்த ஊடகவியலாளருமான மு.மதிவாணன் தலைமையில் இடம்பெற்ற போராட்டத்தில் இராமச்சந்திரன் கைது செய்யப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட சம்பவம் ஆற்றுகை செய்யப்பட்டது.

இதன்போது ஊடகவியலாளர்கள், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள், தவத்திரு வேலன் சுவாமிகள், பருத்தித்துறை நகர பிதா வின்சென் டீ போல் டக்ளஸ் போல், வல்வெட்டித்துறை நகர பிதா எம்.கே.சிவாஜிலிங்கம், கரவெட்டி பிரதேச சபை உறுப்பினர் தவிசாளர் தயாபரன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் செ.கஜேந்திரன், ஜனநாயக போராளிகள் கட்சித் தலைவர் சி.வேந்தன் குரலற்றவர்களின் குரல், வல்வெட்டித்துறை பிரஜைகள் குழு, பருத்தித்துறை வர்த்தகர் சங்கம் உள்ளிட்ட பொது அமைப்புகள், சமூக மட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள், உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்கள், அரசியல் கட்சியினர் எனப் பலரும் பங்கேற்றனர்.(அ-02)

## குடும்ப நல உத்தியோகத்தர்கள் மன்னாரில் நேற்று போராட்டம்!

மன்னார், பெப். 22

தமது பாதுகாப்பை உறுதிப்படுத்தக் கோரி, மன்னார் குடும்ப நல உத்தியோகத்தர்கள் ஒன்றிணைந்து நேற்று போராட்டத்தை முன்னெடுத்தனர்.

மன்னாரில் கடமையாற்றும் குடும்பநல உத்தியோகத்தர் ஒருவர், கடந்த கடந்த 14 ஆம் திகதி கடமைக்கு சென்றவேளை, அவர் இடைமறிக்கப்பட்டு, அவரிடம் இருந்து பல இலட்சம் ரூபா பெறுமதியான தங்க சங்கிலி அபகரிக்கப்பட்டதுடன், அச்சுறுத்தலும் விடுக்கப்பட்டது.

கடமை நேரத்தில், குறித்த குடும்ப நல உத்தியோகத்தர் வழிமறிக்கப்பட்டு உடைமைகள் அபகரிக்கப்பட்டு கொலை மிரட்டல் விடுக்கப்பட்ட சம்பவத்தை கண்டித்தும், குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய நபர்களை கைது செய்யக் கோரியும் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

குடும்ப நல உத்தியோகத்தர்கள் நேற்று காலை 9.30 மணியளவில், மன்னார் பொது சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் இருந்து மன்னார் பஜார் பகுதி வரை பதாகைகளை ஏந்தியவாறு ஊர்வலமாக சென்று மன்னார் மாவட்ட செயலகத்துக்கு முன்பாக, அமைதியான முறையில் கண்டனப் போராட்டத்தை முன்னெடுத்தனர். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 22.02.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org